ந—1—6

[illegible] No. M 3985. 1938 மார்ச் 1.

(MAHUTHARIVU'-(REASON)

ஜூன் 10.

[illegible]

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடம் பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை

	பக்கம்.
தமிழ் ராஜ (பாட்டு) ந. ஆறுமுகம் பிள்ளை	1
பகுத்தறிவு (சார்லஸ் டி. கோர்ஹாம்)	2
ஆரியன்கண்டாய் தமிழன் கண்டாய் (ஆவுளையன்)	17
கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு	21
குற்பார்த்தல் (எம். சிங்காரவேலு)	26
ஆலயிடமான காரியங்கள்	31
கன்னமகளுக்கு கடவுள் பொறுப்பாளியானால் தாயைகளுக்கு யார் பொறுப்பாளி? (ஜீன் மாஸ்பியர்)	40
சுயமரியாதைக்காரர்கள் சொல்லும் கடவுள் (கைவல்யம்)	42
யாத்திரையும், புண்ணியமும். (திருப்பானார்)	48
ஆண் பெண் சமத்துவம்.	52
ஜாதிவாலாற்றுண்மை (எஸ். மகிபாலன்)	60

பாரதி.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. | ஈரோடு 1938 பிப்ரவரி 1. | இதழ் 10.

தமிழ் முரசு.

(தாராபுரம் நா. ஆறுமுகம் பிள்ளை.)

கட்டளைக் கலித்துறை.

எத்திக்கும் போற்றப் பகைவோர்கள் நெஞ்சத் திடியிடிப்பப்
புத்திக்கு நன்மை உதவாத இந்தி புகாவகையே
சித்திக்க வேபுரிந் தெங்கும் முழங்கிடும் தேனமுதாத்
தித்திக்கும் இன்சொல் தமிழ்த்தாயின் வீரச் செழுமுரசே.

முன்னாளில் நங்கள் தமிழ்வேந்தர் தம்மை முனிந்துரைத்த
அன்னார்கள் அந்தோ வடநாட்டு வேந்தர் அணிமுடியீங்
கென்னாகு மோவென்னப் பத்தினிக் காங்கல்லை ஏற்றிடுங்
முன்னாக நின்று தமிழ்த்தாய் முரசம் முழங்கியதே. [கால்

மடலேறும் வேங்கை தனைக்குத்திக் கொன்ற வளர்நுதிக்
கோட்
டடலேற்றுத் தோலுரி சீவாது போர்த்தே அசைத்ததிக்கி
குடலே நடுங்கி வெருண்டோடி ஆர்க்கும் குரைகடலின்
திடலேறு சீர்த்திக் தமிழ்த்தாயின் வீரச் செழுமுரசே.

மதக்குரோதம்.

(சார்லஸ் T. கோர்ஹாம்)

மதமும், மனமும்.

அன்பின் மதம் என்று அரற்றும் மதத்தினது செய்கைகளிலெல்லாம் செப்பரிய மாசு என்னவெனின், தன்னுடைய கொள்கையினின்றும் விதியாசப்பட்ட அபிப்பிராயங்களை அது கட்டுப்பாடான கொடுமையுடன் நசுக்கி வந்ததேயாகும். ஒரு பக்கத்திலே, எவராலும் மறுக்கவொண்ணாதபடி தெய்வீகச் சக்தியைப் பெற்றுள்ளதாகக் கூறிக்கொண்டும், மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், எல்லையில்லாத ஆதிக்கம் செலுத்திக்கொண்டும் அது (மதம் என்பது) இருந்து வந்தது. மற்றொரு பக்கம் மனிதனது மனமானது மென்மேலும் தெளிவான விளக்கத்தையும், மிகவும் விரிந்த அறிவையும் பெறும் பொருட்டு பயனற்ற முயற்சிகள் செய்துகொண்டும் வந்தன. மனத்தினுடைய செயல்களைப் புகுத்தறிவைக்கொண்டும், வாக்குவன்மையாலும், தடுக்க ஒருவரும் முற்பட்டிலர். சித்திரவதையே உத்தமமான வழி என்று அதைக் கையாண்டு வந்தனர். மதத்தினுடைய கட்டுப்பாட்டினால், மக்களது முன்னேற்றத்திற்கும், சுகத்திற்கும், பயங்கரமான பாதகம் ஏற்படும் விதமாக மனிதனின் மனமானது மழுக்கப்பட்டுத்தான் வந்திருக்கின்றது. ஆனால் இயல்பாகவே இத்தகைய அறிவு மழுப்பு அதிக காலம் நீடித்திருக்க முடியாது. பெரும்பாலான மக்களுக்கு ஆழ்ந்த சிந்தனை என்பது முடியாத காரியம்; ஆனால் ஒரு சிறு பான்மையாருக்குச் சிந்தனை என்பது உயிருக்கு இன்றியமையாத சுவாசம் போன்றது.

சிந்தனைக்காரரது காரியத்தைச் சிதைத்தல் என்பது முடியாது. "வேத" வாக்கியத்திலேயே கூறியுள்ளபடி இந்த உடலைத் துணித்தல் முடியும். ஆனால் எண்ணங்களைச் சிதைத்தல் இயலாது. இன்று ஒருவர் இறந்தால்

காலாயினம் அநேக எண்ணங்கள் வேறு பலர் உள்ளத்தில் மீண்டும் உயிர் பெற்று எழும். மதமானது முதன் முதலாகவே சில உண்மைகளை ஊழிகாலம்வரைக்கும் நிலைத்திருக்கும் உண்மைகள் என உபதேசித்திருந்த காரணத்தாலும், புதிய அபிப்பிராயங்கள் அவற்றைச் சிதைத்துச் சீர்குலைக்கும் தன்மையனவாதலாலும், அவைபனைத்தையும் கண்டித்து மதம் எப்போதும் அந்நியமே வந்தது. இன்னதுதான் என்று சரிவரக்கேளாமலிருந்துங்கூட, நூதனமான மத அபிப்பிராயங்கள் அனைத்தும் உடனே பயபக்தியற்றவை எனவும், பாவகரமானதினவும் கண்டிக்கப்பட்டு வந்தன. "கடவுளால்" நிகழ்த்தப்பட்ட நன்கொடை என்று கருதப்படும் இந்தப் பகுத்தறிவை வெறுத்தல், மோசமும், காசமும் விளைவிக்கக் கூடிய பழக்கம் அல்லவா? இத்தகைய மனப்பான்மையின் தீமையானது பதினெட்டாம் நூற்றாண்டிலே "ஸ்பிரிட்ஜீபன்" என்னும் உபன்யாசகர் ஒருவர் அறிவுத் தற்பெருமை செய்துமிகவும்படியாக உலகத்துள்ள வார்த்தைகளால் கண்டு புலப்படும். அவர் கூறுகின்றார்; "உலகத்திலுள்ள தூர்ச்செயல்களையும், தீமைகளையும் ஒரு கனிய பத்துபோல் உருண்டையாக உருட்டினாலும், அதன் பருமனைக்காட்டிலும் கடவுள் கம்பிக்கையின்மை (நாஸ்திகம்) என்பதின் பருமன் மிகப் பெரியதாகும்."

மக்களை, அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களோடு காகத் தண்டிக்கும் பழக்கம் முதன் முதலில் எவ்வாறு மனிதனுக்கு ஏற்பட்டது? ஒரு தனிப்பட்ட மனிதனோ அல்லது ஒரு கூட்டத்தாரோ தப்பான அபிப்பிராயம் கொண்டிருப்பவரை வேறொருவரைத் தண்டிக்க என் முற்படல் வேண்டும்?

கிறிஸ்துவ மதமானது, முன்புமட்டுமேயன்றி, தற்காலத்திலுங்கூட "சமபநிச்சயம்" என்பது ஒன்று உண்டு என்றும் தனது அதிகாரத்தின் பேரிலேயே சாற்றி வருவதுமட்டுமல்லாமல் அவ்வாறான நிச்சயமான மதம்தானே என்றும் வாதாடியும் வருகின்றது. எனவே கடவுளால் ஆக்கப்பட்டது என்று கருதப்பட்டதன் உண்மைகளுக்கு ஏதாவது ஒரு வகையில் மாறுபட்டுள்ள அபிப்பிராயங்கள் தோன்றின் அது அவற்றை நசுக்குதல் சரி என்று நினைக்கலாயிற்று. கடவுளானவர் தனது உயரிய உறுதியான உண்மைகளை ஒரு கூட்டத்திற்கு மட்டும் உதவி எனைய மக்களுக்கு மறுத்துள்ளார் என்னும் பிரச்சினை மிகவும் விவாதிக்கவும், ஆட்சேபிக்கவும் இடம் கொடுக்கும் தன்மையதாகையால், அதை

இப்போது ஒரு பக்கம் விட்டுவிடுவோம். இருந்தாலும் மேற்கூறிய வார்த்தைகள் உண்மையாயிருக்குமேயானால், எனைய மக்களைக்காட்டிலும் கிறிஸ்தவர்கள் அதிக நற்குணமும் நல்லறிவும் படைத்தவராய் இருக்கவேண்டுமல்லவா? ஆனால் இரண்டாயிர வருட அனுபவத்திற்குப் பின்னும் உலகம் கிறிஸ்துவ மதத்திற்கு அப்பெருமையை அளிக்கத் தயாராயில்லை.

காலப்போக்கு—மதம் ஏன் சீர்திருந்தக்கூடாது?

தற்காலத்தில் கடவுள் நம்பிக்கையின்மை அல்லது கடவுள் விஷயத்தில் அசட்டைத்தனம் வெகு அதிகமாக உள்ளது என்பதை எல்லாசமய வாதிகளும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். அவர்கள் அதற்குக்காரணம் "தற்காலத்தின் போக்கு" என்கின்றனர். மதக்குரோதம் இருந்துவந்தற்கும் அதே காரணத்தைக்காட்டுகின்றனர். ஆனால் இக்காரணத்தில் சிறிது உண்மை கிடக்கின்றது. ஆனால் அக்காரணம் மதத்தை மன்னிக்கத்தக்கது என்றால் அது தற்கால சந்தேக உணர்ச்சியையும் மன்னிக்கும் பாற்றது. ஆனால் உண்மையிலே, அது மதத்திற்குச் சாதகமாக விருக்கின்றதா? "காலத்தின் போக்கு" என்று கழறின் அது ஒரு காலத்தில் மக்கள் நினைக்கும் வகையையன்றி வேறெதையும் குறிப்பிடாது. ஒருக்கால் பொதுவான அறியாமை தாண்டவமாடும் காலத்திலே மக்கள் மனப்பான்மை மதசம்பந்தமானதாகும் என்றும், அதனின்றும் கொஞ்சம் பேர்கூடத் தப்புதல் அரிதென்றும் கூறலாம். ஆனால் ஒருகாலத்தின் போக்கு ஒழுக்கத்தில் குறையுடையதாகுமானால் அதனால் கடவுளால் ஆக்கப்பட்ட உண்மை மதம் ஏன் தாழ்த்தப்பட வேண்டும்? அம்மதம் ஏன் அக்குற்றங்களைக் களைதல் கூடாது? அத்தகைய மதம் மக்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்க ஏற்பட்டிருப்பின் அது அடிக்கடி மோசமானபடி தடை செய்யப்படாமல், தன் காரியத்தைத் கிரமமாக வல்லவா செய்து கொண்டு வந்திருக்கவேண்டும்? மத்திய காலங்களிலே காலத்தின் போக்கு மிகவும் விபரீதமாக மதசம்பந்தப்பட்டிருந்தது. ஆதலால் தான் பைபிளில் கூறப்பட்டிருந்த நிகழ்ச்சிகளுக்கும் குறிகளுக்கும் மனத்துக்குத் தோன்றிய பொருள்கள் கொடுக்கப்பட்டு வந்தன. இவைகளில் பலவற்றை டாக்டர் ஓயிட் என்பவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். அவையனைத்தும் மதிகெட்ட மாந்தரின் பிதற்றலைப் போன்றிருக்கின்றன. பொதுவாகவே அறிவு விளக்கம் ஏற்பட்டுள்ள காலங்களில் மதக்கோட்பாடு

களை அறவே விட்டொழிக்காவிட்டாலும், மக்கள் அவற்றின் கொடுமையான குணங்களையாவது களைவது இயல்பு. ஆனால் மத்திய காலத்திய மதக்கொடுமை ஏற்படக் காரணம் தான் என்ன? உண்மையைக் காணுங்கால் மனிதனுக்கு வெவ்வேறு தோற்றங்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். இதற்குக் காரணம் பலவுண்டு. ஆனால் மிகவும் முக்கியமான காரணம் கிறிஸ்து மதமேயாகும். தனக்கு முன்னதாகவே இருந்து, தீய உதாரணங்காட்டிப் போந்த டீஷியஸ், டயக்ளீஷியன் என்பவர்களைப் பின்பற்றியும், தான் வெறுப்பதை ஒழிக்கும் மனித சுபாவத்தைப் பின்பற்றியும், முதல் கிறிஸ்துவச் சக்ரவர்த்தியாகிய கான்ஸ்டன்டைன் என்பவர் மதக்குரோதத்தைக் கொண்டுவந்தார்.

புரோகிதர் பாவம் துடைக்கும் வழி.

தனக்கு முந்தினவர்கள் ஆரம்பித்த கிட்டத்தை தியோடோஷியஸ் என்பவர் பெருக்கினார். கிறிஸ்துவப் பாதிரிகளுள் சிலரும், அர்ச் அகஸ்டைன் என்பவரும் மிக அபாயகரமான அளவுக்கு மதக்குரோதத்தை வளர்த்துவிட்டனர். அதன் பின் வந்தவை யெல்லாம் அதிகாரத்துர்ப் பிரயோகத்தின் பயனாய் விளைந்தவைகளேயாகும். ஆனால் கிறிஸ்து மதத்தின் உண்மையான இயல்பைச் சரியாக உணராததால் இது ஏற்பட்டது என்பதை மட்டும் கூறித்தான் ஆகவேண்டும். இருந்தாலும், சாதாரணமாகக் கிறிஸ்துவுக்குக் கூறப்படும் நற்குணங்கட்கு முரணாகவே, புதிய வேதத்தில் சிற்சில பாகங்கள் இத்தகைய மதக்குரோத உணர்ச்சிக்கு இடம் கொடுப்பதாக இருகின்றன. தீயவை புரிவோர் இனிவரும் உலகத்தில் கஷ்டப்படப் போவதாகக் கூறும் பாகங்கள் போன்ற வாக்கியங்கள் ஒழுக்க இழுக்குடனும், ஒன்றுக்கொன்று மாறுபட்டும் பைபிளிலிருத்தல் அக்காலத்தில் மதக்குரோதத்தை உண்டுபண்ணும் பாற்றதே. மற்றும் அவைகள் கடவுள்தன் அருள் பெற்றது என்று கருதப்படும் மதத்திற்கே கீக்கரிய அழுக்குகள் ஆகும் என்று தற்காலத்தில் ஒவ்வொருவருக்கும் புலப்படும். உண்மையாக "பைபிள்" என்னும் ஒரு புத்தகத் தொகுதியானது கடவுளின் அருள் வாக்கு என்று கருதப்பட்டும் நம்பப்பட்டும் வந்ததால்தான் உலகத்தில் மதக்குரோதம்முதலியன ஏற்படலாயிற்று. இதை யாரேனும் மறுப்பரேல் அது குறும்புத்தனத்தைப் பார்க்க மறுக்கும் குருட்டுத்தனமேயாகும். அவர்கள் எத்தகைய தண்டனைக்கும் ஏற்றவரும் ஆவர். கடவுளே இணிக்கொள்

ளப்போவதாகக் கூறப்படும் கோபத்தை, தாமே கொண்டு மக்களை நசுக்குவதற்குங்கூட மதக்குரோதிகள் யோசிப்பதில்லை. ஆனால் இதை ஈசரீக முற்ற மக்கள் மூடநம்பிக்கை என்று எண்ணி நகைப்பர். ஆதலால் தான், வாளும், சித்திரவதைக் கூடமும், குண்டர மாரும் கடவுளின் பிரதாபத்தை முன்னிட்டு கையாளப்பட்டு வருகின்றன போலும்!

பொதுவாகவே இத்தன்மையதான கொடுமைகள் சிற்சில சமயங்களில் தக்க காரணத்தோடு மட்டுமன்றி மேச்சத்தகுந்த காரணங்களுக்காகவும் ஆற்றப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. "ஹூயின்ஸ்" என்பவர் "மதக்கொடுமைகள்" என்னும் தனது அரிய நூலிற் கூறியுள்ளார்: "மத்திய காலங்களில் உண்டாகிய மதக்கொடுரச் செயல்கள் அனைத்தும் புரோகிதர்களுக்கு சாதாரண மனிதரின் ஆன்மாக்களின்பால் ஏற்பட்ட அன்பினால் தோன்றியவை யல்லவென்றும், ஆனால் அது ஏற்படக்காரணம் புரோகிதர் தமது லௌகீக வாழ்க்கைச் சௌகரியங்களைச் சம்பாதித்துப் பெருக்கிக்கொள்ள முயன்றதே என்றும் அறிய இடம் கொடுக்கின்றது." எனவே நியாயம் என்னும் எண்ணத்தைச் சீர்குலைத்து பாவம் புரிபவனுக்கு இனி ஏற்படப்போகும் நரகத்தைத் தடுக்கும்பொருட்டு அவனது உயிரையே பிரித்து விடுதல் நன்று என்று நம்பும் எண்ணத்தை ஏகமனதாக அனைவரும் கண்டித்தேதான் ஆகவேண்டும். இத்தகைய காரணம் மோசடியானதாகவும், உண்மைக காரணத்தை மறைக்கும் பாற்றதாயும் இருக்கின்றது. அன்றியும் அது உண்மையாகவே, இருந்திருக்குமானால் அது மனிதனது நாகரீகத்திற்கும், சுகத்திற்கும் பெருந்தடையன்றோ? மதவாதிகள் சிற்சில வேளைகளில் கூறுவதென்னவென்றால் "நாங்கள் ஒருவருக்கும் தீங்கிழைக்க எண்ணவில்லை. ஆனால் அவர்களது பாவத்தையே போக்க முயலுகின்றோம்" என்பதே. மதவாதிகள், பாவம் என்பது உயிருள்ள ஓர் பிராணியால் செய்யப்படுவதால் உயிரைக் கொல்லாமல் பாவத்தை மட்டும் தொலைத்தல் முடியாது என்னும் உண்மையை உணர்ந்திலர். இதைவிட நாகரீகமான மார்க்கங்கள் இருந்த போதிலும், மதமானது மதக்குரோதக்காரர்களுக்கு அவற்றைப் போதிக்கவில்லை. மற்றும் பைபிளில் கூறப்பட்ட கொடுமைகளும் இவர்கள் செய்யும் கொடுமைகட்குச் சம்மந்தமளிப்பனவாயின. கடவுளுடைய சொந்த அபிப்பிராயத்தை அக்காலம் ஒருவரும் வேண்டவுமில்லை, ஒருவரும் இதுதான்

என்று எடுத்துக்கூறவுமில்லை. ஆனால் அதுமட்டும் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்குமேயானால் அது கடவுளின் பக்தர்களின் அபிப்பிராயத்தை ஓட்டியதாகவே தான் இருந்திருக்கும். இவ்விதமாக மனிதனின் மனப்புழுக்கமானது நூற்றாண்டு நூற்றாண்டுகளாகியும் அளவிடற்கரும் தீயவை பயந்து நீடித்து வரலாயிற்று.

சரித்திர பூர்வமான சித்திர வதைகள்.

மதசம்பந்தமான அபிப்பிராயங்களை நசுக்கும் பொருட்டு வன்மையோடு கையாளப்பட்ட திட்டங்களில் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுவோம். பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே, டாமினிக் என்னும் ஒரு ஆவேசங்கொண்ட கத்தோலிக் "குரு"வால் 'இன்க்விசிஷன்' என்னும் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மூன்றாவது ஹானியஸ் என்னும் பெரும் பாதிரி ஒருவர் 'வேத' ஆதாரவைக்கொண்டு தன்னின் வேறு படுபவரை தெருப்பிலிட்டு வேகவைக்கலாம் என்று ஏற்படுத்திய சட்டமும் பயனற்றதாகி விடவே, அதன் பின்னர் வந்த மூன்றாவது இன்னஸெண்ட் என்னும் போப் 1216-வது ஆண்டிலும், ஒன்பதாவது கிரிகிரி என்பவர் 1233-வது ஆண்டிலும், பிரான்சின் தென்பாகத்தில் பெருகி வந்த சமாதானமும், ஆனால் சமய விரோதமும் கொண்ட இளநங்கரீகத்தைத் தகர்த்தெறிய பல சட்டங்கள் இயற்றினர். டூலூஸ் என்பதை ஆண்ட ரேமாண்டு என்பவர், தான் உண்மையான கத்தோலிக் பக்தராயிருந்தும் தனது சமய விரோதிகளான குடிகளை நசுக்காமல் இருந்த குற்றத்திற்காக ஜாதி மதப்பிரஷ்டம் செய்யப்பட்டார். இதற்குப்பின் இவருடைய கதி பின்னால் வருபவர்க்கு ஆதாரமாய் விளங்கிற்று. பதின்மூன்றாம் நூற்றாண்டின் சரி பகுதிக்காலத்திற்குள் "தூயகிலையம்" என்பது ஸ்திரமாக ஏற்படுத்தப்பட்டுத் தன் வேலைகளையும் தீவிரமாக செய்தும் வரலாயிற்று. மதத்திற்கு மாறுபடுதலே மாபெருங் குற்றம் என்றும், அக்குற்றத்தை எவ்வாற்றானும் களைந்தெறிதலே தமதுகடமை என்றும் சமயவாதிகள் கருதி வந்தனர். நீதி ஸ்தலங்களில் அநியாயமாகவும் அக்கிரமமாகவும் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு விரோதமாக சாக்ஷியம் ஏற்படுதல் போன்ற தீமைகள் நடத்தலுக்கு மதமானது சம்மதித்தும், சாடையாய் இருந்து வந்ததுமட்டுமல்லாமல், மதக்குருக்கள்கூட அவைகளைக்கையாண்டும் வந்தனர். அத்தகைய கொடுமைகளை இழைப்பதின் நோக்கம் எப்படியாவது ஒருவனைத் தன் குற்றத்தை

பகுத்தறிவு.

ஒப்புக்கொள்ளச் செய்தல் என்பதே தவிர, உண்மையை உணர்தல் வேண்டும் என்பது அல்ல. ஆதலால் எவ்வளவு தூரம் ஒருவன் உண்மையை ஒப்புக்கொண்டாலும் அவன் மன்னிக்கப்படுதல் என்பது மட்டும் நிச்சயமில்லை. 1252-வது வருடம் ஏற்படுத்தப்பட்ட ஒரு போப்பின் கட்டளைப்படி சித்திரவதை என்பது வெளிப்படையாகவே ஒரு தண்டனையாக்கப்பட்டிருந்தது. இவைகளை அறிவு இல்லாத பல சமூகங்கள் மறுக்காமல் இருந்தபோதிலும் (இவ்வாறிருப்பதைக் கண்டு மத பக்தர்கள் மகிழ்வதுண்டு) சில வேளைகளில் இவற்றிற்கு எதிர்ப்புகள் ஏற்படுவதும் உண்டு. ஆனால் அவைகள் பலனற்றதாய்ப் போய்விடுவதன்னியில் மீண்டும் போப்பின் கட்டளைகள் அந்த தெய்வீகத்தொண்டை ஆற்றுமாறு பிறந்து கொண்டே வந்தன. லௌகீக நாகரீகத்தின் வளர்ச்சியின் காரணத்தாலும், மானுஷ்ய உணர்ச்சிப் பெருக்கினாலுமேதான் கொடுமைப்படுத்தும் ஆவேசம் மெதுவாகக் குறைய ஆரம்பித்தது.

ஸ்பெயினில் கோரக்காட்சி.

மிகவும் கடினமான கட்டுப்பாட்டுடன் கையாளப்பட்ட மதக்குரோத மார்க்கத்தை நாம் இனி காணுவோம். ஸ்பெயின் தேசமாகிய குறுகிய பிரதேசத்திலே, அடங்காத ஆவேசக்காரனான டார்க்விமேடா (அவலட்சணமான பேர!) என்பவரின் கீழ் "இன்க்விஸிஷன்" என்னும் முறை வெகு தீவிரமாக வேலை செய்து வரலாயிற்று. சமயவாதிகளின விருப்பப்படி ஸ்பெயின் தேசத்தில் அதன் அவசியம் மிகவும் அதிகமாயிருந்தது. அத்தேசமானது ஏனைய பிரதேசங்களின்றும் வேறாகப் பிரிந்திருக்கிறது. ஏராளமான அம் மக்கள் கிறிஸ்துவ மதத்தை ஏறக்குறைய எதிர்த்தே வந்தார்கள். அங்குள்ள மூர்ஸ் என்னும் கூட்டதினருடன் சண்டை போடவேண்டியிருந்த காரணத்தினாலும, யூதர்களின் எண்ணிக்கை ஏராளமாயிருந்தமையாலும், அவர்களிருவரையும் கிறிஸ்துவராக்க பெரு முயற்சி செய்ய வேண்டியதாயிற்று. கொடுமைப்படுத்துதலே ஏற்றவழி யென்றும் கொள்ளையும், கொலையும, கடவுளின் பிரதாபத்திற்காக உபயோகிப்பது குற்றமற்றவை என்றும் மக்கள் எண்ணி வந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில், நாட்டில் ஏற்பட்டுள்ள மத விரோதத்தை வேரோடு களைந்தெறிய காட்டம் கொண்ட "பெர்டினாண்டும், இஸபெல்லாவும்" அக் காலத்திய கான்காம் "சிக்ஸ்டன்" என்னும் போப்பின் உத்த

ரவை வேண்டி பழைய ரோமன் "இன்க்விஸிஷன்" என்னும் ஆயுதத்தை ஸ்பெயினில் கையாள முயன்றனர். "பரிசோதகர்கள்" போப்பரசரால் நியமிக்கப்பட்டனர். அவர்களும் அவர் பின் வந்தவர்களும் எத்தகைய கொடூரச் செயல்களையும் ஆமோதித்தேவந்தனர். முதல் "பரிசோதனை கர்த்தர்" டார்க்விமேடா என்பவரே. இவர் இசபெல்லா என்னும் ராணி கொடும் பாதகங்களுக்கு தன் சம்மதத்தை மறுத்த காலையில், வெகுவாய் நடித்து சிலுவையை வேண்டுவது போல் பாசாங்கு செய்து அவனது சம்மதத்தைக் கடைசியாக பெற்றும்விட்டார். இத்த வெறுக்கத்தக்க மனிதன் கண்காணிக்கும் முதலாளிபாயிருந்து பல கொள்ளைகளையும், கொலைகளையும் புரிந்துவந்தான். மன்னர்கள்யாவரும் அநியாயத்தை விரும்பவில்லை. தாமாகவே பாவத்தை ஓப்புக்கொண்டு வருந்தியவருக்குத் தூக்குதண்டனை விதிக்கப்படவில்லை. 1481-வது ஆண்டில் செவில் என்னும் இடத்தில் "முதல் கருணைச் செயல்" ஒன்று நடந்தது. அதன் பின்னர் அவ்வருடக் கடைசிக்குள் குறைந்தது முன்னூறு பேர்கள் தீக்கிரையாக்கப்பட்டனர். மற்றும் பலர் வாழ்நாள் முழுதும் சிறைச்சாலையிலடைக்கப்பட்டும் அவர்களது சொத்தும் ஏனைய, சிறிது கிறிஸ்துவராக்கப்பட்ட மூர்களில் எராளமானவரது சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அதிகாரிகளால் வெகு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

"பரிசோதனைத் திட்டம்" என்பது ராஜாங்க கலத்திற்கும், சமயத்தின் கலத்திற்கும் உண்டாக்கப்பட்டிருந்தது. குற்றஞ்சாற்றப்பட்டவர்களுக்கு விரோதமாக அத்திட்டம் கையாண்ட முறையிலிருந்த அநியாயமும், இரகசியமும், கொடுமையும், போராசையும் அதற்கு முன்பும், அதற்குப் பின்பும் எவராலும் கையாளப்படவில்லை என்பது திண்ணம். இரண்டு சரித்திர சம்பவங்கள்:— ஸ்பெயின் தேசத்திலிருந்து 1492-வது ஆண்டில் மிகவும் சுறுசுறுப்பான கூட்டத்தினராகிய ஆயிரக்கணக்கான யூதர்களைத் துரத்தியும், அதற்கடுத்த நூற்றாண்டில் பல தடவைகளில் மார்ஸிகோ என்னும் கூட்டத்தினரைத் துரத்தியதும் ஆகியவைகள் மத ஆவேசத்தால் மக்களது காகரீகம் அடைந்த பலன் என்ன என்பதை நன்கு விளக்கும் பாற்றனவாகும். ஸ்பெயின் தேச மக்களுக்கு பரிசோதனைத்திட்டத்தின்' கேவலத்தன்மையை கண்டுணர முன்னூற்றைம்பது வருடங்கட்கு மேல் பிடித்தது போலும். எனெனில் அது இரண்டு மூன்று முறை அழிக்கப்பட்டும்

புதிப்பிக்கப்பட்டும் இறுதியாக 1834-வது வருடம் கேவலமான முடிவை அடைந்தது. அநாவசியமானதும், அளவு கடந்த தீமை பயப்படதுமான திட்டத்தால் நாகரீகத்திற்கு ஏற்பட்ட கஷ்டமும், கஷ்டமும், ஏழ்மையும், நாட்டின் அழிவும் சொல்லி முடியாது.

மானக்கேடான மெடல்.

சுருக்கமாக எழுதப்படும் இதுபோன்ற நூலில் சரித்திரத்தின் பக்கங்களை மாசு படுத்திய சமயக்கொடுமைகளைப் பற்றி விரிவாகக்கூறவேண்டிய அவசியமில்லை. ஆல்பிஜென்ஸிஸ் என்பவர்களை அழித்த குற்றத்திலும், 1572-வது வருடம் பதினாயிரம் புராட்டஸ்டாண்டு மதத்தினரைப் படுகொலை புரிந்த குற்றத்திலும் மிகக்கொடூரமான குற்றம் எங்கேனும் உண்டா? அவ்வாறிருந்தும் அவையனைத்தும் 'கடவுளின் பிரதாபத்திற்காகச் செய்யப்பட்டனவென்று பாராட்டப்படுவதுடன் அக்காலத்திய பதின்மூன்றாம் "கிரிகரி" என்பவர் அக்கொலைகளின் ஞாபகார்த்தமாக ஒரு (மெடல்) பதக்கம் அடித்தும் வழங்கினார்! அரசாங்க விவகாரங்களுக்கும் இவற்றில் சம்பந்தமிருந்தது உண்மையே. எனினும் மதத்தின் செல்வாக்கு அப்போது மிக அதிகம். ஆதலின் இந்த மானக்கேடு மதத்திற்கு பிரதானமாய் உரித்தாகும். அரசாங்கங்காட்டும் மதக்குரோதக் காட்சிகளைப் பொதுஜன அபிப்பிராயம் சிற்சில சமயங்களில் ஆதரிப்பதும் உண்டு. ஆனால் அதன் காரணம் அவைகள் அரசாங்கத்தைத் பொறுத்தது என்பதே. ஆனால் மதம் இவ்வாறு மனிதனின் சுதந்தரத்தைச் சிதைப்பதற்கு சாதாரணமாகவும், வெளிப்படையாகவும் மதத்தைச் சார்ந்த காரணமும் தெய்வீகக்கட்டளையின் சம்மதமுமே யாகும்.

ஐரோப்பா பூராவும் கொலைக்களமே.

ஹெயின்ஸ் என்பவர் எழுதியுள்ள அழகிய சிறு நூல் சகல விஷயங்களையும் சொல்லி விடுகின்றதனால் இதில் இன்னும் அதிக விரிவாகக் கூறவேண்டிய அவசியம் இல்லை. விஷயங்களை அறிய விரும்பும் வாசகர்கள் "பிரஸ்காட்" "மாட்லி" என்னும் இரு சரித்திர ஆசிரியர் நூல்களையும் படித்தால் ருசிகரமானதும், லாபம் அளிக்கக்கூடியதுமான விஷயங்களோடு எவ்வாறு அமைதி பொருந்திய டச்சுக்காரர்கள் "பரிசோதனைத்திட்டத்தை" எதிர்த்ததற்காக நெஞ்சந்திடுக்

கிடக்கூடியதும் நினைப்பினும் துன்பம்தருவதுமானகொடுமை கட்கு ஆளாக்கப்பட்டார் என்னும் விஷயங்களையும் அறிய இயலும். புராட்டஸ்ட்டாண்டு மதத்தினரை நலிவுறுத்தி தால் பிரான்சில் ஏற்பட்ட சண்டைகளும், வால்டென்ஸ் களைப் படுகொலை புரிந்ததும், பொகீமியாவில் ஏற்பட்ட சிலுவை யுத்தமும், ஜர்மனியின் ஜனத்தொகையைப் பெரிதும் அளித்திட்ட முப்பது வருடச்சண்டையும் இன்னும் மற்ற எண்ணிறந்த சம்பவங்களும் இதுபோன்றவையே. அயர் லாந்திலே 'அல்ஸ்டர் திட்டம்' என்பது ஒன்றையும் நிலை நிறுத்தியபாடில்லை; இங்கிலாந்திலோவெனின் கத்தோ லிக்கர்கள் புராட்டஸ்டாண்டு மதத்தினரை நசுக்கினர். பிராட்டஸ்டாண்டு மதத்தினர் தமக்கு வலிமை ஏற்பட்ட வுடனே கத்தோலிகர்களுக்கு வட்டி போட்டுக் கொடுமை புரிந்தனர். பதினாராவது, பதினேழாவது நூற்றாண்டு களில் ஐரோப்பா முழுவதிலும் மத ஆவேசக் கொடுமை என் னும் ஓர் தொத்து நோய் பரவித் தொந்தரவளித்துக் கொண் டேவந்தது. மதவிரோதிகளை வேட்டையாடி வந்தனர். எவனும் தன்னை யறியாமலே மதவிரோதியாகவும் இருப்ப துண்டு. ஒவ்வொரு தடவையும் யூதர்களே மிகவும் கஷ்டப் பட நேர்ந்தது; ஏனெனில் அவர்கள் தான் கிறிஸ்துவைக் கொன்றவர்கள் எனக கருதப்பட்டு வந்தனர். சற்று நற் குணம் படைத்த மன்னர்களாயிருந்த நான்காவது ஹென்ரி, ஆரஞ்சு வில்லியம் என்பவர்களைக் கொலை செய்யவும் மத ஆவேசப் பயித்தியமே காரணமாயிருந்தது. இன்னும் சமீப காலத்திலுங்கூட இரண்டு மூன்று அமெரிக்கப் பிரசிடெண்டு கள் தமது மேம்பட்ட அபிப்பிராயங்களுக்காகமிகவும் கஷ்டப் பட்டனர். இவை யனைத்துக்கும் மதமே நேரான காரண மல்ல என்பது உண்மையே. ஆனால் இவைகள் ஏற்பட ஹேதுவான நிலைமையை உண்டு பண்ணியது மதமே யொழிய வேறில்லை.

புரோகித சூழ்ச்சி சட்டங்கள்.

இத்தகைய மதச்செல்வாக்கு அகலுவது எவ்வளவு கஷ் டம் என்பதற்குச் சான்று, அறிவு விளக்கம் பெற்ற பத்தொன் பதாம் நூற்றாண்டிலும் அதைவிடச் சிறந்த இருபதாம் நூற்றாண்டிலும் உண்டான இலேசான கொடுமைச் செயல்களே யாகும். ஒன்றுமே அறியாத ஒரு கிழவன் வதோ ஒரு கதவின் மேல் சில அர்த்தமற்ற வார்த்தைகளைக் கிறுக்கி விட்டான் என்று அவனை ஒரு பாதிரி விசாரித்து

சிறையில் இட்டான். அக்கிழவன் ஜெயிலிலே தனது அறிவை இழந்து பித்தனாய் விட்டான். 1842-வது வருடம் ''ஜியார்ஜ் ஜேக்கப் ஹோலியோக்'' என்னும் மத ஆச்சாரியார் கடவுள் இருத்தலால் யாருக்கும் யாதொரு பயனும் விளையாதிருப்பதால் தன்போன்ற குருக்களுக்கு அரைச்சம்பளம் கொடுத்தால் போதும் என்று அபிப்பிராயப்பட்டார். இந்த குற்றத்திற்காக அவர் சிறையிலடைக்கப்பட்டார். ''தாமஸ் பெயின்'' என்பவர் எழுதியுள்ள ''அறிவின் காலம்'' என்னும் நூலை விற்பனை செய்த குற்றத்திற்காக ''ரிச்சார்டு கார்லைல்'' என்பவருக்கு ஒன்பது ஆண்டு சிறைத் தண்டனை விதித்தனர். ''வர்ல்டையர்'', ''பெயின்'', ''இங்கர்சால்'' முதலியவர்களது ஞாபகார்த்தத்தைச் சீர்குலைக்கச்செய்த பேடித்தனமான க்ஷாத்திரம் பொருந்திய முயற்சிகளைப்பற்றி அதிகம் கூற வேண்டியதில்லை. ஏனெனில் அவை பழைய வைதீகமதச் சாம்பிரதாயத்திற்கு ஒத்த செயல்களேயாகும். சில சமயங்களில் தமது யுத்தமுறைகளை மாற்றிக் கொள்வதுமுண்டு. உதாரணமாக இவர்கள் மூவரும், தமது கடைசிக்காலத்தில், தமது பாவத்தை யுணர்ந்து மனம் வருந்தியதாகவும் சொல்லொணாச் சஞ்சலம் இறக்குந்தருவாயில் அனுபவித்ததாகவும் வீண் வதந்திகளை பரப்பிவரலாயினர். மதக்குரோதம் பிடித்த மக்கள், ''டார்வின்'' விஷயத்தில் இன்னும் விசேஷ கவனம் செலுத்துவாயினர். அவர் இறப்பதற்கு முன் உண்மையான கிறிஸ்துவராயினர் என்றும் உரைத்து வந்தனர். இந்த விநோதப் பொய்க் கதைகளை உண்மை விஷயங்களைக் கொண்டு அழித்தல் அவசியமாயிற்று.

உண்மையான பயமா?

ஒரு மனிதன், தனது இளமைப்பருவத்தில் தன்னை வளர்த்து வந்த முறையின் காரணத்தாலோ, அல்லது பிறருக்கு அடங்கிப் பயந்தோ சில மத அபிப்பிராயங்களைத் தன் மனதில் இருத்தி வளர்த்து விடுவானேல், அதன் பின் னர் அவைகளின் உண்மையை ஆராய அவன் சிறிதும் முயலுவதில்லை. அவைகளின் உண்மை முன்பே ஆராய்ந்து நிச்சயப்பட்டுவிட்டது. அவையனைத்தும் தெளிந்த மெய்ம்மைகளாய்த் திரண்டு நிற்கும் காரணத்தால் மென்மேலும் அவைகளை ஆராய்ந்து பார்க்க அவன் அவாவுறுவதில்லை. அது மட்டுமன்றி, பிறர் அவைகளைப் புரட்டிப் பார்த்தாலும் அவன் அதற்கு இடம் கொடுப்பதில்லை. அவன் அவ்வாறு செய்தலினாலே சமூகத்தின் அஸ்திவாரமே ஆடிப்போய்விடும்

எனவும் தனது ஆன்மாவின் நீண்ட இன்பம் அழிந்துவிடும் எனவும் அஞ்சுகிறான். இத்தகைய பயம்தான் மக்கள், மதத்தில் மட்டுமின்றி மற்ற எந்தத்துறையிலும் நூதனமான பொருள்களை விரும்பவொண்ணாதபடியும் அவர்களது அறிவையே நம்பவிடாதபடியும் செய்து வந்துள்ளது; இன்னும் செய்து வருகின்றது. இவ்விதமான திருப்தியளிக்கும் மடமைக்கும், நாகரீகத்தைத் தூண்டியும், வளர்த்தும் பெருக்கிக் கொண்டு போகும் அறிவு வளர்ச்சியின் தாகத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இன்னும் சில உதாரணங்களை மட்டும் கொடுப்போம். அவைகளிலிருந்து நாம் காண்பது என்னவெனின், மனக்ளர்ச்சியின் வேகத்தைக் குறைத்தலும் புதியனவற்றை நம்பாது ஒதுக்குதலும் ஏற்படுவதற்குக் காரணம் வழக்கமாக இருந்துவரும் அபிப்பிராயங்களுக்கு அடிமைப்பட்டிருப்பது என்பதே.

நாகரீக காலத்திலும் நீசச்செயல்கள்.

இங்கிலாந்தில் பிரபுக்கள் சபை (House of Lords) என்பதைப்பற்றி அதிகம் கூறவேண்டிய அவசியமில்லை. அந்த பிரபல்யமான கூட்டத்தில், சமூகத்தின் லௌகீக, வைதீக க்ஷேமங்களை வளர்க்க, கடவுள் அருளால் அளவற்ற ஞானம் பெற பல சட்டமியற்றுவோர்கள் இருந்து வருகின்றனர். லௌகீகச் சட்டங்கள் இயற்றுவதிலுங்கூட அவர்களுக்குப் பங்குண்டு. ஆனால் அவர்களது அபிப்பிராயங்கள் தவறானவைகளாயிருப்பின் அதற்காக அவர்கள் யாருக்கும் காரணம் கூறக்கடமைப்பட்டிலர். எனவே அவர்கள் தமது அதிகாரத்தை எந்த விதத்தில் உபயோகித்து வருகின்றனர் என்று ஆராய்வது அவசியமாகின்றது. "பரிசுத்தக் கிறிஸ்தவர்கள்" என்பவர்கள் நிறைந்த "நீண்டகாலப் பாராளுமன்ற"த்தினர் பிரபுக்கள் சபையினின்றும் மதக்காரர்களைத் தள்ளிவிட்டனர். ஏனெனில் அவர்களால் யாதொரு பயனும் இல்லை என்று அவர்கள் எண்ணினர். ஆனால் மன்னரது ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட்டவுடனே புரோகிதக் கூட்டத்திற்கு மீண்டும் பழைய ஸ்தானங்களை அளிக்கப்பட்டது. அவர்களும் அவற்றை இறுக்கிப் பிடித்துக் கொள்ளலாயினர். அதன்பின் அரசன் கடவுளின் பிரதிநிதித்துவத்துடன் ஆள்கிறான் என்பதை மறுப்பது குற்றம் என்று ஆக்கப்பட்டது. மன்னனை எந்தக்காரணங் கொண்டும் எதிர்த்துப் போரா

டல் பெருங்குற்றம் என்றும் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. (ஜேம்ஸ் ரூட்லட்ஜ் அவர்களின், "மக்கள் முன்னேற்றம்" என்னும் நூலைப்பார்க்க) மதச்சம்மந்தத்தைக்கொண்ட "அரசன் ஒரு குற்றமும் செய்தற்கியலாதவன்" என் னும் கொள்கையினால் விளைந்த தீமைகளை இவ்வளவு அவ்வளவு என்று கூறுதற்கு இயலாது. 1661-வது வருடத்துக் "கார்ப்பரேஷன் சட்டத்தின் பிரகாரம், எவனொருவன் இங்கிலாந்து திருச்சபையின் கிரியைகளின்படி ஆன்மசுத்தி செய்யப்படவில்லையோ, அவன் ஒரு கார்ப்பரேஷனிலும் அங்கம் வகிக்க முடியாது என்று ஆக்கப்பட்டது. அர்ச்' "பர்த்தலெமியூ" திருநாளில், கொலை நடந்த ஆண்டு நிறைவு தினமாகிய 1662-வது வருடம் ஆகஸ்டு 24-ம் தேதி 'ஏகத்தன்மைச் சட்டம்' (Act of Uniformity) என்பது நிறைவேற்றப்பட்டனை பிறரால் ஒற்றுமைப்படுத்தும் முயற்சி புதிதொன்றுமல்ல. ஆனால் அந்தச் சட்டமான்து யாரும் தப்பித்துக் கொள்ள வழியில்லாமல் அமைக்கப்பட்டிருந்தது. தக்க காரணங்களுடன் தான், இந்தச்சட்டம் ஆக்கப்பட்ட தினத்தை தற்கால வேற்றுமை பிறந்த தினம் என்று மக்கள் அழைத்து வருகின்றனர். ஏனெனில் அந்நாளில் தான், உயர்வும், கல்வியும், உண்மைப்பக்தியும் நிறைந்த இரண்டாயிரம் மத உபன்யாசகர்கள் தம் வருவாயையும், வீடுகளையும் விட்டு விட்டு, மிகவும் கேவலமான ஏழ்மையை நாடிப்போக நேரிட்டது. சில நாட்களுக்குப்பின் ஸ்காட்லண்டின் பாராளுமன்றம், இனி மேல் மதக் குருக்களின் ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்தால் சட்டத்தினால் அமைதியை நிலை நிறுத்தியதை ஒக்கும் என்று ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. வெளியே அப்போதும் வேண்டிய அளவு அமைதி உலவி வந்தது. பொது வாழ்க்கையின் ஓழுக்கமோ மிகவும் கேவல நிலையில் இருந்தது, "1664-வது வருடம் கான்வெண்டிக்கிள் சட்டம் என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இரண்டாயிரம் மத உபந்யாசகர்களைத் துரத்திய பின் அந்தச்சட்டம் தோன்றுதல் இயல்பே. அதன் பிரிவுகளிலே மிகவும் முக்கியமானதின் பிரகாரம், தனது குடும்பமில்லாமல் தன்னோடு ஐந்து பேருக்கு மேல், தெய்வாராதனைக்குச் சட்டப்படி ஏற்பட்டுள்ள சத்தியம் முதலியன செய்யாதவன், கூட்டம் கூடலாகாது, அதற் கடுத்த வருடம் கிறிஸ்தவ மக்களின் சுதந்தரத்தை மேலும் அடக்குதல் அவசியம் என்றும் கருதப்பட்டது". "ஐந்து மைல் சட்டம்" என்பதின்படிக்கு, ஓத்துழையாத மதப்பிரசங்கிகள் தாம் எந்த இடத்தில் இதற்கு முன்பு உபந்யாசம்

செய்து வந்தார்களோ அந்த இடத்தின் ஐந்து மைல் விஸ்தீரணத்துக்குள் நுழைதல் ஆகாதென ஆக்ஞை இடப்பட்டிருந்தனர். மத ஆவேசம் யுத்த வெறிபிடித்துத் திரிந்தது; சமயவாதிகள் கூட அதன் பயனை அடையாமல் தப்பியோட முடியவில்லை. தத்தமக்குச் சுதந்தரம் வேண்டும் என்று விரும்பிய மக்கள் ஏனையவர்க்கு அதே சுதந்தரத்தை அளிக்க மறுத்தனர். மேலே கூறிய ஆசிரியர் கூறுகிறார்: "இங்கிலாந்து திருச்சபையின் ஒரு சிலர் கொண்டிருந்த தீவிரமான கொள்கைகள் மிகவும் கேவலமான அரசியற் கொள்கைகள் ஆகும் எனின் அது மிகையாகாது. அதைவிட மிகவும் கொடுமை பொருந்திய கொள்கையை நினைப்பதும் கஷ்டம் அந்தச் சட்டங்கள் மட்டும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருப்பின் இங்கிலாந்து முழுதிலுமே ஒரு பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கும். "டில்லட்ஸன்" போன்ற ஒருவர் இரண்டாம் "சார்ல்ஸ்" என்னும் மன்னன்தான் மக்களுக்குத் தேவையான மதத்தைப் பொறுக்கி எடுக்கவேண்டுமெனவும், குடிகள் வாயை மூடிக்கொண்டிருப்பதே அவர்கள் கடமை எனவும் கூற முன்வருவாரேல் அரசனின் தெய்வீகப் பிரதிநிதித்துவம் என்னும் கோட்பாடு எவ்வளவு கேவலமாகக் கையாளப்பட்டு வந்திருக்க வேண்டும் எனப் புலப்படுகிறது"

மேற்கூறிய மதக்கூத்தின் காட்சிகள் காலடைவில் மறையலாயின. ஆனால் அவர்களின் பலன் மட்டும் நீண்ட காலம் இருந்து வந்தன. பிஷப்புகள் பதினான்பதாம் நூற்றாண்டில் ஆற்றியுள்ள காரியங்களிற் சில அவர்களது தெய்வீகக் கடமைகளுக்கு இழுக்காகவே இருந்துள்ளன. கீழ்கண்டவைகள், "கிளேட்டன்" என்பவரது "பிஷப்புகளும் சட்டமியற்றுதலும்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. ஆனால் சில தவறுதல்களை ஆங்காங்கே திருத்தியும் விஷயங்களை தற்காலம் வரைக்கும் பெருக்கியும் இருக்கிறோம்.

அந்நூற்றாண்டின் முதலிலே ரோமன் கத்தோலிக்கர்கள் தங்களது கோவிற் சடங்குகளின்படி கலியாணங்கள் செய்துகொள்ள அனுமதியளிக்கும் மசோதா ஒன்று பிரபுக்கள் சபைக்கு கொண்டு வரப்பட்டது. ஒரு பிஷப்பாவது அதற்கு தன் ஆதரவை அளிக்கவில்லை. மாறுபட்ட மதத்தினர் என்னும் ஓர் கூட்டத்தார்கள் தெய்வீகமானம் வேண்டுமென்று விழைந்தால் தமது குக்கிராமக் கோவில்களில் தான் செய்து

கொள்ள வேண்டியிருந்தது. அதற்கு முன் அவர்கள் இங்கிலாந்துக் கோவிலுக்குச் செல்லவில்லை என்று தண்டிக்கப்பட்டும் வந்தனர். 1812-வது ஆண்டில் மேற்கூறிய தண்டனையை யொழிக்கக் கொண்டுவரப்பட்ட மசோதா பிரபுக்கள் சபையால் தள்ளப்பட்டு விட்டது. எல்லா மதக்குருக்களும் அதை எகோபித்து எதிர்த்தனர்.

1807-வது ஆண்டில் கொண்டுவரப்பட்ட "வெண்ரொட்டி ஏழைமக்கள் சட்டம்" என்னும் மசோதாவில் ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்தக்கூடிய முயற்சிகள் இருந்தன. இந்த மசோதா காமன்ஸ்சபையில் நிறைவேற்றப்பட்டும் பிரபுக்கள் சபையில் தள்ளப்பட்டு விட்டது. இந்தத் தொண்டில் "கான்டர்பரி ஆர்ச் பிஷப்பும்" மிகப்பெரிய பங்கெடுத்துக் கொண்டார்.

1839-வது வருடம் உபாத்தியாயர்களுக்குப் பழக்கக் கல்வி பயில்விக்க முயன்ற ஒரு மசோதாவானதும் தள்ளப்பட்டு விட்டது. ஆனால் பிஷப்புகள் எப்பக்கம் தங்கள் பலத்தை அளித்தனர் என்று சரியாய்த் தெரியவில்லை.

"மத அசௌகரியங்கள் அகற்றும்" மசோதா என்பது பலதடவை தள்ளப்பட்டு வந்தது. ஒரு ஆர்ச் பிஷப்பு என்ன கூறினார் என்றால் கிறிஸ்துவர்களல்லா தாரை பாராளுமன்றத்தில் உட்காரவைத்தால் அது இழிவுபெற்றுவிடும் என்றும் அதன் காரணத்தால் மதத்தின் அஸ்திவாரங்களே போய்விடும் என்றும் கருதினார் எனினும் இறுதியாக அம்மசோதா நிறைவேறி விட்டது.

1838-வது ஆண்டில் சத்தியம் செய்வதற்குப் பதிலாக உறுதி கூறுவது என்று கொண்டுவரப்பட்ட மசோதா பிரபுக்கள் சபையால் எறியப்பட்டுவிட்டது.

லேடி ஹ்யூலி என்பவரின் தர்ம சொத்து விஷயத்தில் ஏற்பட்ட நீதிஸ்தலத்தின் தீர்ப்பு, பெருவாரியான மாறுபட்ட மதத்தினர் சபையின (புராட்டஸ்டாண்ட்) உறுதியைத் தாக்குவதாயிற்று. ஆதலால் அக்காலத்து அரசாங்கம் எந்த தர்ம சொத்து விஷயத்திலும் அதை அடையக்கூடியவர்களது மதத்தைப்பற்றியும், அனுஷ்டானத்தைப்பற்றியும் தெளிவாகக் கூறப்படவில்லையோ அதில் வியாஜ்யம் நடக்கும் தினத்திற்கு இருபத்தைந்து ஆண்டுகட்கு முன் அனுஷ்டா

ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்.

(கருஊரான்)

இந்து மதம் என்ற ஒரு மதம் என்ன என்று பார்க்கும் போது அந்தப் பெயருடன் ஒரு மதம் இல்லை என்பது அனைவரும் உணர்ந்ததே. மகம்மதியர், கிறிஸ்தவர், பாரசீகர், சீக்கியர், புத்தர், சமணர் என்ற சிறப்புப் பெயர் களால் வழங்கப்படாத மக்கள் கூட்டத்திற்கு இந்துக்கள் என்று பெயராம். இதை ஆராயப்புகுந்தால் மிக்க மோசமான நகைப்புக்கிடமாகும் ஆதலின் அதை விடுத்து இவ் வாறுள்ள கூட்டத்தினரில் முக்கியமான இரண்டு சார்புகளை மட்டி லும் நோக்குவோம். ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும் என்பது

னத்தில் இருந்துவரும் பழக்கமே அந்த சபையைப்பொறுத்த மட்டில் நிச்சயமான சாட்சியம் ஆதும் என ஒரு மசோதா கொண்டுவந்தது. இது ஒரு தீங்கும் இல்லாத தீர்மானமே யாகும். இருந்தாலும் 1844-வது ஆண்டிலிருந்த லண்டன் பிஷப் அது "உண்மை, நியாயம், நீதி, மதம்" முதலியவற் றிற்கு முற்றிலும் புறம்பானது என்று அபிப்பிராயப்பட்டார். அவர் இவ்வாறு சீற்றங்கொண்டதற்குக் காரணம், பெரும் பாலான இந்த தர்ம சொத்துக்கள் அச்சட்டத்தின்படிக்கு "யூனிட்டேரியன்" என்னும் திருச்சபைகளுக்கே போய்ச் சேரநேரும் என்பதே.

மற்றும் பெரிய குற்றங்கள் பல செய்தாலும் மக்களைத் தண்டிப்பதில்லை. ஆனால் கிராமக் கோவிலுக்குச் சரிவரப் போகவில்லை யெனின் அதற்குத் தண்டனையுண்டு.

1858-வது ஆண்டில் கட்டாயக்கோவில் வரியை நீக்கக் கொண்டுவந்த மசோதாவிற்குச் சாதகமாக ஒரு பிஷப்பாவது ஓட் செய்யவில்லை. ஆனால் அதற்கு பாதகமாக இருபத்து நான்கு பிஷப்புகள் ஓட் செய்தனர்.

ஒன்று. நாற்குலச் சாதியை அடிப்படையாகக் கொண்டது மற்றொன்று.

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர். இதையன்றிச் சாதியில்லை என்பது திராவிடதர்மம். கடவுளுடைய நெற்றியிலும் தோளிலும் வயிற்றிலும் பாதத்திலும் இருந்து நாலுவிதமாகப் பிறப்பர் என்று நாற்குலச்சாதி உண்டென்பது ஆர்யதர்மம். பிறப்பொக்கும் எல்லா உயிரும் என்பது திராவிட தர்மம். பிறப்பொவ்வா என்பது ஆரியதர்மம். ஒரு குலத்துக்கொரு நீதி ஆரிய தர்மம். எக் குலத்துக்கும் ஒரு நீதி என்பது திராவிட தர்மம். சாதியில் நம்பிக்கைகொண்டது ஆரியதர்மம்; சனாதன தர்மம்; வருணாசிரம தர்மம்; மனுதர்மம். சாதியில் நம்பிக்கை கொள்ளாதது திராவிட தர்மம்; தமிழர் தர்மம்; உண்மைத் தர்மம். தென்னாட்டு மனு (வடநாட்டுப் பார்ப்பன மனுவேறு. தென்னாட்டு திராவிட மனு வேறு என்பது அநேகர் அறியாததாகும்) வள்ளுவர் தர்மம். குலத்துக்கும் கடவுளுக்கும் முடிச்சுண்டென்பது ஆர்யதர்மம். குலத்துக்கும் கடவுளுக்கும் முடிச்சில்லை என்பது திராவிட தர்மம். ஒரு குடிப்பிறந்தோரே வேதம் ஓதலாம் கடவுளை அடையலாம் என்பது சனாதன தர்மம் எக்குடிப்பிறந்தோரும் மறைகளை உணரலாம் கடவுளை அடையலாம் என்பது திராவிட தர்மம். பிறவிக்கும் தொழிலுக்கும் இழிவும் தாழ்வும் கற்பிப்பது ஆரியர்தர்மம். அவ்வாறு செய்யாதது திராவிட தர்மம். இவ்வாறு இன்னும் அநேக விதங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இத்தருமங்கள் ஆரியர் வந்த நாள் தொடங்கி இந்நாட்டில் ஒன்றுக்கொன்று போராட்டமாகவே வந்துகொண்டிருந்தன. அவரவர் அவரவர் முன்னோர்கள் தருமங்களையே கடைப்பிடிக்கலாயினர் ஆனால் இதில் தந்திரமும் சூழ்ச்சியும் மிக்க ஆரியர் தங்கள் முன்னோர்களின் தருமத்தையே அடிப்படையாகக்கொண்டு சட்டம் செய்யுமாறு அரசர்களைத் தங்கள் வசப்படுத்தினர். எந்தநாட்டினரும் எள்ளி நகையாடத்தக்க பார்ப்பன மனுதர்மத்தையே இந்நாட்டினருக்குத் தருமமாகத் திட்டம் செய்யப்பட்டது. உலகம் போற்றும் வள்ளுவர் நீதியெல்லாம் குப்பைத்தொட்டியில் எறியப்பட்டது. ஆகையினால் ஜாதியென்பதும் குலம் என்பதும் பல்கிப் பெருகி நன்கு உருக்கொண்டுவிளங்குவன ஆயின. ஜாதிப்பிரிவினையையும், வகுப்புவாதத்தையும் அடிப்படையாகக் கொண்ட வடவர்களுடைய சனாதன தர்ம கொள்கையே மதம் என்னப்பட்டது. மற்றதெல்லாம் திராவிட தர்மமெல்லாம் நாஸ்திகம் மதத்து வேஷம் எனப்பட்டது. ஆரியர்களால் தமிழர்கள் மதம் (கொள்கை) எங்கெங்கும் நசுக்கப் பட்டது. ஆனாலும் அது இறந்து போகவில்லை. இஸ்லாம் முதலிய ஆரியர் அல்லாத மதங்களில் புகுந்து கொண்டது. எனெனில் அது இறக்க முடியாது. ஆனால் அது தமிழர்களிடம் செல்வாக்கை இழந்தது. இழக்கவே தமிழர்-திராவிடர் நாட்டில் அடிமைத்தனமும் அநீதியும் அந்தகாரமும் நிறைவதாயிற்று. தவம்செய்யும் தமிழனைக் கொலை செய்யும் ராமனைத் தெய்வ

மென்று வழிபடும் காலமும் அந்த ராம ராஜ்யம் கோரும் காலமும் வந்தது.

இவ்வாறாகப் பல பல தீமைகள்நாட்டினுக்குஏற்படலாயின. "போர் கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை அர்ச்சிக்கில் பார்கொண்டவேந் தற்குப்பொல்லா வியாதியாம் போர்கொண்டு காட்டினில் பஞ்சமும் ஆம் என்றே சீர்கொண் — நந்தி தெரிந்துரைத்தானே" என்றபடி நாட்டின் எழிலெல்லாம் கொஞ்சங்கொஞ்சமாய் மறையலாயின. ஆரியர் சரித் திரப்படி அவர்கள் மாடுமேய்த்துக்கொண்டு இந்த நாட்டினுக்கு வரு வதற்கு முன்னமேயே சங்கம் நிறுவித் தமிழ் ஆராய்ந்த பெருமக்க ளெல்லாம் தற்குறிகள் என்னப்பட்டனர். அவர் வழிவந்தோரெல் லாம் மாட்டுக்காரப் பயல்கள் என்று இழிவு படுத்தித் தள்ளப்பட்டனர். காகரீகத்தில் குறைந்தவர் என்று எழுதப்பட்டனர். தமிழனும் தன் பெருமையைச்சிறிது சிறிதாக மறக்கலாயினான். "நெற்றிக்கண் காட் டினும் சாற்றிய குற்றம் குற்றமே" என்று கூறவல்ல தமிழனுடைய நடு நிலைமையும் ஆண்மையும் வீரமும் மங்குவதாயின. பிறர் தங் களை அவமானப்படுத்துவதையும் மரியாதை என்று கருதவும் தமிழன் ஆளானான். மரியாதை இழப்பதே தருமம் என்று நினைக்கவும் தமி ழன் ஆளானான். சனாதன தருமமே தன் தருமம் என்று நினைக்க வும் தமிழன் முனைந்தான் தொழிலினால் பட்டங்கள் வழங்கிவந்த தமிழன் தானும் ஆரியன்போல் பிறப்பினால் பட்டம் வழங்கிவர ஆளானான் அன்றே இவன் தற்பெருமை தன் மானம் இழந்தான். தன்னை இழந்தான், சனாதன தர்மம் நம் தர்மமல்ல என்று கூறும் தமிழனைத் தனக்கு மாற்றான் என்றுகருதவும் ஆளானான். ஆரியதர் மத்தை எனது தர்மம் என்று கூறி அதை ஆதரித்து வளர்க்கவும் ஆளானான். இகன் பயனாய் ஆரியன் திராவிட தர்மத்துக்கு அதர்மம் என்ற பெயரையும் வைத்தான். அதையும் நம்பினான் தமிழன்.

மரியாதை இழந்தவனை மூக்கறுந்தவன் என்று கூறுவது தமிழர் வழக்கம். அவ்வாறிருந்தும் தங்கள் மரியாதை குலைக்கப்படுவதெல் லாம் தர்மம் என்று நம்பிக்கொள்ளும் காலம் வந்தது. அது சனா தன தர்மமாம், இதனுக்குப் புறம்பாகவோ மாறாகவோ தமிழனுக்கு ஓர் தர்மம் உண்டுஎன்பது கனவிலும் நினைப்பதில்லை யாயிற்று சூத்தி ரன் என்னும் பட்டம் வகிப்பதே பெருமை ஆயிற்று. மக்களில் அநேகர் புலையர் எனப் பட்டனர். இன்னும் சிலர் சண்டாளர் ஆயினர். பின் னும் சிலர் பஞ்சமர் ஆயினர். இவ்வாறு தாழ்த்துவதே தர்மம் எனப்பட்டது. அதையும் நம்புவதற்கு அநேக கோடி பேர்கள் ஆயி னர். இவ்வாறு திராவிடனுடைய மூக்கை அறுப்பதே ஆரியனுடைய முன்னோர்கள் தர்மமாம். இந்தத் தர்மத்துக்குப் பங்கம் நேராதபடி விக்டோரியா மகாராணியினுடைய அறிக்கை தன்னைக் காக்கவேண்டு மென்று ஆரியனுடைய ஊளை மிகப்பலத்து விட்டது. திராவிடப் பெண்ணின் மூக்கையும் முலையையும் அறுக்கும் ஆரியனுக்கு மான பங்கம் வரக்கூடாதாம். மூக்கறுக்கும் தங்கள் முன்னோர்கள்தர்மம் இவை

நூரின்றி நடப்பதற்கு விக்டோரியாமகாராணி, அவர் மகன், மூதலானோரெல்லாம் தங்களுக்கு உதவி புரியவேண்டுமாம். இவ்வாறு தமிழனுடைய மூக்கை அறுப்பது இந்துமத தர்மத்தை நிலைநாட்டுவதாம். மூக்கை அறுத்துக்கொள்ள முடியாதுஎன்று எதிர்த்துப்பேசும் சுயமரியாதைத் தமிழனெல்லாம் காஸ்திகனாம்; ஜஸ்டிஸ் கட்சிக்காரனாம்; தேசத்துரோகிகளாம்! வகுப்புவாத துவேஷத்தை உண்டாக்கிக் குழப்பத்தை உண்டாக்குவோர்களாம்! பொதுஜன அமைதியைக் கெடுப்பவராம்! சிறைப்படுத்தத் தக்கோராம்! சோவியத் கொள்கையை அதற்குப் பக்குவமில்லாத நாட்டில் பரப்பும் புரட்சிக்காரராம்! தங்கள் மூக்கையே அறுக்க அனுமதிக்கும் தமிழரெல்லாம் மதாபிமானிகளாம்! ஆத்திகர்களாம்! தேசாபிமானிகளாம்! பெரும் பெருமதியாகிகளாம்! அஹிம்சா தர்மிகளாம்! வகுப்பு வாதத்தைஒழிக்கும் சமரசிகளாம்! பொதுஜன அமைதியைக் காப்பவராம்! நாட்டின் பக்குவமறிந்து கொள்கையைபரப்பி நலனே கருதும் சீரியஅரசியல்வாதிகளாம்! என்ன ஆச்சரியம்! என்ன அநியாயம்! இது இந்த நாட்டினைத் தவிர எந்த நாட்டிலாவது நடக்குமோ?

மானம் அழிகைக்குஉயிர்விடுகைசாலவுறும் என்னும் தன் கொள்கையைத் தமிழன் மறந்தான். மானம் அழிகையே ஞானம் என வாயிற்று. மூக்கை அறுப்பதே மோக்ஷம் எனலாயிற்று. ஒவ்வொரு தமிழனுடைய மூக்கும் ஒவ்வொரு இடத்திலும் அறுக்கப்பட லாயிற்று. கோவில்களிலும் மடங்களிலும் நியாய மன்றங்களிலும் தெருக்களிலும் சந்துகளிலும் தமிழன் மூக்கை அறுப்பதே ஆரியதர்மாயிற்று. ஆனால் மூக்கை அறுக்கும்போது கொஞ்சம் கொக்கேய்ன் தடவி நோகாமல் அறுக்கப்படும். மூக்கை அறுத்துக்கொண்ட தமிழன் புன்சிரிப்புடன் பல்லைக்காட்டிக்கொண்டு டல்லை இளித்துக் கொண்டு அறுத்தவன் தன்னுடையசாமி என்றுகூறி ஒரு கும்பிடும் போட்டுவிட்டுச் செல்வான். செல்லும்போது ஒரு சிறிது மூக்கைக் கொய்தாலும் அதில் நன்மையுண்டு, சமூக அமைப்புக்கு அது வேண்டி. யதே இந்துமத தர்மத்திற்கு ஒரு சிறிது மூக்கினை இழப்பது அவசியமே என்று பலவாறு சமாதானத்துடன் செல்வான்.

ஆனால் சில சமயத்தில் மூக்கினை அறுக்கும்போது ஆரியன் கொக்கேய்ன் தடவ மறந்து விடுவான். அப்பொழுது தான் சிறிது கூக்குரல் உண்டாகும். ஒவ்வொரு தமிழனுக்கும் இத்தனை இத்தனை அங்குல மூக்கை அறுப்பதென்று கணக்கிடும்போது சிறிது கூக்குரல் உண்டாகும். சிலருக்குக் கால் அங்குலம் சிலருக்கு மூக்கால் அங்குலம் அறுப்பார்கள் சிலருடைய மூக்கைக் குடைந்து தாண்டி அறுத்து மூக்கே இல்லாமல் செய்துவிடுவார்கள். இதனை கோவில்களில் போய்ப் பார்த்தால் மாலைக்கண்ணர்களுங்கூடக் காணலாம். சில சமயத்தில்மூக்கைமட்டிலும் அல்லாமல் மூக்குக்கு அப்பால் உள்ளதையும் அறுப்பார்கள். அப்பொழுது கொஞ்சம் அதிகக்கூக்குரல் உண்டாகும். இம்மாதிரிநடந்தது நீடாமங்கலம் போன்ற இடங்களில்.

அந்தோ தமிழாஉன்கதி இதுவா! எதிர்த்துவரும் சட்டிக்கு இடை

கார்ல் மார்க்ஸ்

வாழ்க்கை வரலாறு.

III

பாகுனின் மனம் புரட்சியிலே பதிந்துகிடந்தது. அவர் எப்பொழுதும், புரட்சியை பலப்படுத்தக் கூடிய வழிகளைக் கண்டுபிடிப்பதிலே கவலையாயிருந்தார். "உலகிலே ஒழுங்கு நிலவ வேண்டியானால் தனி உடமை ஒழிக்கப்படவேண்டும். கூட்டுஸ்தாபனங்களின் மூலமாக காரியங்கள் நடைபெற வேண்டும். நான் இன்று மரித்தால்நாளை எனது உடலை புழு அரித்துவிடும். எனது செல்வாக்கு பாவவேண்டும், எனக்கு புகழ்கிடைக்க வேண்டும் என்பதல்ல எனது ஆசை. நமது லட்சியம் வெற்றிபெறவேண்டும். அதற்காக எனது உயிரையும் தியாகம் செய்யத்தயாராயிருக்கிறேன்" என பிரான்ஸிலிருந்த தமது நண்பர் ஆல்பர்ட்ரிச்சார்டு என்பவருக்கு எழுதியிருக்கிறார்.

இவர் ஸ்பிட்சர்லாந்தில் வேலைசெய்து கொண்டிருக்கையில் பலர் இவரை பின்பற்றலானார்கள். கெற்குபிரான்சிலும் இவரது செல்வாக்கு பரவலாயிற்று. இத்தாலியிலும் ஸ்பெயினிலும் வேரூன்றிற்று. ரஷ்யனாகிய நெக்கயேவ் என்பவன் இவரை ஆசிரிக்கத்தொடங்கினான் ஆரம்பத்தில் நியாயப்பிரகாரமாக ஆசரிப்பது போல் தோன்றினாலும் கடைசியில் பாகுனினை கவிழ்க்க முனைந்து விட்டான். நெக்கயேவ் ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் கலந்து உண்மையாகவே வேலை செய்வதுபோல் நடித்து, கடைசியில் அந்தந்த ஸ்தாபனங்களிலுள்ளவர்களை ஒழிக்க சதி செய்வான். வெளிக்கு தீவிரவாதிகளைப்போல் நடித்துக்கொள்ளுவான். ஒரு ஸ்தாபனத்துக்கு விரோதமான மனப்

கொட்டினவன் பேடி என்ற உன் தமிழ் வீரம் எங்கே ஓடி ஒளித்தது? தந்தையையும் உதவி. தலைவனையும் உதவி, மைந்தனையும் உதவி காட்டினைக் காத்த தமிழ் மகளே உன் வீரம் எங்கே ஓடி ஒளித்தது. அந்தோ தமிழா நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் என்று கூறும் உன்னுடைய ஆண்மை என்னவாயிற்று? ஐயகோ! உன்கதி இப்படியா?

பான்மையோடு கூடியவர்களை சுட்டெரித்து விடவேண்டுமென்று பறைசாற்றுவான. இக்கமாதிரி பிரசாரம் செய்து வந்ததால மற்றவர்கள் இந்த இயக்கத்தில் சேர அஞ்சி வந்தார்கள். பாகுனி னுடன் ஒத்துழைத்துப்பதுபோல் நடித்து அவரிடமிருந்த இரகசியே கடிதப்போக்குவரத்துகளை கைப்பற்றிச் சென்றுவிட் டான். தனது செல்வாக்கு குறையாமலிருக்க அவ்வப்போது வழிவகைகள் கண்டுபிடித்துக் கொண்டே யிருந்தான். அனேக இளமாதர்களை கற்பழித்து வந்தான். இவனுக்குப் பிறக்கிற பிள்ளைகள் தான் புரட்சியை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்று சொல்லி அவ்விளம் பெண்களை ஏமாற்றி வந்தான். கடைசியாக தன்னுடனுழைத்துவந்த உண்மைப்புரட்சியாளனைக் கொன்றபின் ரஷ்யாவில் உயிர்துறந்தான்.

பாகுனின் நெக்கயேவுடன் ஒத்துழைத்து வந்தகாலையில் வாயினால் மட்டும் பிரசாரம் செய்து வரவில்லை. செய்கையில் அதாவது தனித்தனியாக ஆட்களை தலைவாங்கி வந்தான். இச்செய்கை, மார்க்ஸின் செல்வாக்கு பெற்ற ஜனால் கௌன் சிலில் எதிர்ப்புக்கு இடங்கொடுத்தது. பல ஆட்சேபணைகள் தோன்றலாயின. ராஜாங்கம் எதிரியானதால் ராஜாங்க நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் ராஜாங்கத்தை கவிழ்ப்பதிலேயே கருத்தாயிருக்க வேண்டுமென்றும் இவர் வாதாடினார்.

தொழிலாளர் சமூகத்தைக்குறித்து விரிந்தநிட்டத்தை மனதில் கொண்ட மார்க்ஸ் இத்தகைய காரியங்களுக்கு இணங்கவில்லை. அரசியலில் கலந்துவேலை செய்யவேண்டுமென்பதை இவர் ஆதரித்தார். தனித்தனியாக ஆட்களை தாக்குவதைக் கண்டித்தார். சர்வதேச தொழிலாள ஸ்னிட்சர்லாந்து வகுப்பில் பாகுனின் தனக்கு ஆதரவு பெற்றுக்கொண்டார். அந்த ஆதரவைக் கொண்டு 1870-ம் வருட மத்தியில் மார்க்ஸுக்கு விரோதமாக ஸ்விஸ்பெடரல் கமிட்டியை உண்டு பண்ணினார். அது போல் சோஷிய லிசத்துக்கும் அனார்க்கிசத்துக்கும் போர் தொடங்கலாயிற்று.

இந்தப் போர் ஆரம்பிப்பதற்குள் தொழிலாளர்களுக்கிடையே பெரிய துன்பம் சம்பவிக்கலாயிற்று. இதனால் சர்வதேச தொழிலாளர் சங்கமே பாதிக்கப்படலாயிற்று.

1870-ம் வருடம் ஜூலை மாதத்தில் ஐரோப்பா கண்டத்தில் பிராங்கோ—பிரஷ்யன் யுத்தம் ஆரம்பித்தது. பிரஞ்சுதேசம்

தோற்கடிக்கப் பட்டு விட்டது. பாரிஸ் நகரத்தை மூற்றுகை போட்டு விட்டார்கள்.

சக்ரவர்த்தி சிம்மாசனத்தி னின்று விரட்டியடிக்கப்பட் டான். பிரஜா ஆட்சி என்று பறைசாற்றப் பட்டது. 1871-ல் பிரஞ்சு தேசம் யுத்தத்தைக் கைவிட்டது. அரசனை ஆதரித்து வந்த மெஜாரிட்டியினர்களைக் கொண்ட ஒரு ஜனப் பிரதிநிதி சபை ஒரு மானங்கெட்ட ஒப்பந்தத்துக்கு சம்மதித்தது. இப்பொ ழுது பிரஞ்சு தேசத்தின் ஆட்சி அவர்களது கையில் வாலாயிற்று. தீவிர வாதிகளின் எதிர்ப்பையும் ஒழித்து விடவேண்டுமென்று எண்ணி பாரிசில் ஆதிக்கம் செலுத்திவந்த பாரிஸ்நேஷனல் கார்டை கைப்பற்ற முயன்றனர். இம்முயற்சி பலிக்கவில்லை. இவர்களை சுடும்படியாக உத்திரவிடப்பட்ட துருப்பு சுடமறுத்து விட்டது இதனால் சில மணி நேரத்திற்குள் சர்க்கார் ஓடிவிட் டார்கள். இத்தடன் பாரிஸ் ஆட்சியின் இடைக்காலகுறுகிய கதை முடிந்தது. தொழிலாளர் கை ஓங்கலாயிற்று.

அதைப்பற்றி இப்பொழுது விரிவாக எழுத இடமில்லை. ஆனால ஒன்றுமட்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. அதா வது ஆட்சி செலுத்துகிறகட்சியில்முன்றில்ஒரு பகுதியை இவர்கள் கைப்பற்றி விட்டனர். இந்தக்கட்சி வீழ்ச்சி அடையவே பிரான் சிலிருந்த சர்வதேசிய சங்கமும் வீழ்ச்சியடைந்து விட்டது. கூட் டம் கூட்டமாக தூக்கிவிடப்பட்டனர். மூதலாளி வர்க்கத்தார் தொழிலாளர் இயக்கத்தை நசுக்க — ஒழிக்க கையாண்ட முறை களை வாயினால் சொல்ல முடியாது. பிரஞ்சு முதலாளி ஆதிக் கத்தை ஒழிப்பது மிகுகாலம் செல்லும் என அங்குள்ள தொழி லாளர் நினைககும்படி அவ்வளவு அதைரியமடைந்து விட்டார் கள்.

இந்நிலையில், தலைவர்களுக்குள் தகராறு இருந்தாவருவதை யும் ஒருவருக்கொருவர் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டு வருவதையும் கண்ட தொழிலாளர் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறவர்கள் மனச்சோர்வு அடைபலாயினர். சர்வதேசிய தொழிளாளர் சங்கமே அழிந்துவிடுமோ என்றுகூட நினைக்க லாயினர்.

1872-ல் சர்வதேசிய தொழிலாளர்சங்கத்தின் அந்த மகா நாடு ஹேகுவில் கூடிற்று. மகாநாட்டிற்குமார்க்ஸும்எங்கல்ஸும் விஜயம் செய்திருந்தனர். பாகுனின் கலந்துகொள்ள வில்லை. அவருக்குப் பதிலாக குவில்லாயூம் ஸ்விஸ் தொகுதிக்கு பிரதிநிதி

யாக விஜயம் செய்திருந்தார். இப்பகாநாட்டில் மார்க்ஸ் சட்சியினர்க்கு மெஜாரிட்டியிருந்தது. பாகுனினையும் குவின்லாயூனையும் சங்கத்தை விட்டு நீக்க ஒரு தீர்மானம் கொண்டுவர மார்க்கஸ் கட்சியினர் முயன்றனர். அது சமயத்தில் லண்டனில் வசித்து வந்த ஸ்விஸ் தொழிலாளரான ஜங் என்பவர் யோசித்து செய்யும் படியாக மார்க்சையும் எஞ்சல்சையும் வேண்டிக் கொண்டார் ஆனால் எஞ்சல்ஸ் அதை லட்சியம் செய்யாமல் வேறட்சளை எண்ணி ஆய்ப்பித்தார். சோஷிய விசத்தையும் ஆனார்க் கிசத்தையும் குறித்து விவாதிக்க மார்க்கஸ் சம்மதிக்கவில்லை இவர்களால் பாகுனினைக் குறித்துக்கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறிற்று. மகாநாட்டில் பிளவு ஏற்படலாற்று.

இந்த இரு பிரிவினரும் இறகொடிந்த பறவைகளைப்போல் சிறிது காலம் கடத்தலானார்கள். 1873-ம் வருடம் நடந்த ஸ்பெயின் புரட்சியுடன் பாகுனின் கட்சி மறைந்தது.

1876-ல் பிலடல் பியாவில் கூடிய மகாநாட்டுடன் மார்க்ஸ் கட்சியை சேர்ந்தவர்கள் சங்கத்தைக் கைவிட்டனர். எனினும், மார்க்ஸின் சக்தி நாம் நினைத்ததற்கு மாறாகப் புரட்சியை குன்றச் செய்து விட்டது. இந்த கூஷ்ண திசைசக்குக் காரணம் இரண்டு. ஒன்று மார்க்ஸ் எழுதின "பிரான்ஸில் சிவில் யுத்தம்" என்ற சூறிக்கை. மற்றொன்று மார்க்ஸும், எஞ்சல்ஸும் கூடி எழுதின ஸ்டியாட்சியின் விரோதிகள் என்ற கட்டுரை.

மார்க்ஸின் உடல் எப்பொழுதும் மிகப்பல வீனமாயிருந்து வந்தது. அத்துடன் நோயும்குடிகொள்ளலாயிற்று அப்படியிருந்தப் அவர் படிப்பதை மட்டும் மட்டுப்படுத்தவில்லை. சதா நூல்கள் ஆராய்வதிலேயே இருந்து வந்தார். ரஷ்ய, அமெரிக்க முதலிய நாடுகளின் விவசாயத்தைப்பற்றி ஆராயத் தொடங்கினார். பண்ட மாற்றுதலைப் பற்றியும் பணம் லேவாதேவியைக் குறித்தும் விசாரணை செய்வதில் சிறிதும் பின்வாங்கவில்லை. கணித சாஸ்திரத்திலே நிபுணராக விளங்கினார். ரஷ்ய பாஷையையும் கற்றுக்கொண்டார். தன்னுடைய ஆராய்சியின் பலனை ஒன்றோடு ஒன்றாகச் சேர்த்து உருளைப்படுத்துவது அவருக்கு மிக கஷ்டமாயிருந்தது. அவரது மேஜையின்மீது குவிந்துகிடந்த கையெழுத்துப் பிரதிகளே அவரது ஆராய்ச்சியை நன்கு விளக்கிக் காட்டும் அத்காட்சியாயிருந்தன. அவர் ஆரம்பித்த வேலைகளை பூர்த்தி செய்வது அவருக்குப் பெரிய மலைபோலிருந்தது. அவர் நோயால் மிகத்துன்புற்ற காலையில் அவரது நண்பர் எஞ்சல்ஸ் அவரை ஓய்வு எடுத்துக்கொள்ள வேறு தேசத்

துக்கு அனுப்பிவைத்தார். சிறிது காலம் ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் தனது பழைய வேலையிலேயே ஈடுபடலாயினர். இதனால் இவரைப் பிரிந்திருந்த நோய் இவரை மீண்டும் பற்றிக் கொண்டது. ஆனால் இவரது மனம் தளரவில்லை. சடிதப் போக்குவரத்துக்களை அதிகமாக வைத்துக்கொள்ள முடியவில்லை. இதனால் சர்வ தேசிய சங்கமும் மறைந்தது. ஆனால் அவரது சேவை, அவர் செய்த நூல்கள் ஒன்றாவது வீண்போகவில்லை. ஐரோப்பா கண்டத்தின் பல பாகங்களிலும் இவரது கொள்கை உணரப்பட்டது. இறுதிவரை பேராடத் தகுந்த நண்பர்கள் தோன்றலாயின. இப்பொழுது அவரது கொள்கையை கடைப் பிடித்தவர்கள் 1848-ம் வருஷத் தியவர்களைப் போன்ற அரை குறையானவர்களல்ல. இவர்கள் தொழிலாளர்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களும், மரியாதை செய்யப்பட்டவர்களுமாவர். மார்க்ஸின் உடல்தான் மறைந்து விட்டதே ஒழிய அவரது உயிர், சக்தி இன்று உலகத்தையே ஆட்டி வருகின்றது.

அவரது உத்தம மனைவி ஜென்னி நாற்பத்தைந்து வருஷமிருந்து தனது கணவருடன் இணைபிரியாதிருந்துவிட்டு 1883-ம் வருடம் உயிர் துறந்தார். இந்தச் சம்பவம் மார்க்ஸின் மனதை மிக வாதித்தது. இடிபோல் இடித்தாற் போல் 1883-ம் வருடம் அவரது மூத்த குமாரத்தி ஜென்னியின் மரணம் அவருக்கு பெரிய துன்பத்தை உண்டு பண்ணிற்று. இரண்டாவது சம்பவத்திற்குப் பிறகு சில காலம் கழிந்தபின் நோய் சாந்த மடைடலாயினர். உடலிலும் வலிமை சிறிது குறைபடலாயிற்று. மார்ச்சு மாதம் 'காபிடல்' என்ற புத்தகத்தை முடித்துவிட எண்ணினார். அவ்வாறு எண்ணிய சில நாட்களுக்கெல்லாம் அவரது அந்திய காலம் நெருங்கிற்று. 1883-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ந்தேதி காலை தனது சாய்வு நாற்காலியிலிருந்து கொண்டு படித்துக்கொண்டிருந்தார். படித்த வண்ணமாகவே உயிர் துறந்தார். அவரது வீட்டு வேலைக்காரி ஏஞ்சல்ஸுக்கும் டாக்டருக்கும் ஆள் அனுப்பினாள். ஏஞ்சல்ஸ் வந்து பார்க்கையில் அவரது சாய்வு நாற்காலியில் நீண்ட நித்திரை போவதைக் கண்டார். மனம் நொந்தார்.

மார்க்ஸ் மறைந்து விட்டாலும் அவரது செய்கைகளை அவரது நண்பர் 1895-ம் வருடம் வரை செய்து வந்தார். மார்க்ஸ் எழுதிவைத்த கைப் பிரதிகளை சேகரித்து பிரசுரம் செய்தார். தன்னால் கூடியவரை தொழிலாளர் இயக்கத்துக்கே மார்க்ஸை

குறிபார்த்தல்.

(எம். சிங்காரவேலு)

உலகத்தில் இருந்துவரும் மூட நம்பிக்கைகளில் சில வற்றை மெஞ்ஞான முறைப்படி விசாரித்து வந்ததில் அவை இரண்டு காரணங்களால் உண்டாயிருக்க வேண்டுமென அறிந்தோம். அவையாவன, வெறும் பழக்க வார்த்தைகளைக் கொண்டே பல மூட நம்பிக்கைகள் நிலைத்து வருகின்றன. இரண்டாவது ஏக தேச சந்தர்ப்பங்களிலிருந்து மூட நம்பிக்கைகள் பிறந்திருக்க வேண்டுமெனவும் தெரிந்து கொண்டோம். சில மூட நம்பிக்கைகளுக்கு நமது ஆசையே (Our wish) காரணமாய் இருக்கலாமெனவும் தெரிந்தது. இந்தக் காரணமொன்றே பல பொய் நம்பிக்கைகளின் மேல் வைத்துள்ள விசுவாசத்திற்கு ஆதாரமென அறிதல் வேண்டும். நமது ஆசையின்படியே விஷயங்கள் நமக்கு அனுகூலமாகவே வேண்டுமென்ற மனப்பான்மை பெரும் பாலாருக்குண்டு. இந்த மனப்பான்மையாலேயே ஜோசியத்தின் மேலும், ஜாதகத்திலேயும், குறிசொல்லும் விஷயங்களிலேயும், கைபார்ப்பதிலேயும் மைபோட்டுப் பார்ப்பதிலேயும் நம்மவர்களில் பலருக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. கஷ்டப்படாமலே நமக்குச் செல்வம் வராதா? நாம் முயற்சி செய்யாமலே நட்மை விட்டுப் பிரிந்தவர்கள் திரும்பி வரமாட்டார்களா? உழைப்பின்றி சம்பத்தும், செல்வமும், கீர்த்தியும் வராதா? என்ற நோக்கங்கள் நமது மனதில் அடுத்து அடுத்து எழுவதால் ஆருடம் என்ன தெரிவிக்கின்றது? குறி சொல்லுகிறவன் நமக்கு என்ன ஆகாரமளிக்கின்றான்? கை ரேகை என்ன குறிக்கின்றது? என்று அறிய அவாக்கொண்டு இந்த மோச வார்த்தைகளின் மேல் நம்பிக்கை வைக்கின்றோம்.

குறிசொல்லும் விஷயங்களில் நமது பாமர ஜனங்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. நமக்குப் பல குறைகள் நேரிடும் போல் இயன்றதாம் அவ்வப்போது அறிவுறுத்தி வந்தார். ஆனாலும் மார்க்ஸஸிட் எவ்வளவோ குறைந்த அளவில் தான் தாம் வேலை செய்து வந்ததாக அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கின்றன. இந்தக் குறைகளை நீக்கிக்கொள்ள ஆசை மென் மேலும் உண்டாவது சகஜம். இந்த ஆசையால் குறி சொல்லு வது மெய்யோ பொய்யோ நம்முடைய கோரிக்கைப்படி நிறைவேறும் என்று அவன் சொல்லுகின்றபடியால் அவன் சொல்லின் மேல் நம்பிக்கை ஏற்படுகிறது. குறிசொல்வார் யார் என்று பார்ப்போம்.

குறிமேடையில் குறிசொல்லுகிறவர்களில் பலர் நரம்பு வியாதியால் (Nervous Disorder) பாதிக்கப்பட்டுள்ளார். அவர்கள் எளிதில் கோபம், சந்தோஷம் அடைவார்கள். (Easily Excited) இவர்களுடைய ஆடம்பரங்கள் பாமர ஜனங்களின் மனதை உருகச் செய்து விடுகின்றன. உடுக்கை சிலம்பு முதலிய வாத்தியங்கள் குறிகேட்க வந்திருப்போரை ஓர்வித மயக்கமுண்டாக்கக்கூடியனவாக இருக்கின்றன. குறி சொல்லும் இடங்களில் மதுரை வீரன் படமும், அதில் குதிரைசவாரி நாய்களுடன் செய்வதாக வரையப்பட்டு, தொங்க விட்டிருக்கும், குறிசொல்பவனும் பகல் வேஷத்திற்குரிய திருநீர், குங்குமம் திரேக முழுமையும் பூசிக்கொண்டு கழுத் தில் பொன் உத்திராக்கம், கைகளில் பொன் தோடா, பட் டாடை முதலிய வஸ்திரங்களை அணிந்து, உடுக்கை சிலம்பு டன் அவன் "இஷ்ட தேவதையை" வசியமாக்க முயற்சி செய் வான். இந்தவேஷங்களைக்கண்டோர் மயங்கி விடுகின்றார் கள். இவர்கள் மயக்கத்தை அதிகரிக்க, உடுக்கையையும் சிலம்பையும் உரத்துத் தட்ட ஆரம்பிப்பான். அவனுக்கு ஆவேசமும் வருவதாக நடிப்பான். இந்த ஆவேசத்திற்கு வேண்டிய மதுபானமும் அருந்துவதோடு புட்டியிலும் சார யம் மதுரை வீரனுக்காக படையல் போட்டிருக்கும். வேலை ஒன்றுமில்லாத வீணர்கள் அந்தக் குறி மேடைகளில் சென்று பக்திவான்களைப்போல் நடிப்பார்கள். இந்தச் சூதை அறி யாத பெண்கள் தங்கள் குறைகளை தெரிவிப்பார்கள். இவை களை ஏதோ அலட்சியமாகக் கேட்டு அதற்கு ஏதோ ஓர் பரி காரத்தைதத் தெரிவிப்பான், இந்த பித்தலாட்டங்களுக்கு ஏமா ந்து கையிலிருக்கும் பணத்தையோ, நகையையோ, தட்ச ணையாகக் கொடுப்பார்கள். இந்த விதமாக அந்தப்பெண்கள் மதிமோசம் போவார்கள்.

முக்கியமாக ஸ்திரீகள் பிள்ளை வரம் பெற குறி மேடை களுக்குப் போவதைப் பார்க்கலாம் அல்லது தனக்கும் தன புருஷனுக்குமுள்ள மனஸ்தாபத்தைக் குறித்து குறிகேட்கம்

போவது முண்டு. இந்த இரண்டு விஷயங்களைக் குறி சொல்லுகிறவன் எப்படித் தீர்ப்பானோ என்று விசாரிப்பதே கிடையாது. இதைப் போன்ற மூடநம்பிக்கையைக் காண்பதரிது. பிள்ளை பிறப்பதற்கு ஆண் பெண் இருவர் தியோகம் தக்க பருவத்தில் இருத்தல் வேண்டும். ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்களுடைய தியோகம் பக்குவப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு சந்ததி விருத்திக்குத் தடை பொன்றுமில்லை, ஆனால் ஏகதேசமாக ஏதோ ஒருவர் இருவருக்கு தியோக பக்குவமில்லாமலிருக்கும், அதனால் கர்ப்பம் தரிக்க முடியாமற் போகும், இதனையும் தீர்த்துக்கொள்ள ஔஷதங்களும், சிகிச்சைகளும் இருக்கின்றன. மலட்டு ஸ்திரீ புருஷர் சிற்சில சிகிச்சையால் சந்தான விருத்தி பெறுகிறார்கள். அப்படியும் சிலருக்கு குணப்படுவதில்லை. மலட்டு ஸ்திரீ புருஷர்களைப்போல் (Sterile man and woman) மலட்டு ஆடும், மாடும், புழுப் பூச்சிகளும செடிகளும், மரங்களும உலகில் ஏகமாதிரமாக இருக்கின்றன. விளையாத நிலங்களும், சில இருக்கின்றன. இவைகளை ஏதாவது செடி, மரம், புழு, பூச்சி, ஆடு, மாடுகளை உற்பத்தி செய்ய (Reproduce) மதுரை வீரனால் முடியாதிருக்க, ஸ்திரீ புருஷர்களை மாத்திரம் பிரஜா விருத்தி செய்வதென்றால் யார் நம்புவது? இதை முட்டாள்கள் தான் நம்பக்கூடும்? பிரஜாவிருத்திக்குத் தடையை நீக்க டாக்டர்களுக்கே தெரியுமே அல்லாது மோசக்காரர்களாகிய (Mountebanks and Charlatans) குறி சொல்லுகின்றவர்களுக்கு ஒன்றுமதெரியாது. மதுரை வீரன் படத்தாலும் உதிக்கை சிலம்பாலும், தீபத்தின் சுடர் அசைவாலும் மலட்டுத்தனம் நீங்குமாயின் இவ்வளவு சுலுவாக கோடான கோடி சதுப்பு நிலங்களை விளையவைக்கலாமே! பதர் நெற்களை (Chaff) கதிர்விடச் செய்யலாமே! சில சமயங்களில் குறிகேட்கப்போனவர்களுடைய கோரிக்கைகளைக் குறி சொல்லுகின்றவன் அவர்கள் அவனிடம் சொல்லாமலே அவன் தெரிந்துகொண்டவன் போல் தெரிவிக்கிறான். இதை மாயாவாதத்தில் (Spiritualism) எண்ணத்தைத் தெரியப்படுத்தாமலே தெரிந்து செல்லுவதென்று (Thought Reading) கூறுவார். இதனை மனோவானஞானமெனவும் (Occultism) கூறுவார். இத்தத்தத்துவத்தைத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஓரு சிறு புத்தகமாகிய (Evidence for the Supernatural by Ivor Tuckett priced I shilling) இதனை வாங்கிப் படிக்கலாம்.

இத்தக் குறிவித்தையில் சில மோசங்கள் நடக்கின்றன. சில இடங்களில்நகசிய ஆட்களைக்கொண்டு விசாரித்துத்தெரிந்து

கொண்ட பிறகு குறி சொல்லுகிறார்கள். சாதாரணமாக குடு குடுப்பைக்காரர்கள் இந்த மோசத்தைச் செய்கிறார்கள். சில் தங்களுடைய குறைகள் உதடு அசைவதாலும் கைவிரல்கள் ஆடுவதாலும் மெதுவாகத் தங்களுக்குள்ளே பேசிக்கொள்வ தாலும், தங்கள் முகப்பார்வையாலும் தெரியும்படி செய்கின் றார்கள். கூர்மையான பார்வையுடையோனாகிய குறி சொல் வோன் இந்த சைகைகளைக்கொண்டே அவர்களுடைய எண் ணங்களைத் தெரிந்து கொள்கின்றான். குறி சொல்லுகின் றவன் கேட்கும் கேள்விகளுக்குச் சொடுக்கும் விடைகளா லேயும் தங்களுக்குத் தெரியாமலே தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டு விடுகின்றார்கள்! இத்தியாதி தந்திரங்களால் குறி சொல்லுகின்றவன் தன்னைப் பிறர் நம்புமபடி செய்கின்றான். இந்த சூழ்ச்சிகளை அறியாத பாமர மக்கள் குறிகாரன் சொல்வதெல்லாம் மதுரை வீரன் அருளாலென்றும், தெய் வீகத்தன்மையாலென்றும் மதிமயங்கி மூட நம்பிக்கையை வளர்த்து வருகின்றார்கள். இந்தக் குறிமேடைகளில் எத் தனை பெயர் தங்கள் பொருளை இழந்தவர்கள்! மதியை இழந்தவர்கள்! மானத்தை இழந்தவர்கள். இவைகளுக்குக் கணக்கில்லை! ஆனால் நமக்கு, நமது நாட்டுக்கும் நன்மை பயக்க நமது சுயமரியாதை அதிர்ஷ்ட வசமாகத் தோன்றி இத்தியாதி மோசங்களை வெளிப்படுத்தி வருவது நம் நாட்டின் பாக்கியமேயாகும்.

கைரேகை குறி.

(Palmistry) அதாவது கைபார்த்துக் குறி சொல்லும் வித்தையொன்றுளது. கைரேகைகளைப் பார்த்து குறவர்கள் (Nomads) சாதாரணமாகக் கிராமங்களில் குறி சொல்வதுண்டு. குடுகுடுப்பைக்காரனும் இவ்வித குறிகளைச் சொல்லுகின்றான். பண்டார வேஷம் போட்டுக்கொண்டு, ஓலைச் சுவடியொன்றை கையிலேந்தி, கையைப் பார்த்துக் குறி சொல்லும் வேஷக்காரர்கள் சென்னைத் தெருக்களிலும் காட் டுப்புறங்களிலும் பார்க்கலாம். நமது சென்னை மூர் மார்க் கட்டு (Moor Market) க்கு அருகாமையில் அநேகர் ஆருடம் அதாவது ஓர் விதக்குறி சொல்லிப் பிழைக்கின்றார்கள். கை யைப்பார்க்கிறான், ஓலைச் சுவடியோ, அல்லது காகிதச் சுவடி யையோ திருப்புகின்றான். உடனே உனது காரியம் கைகூடு மென்கின்றான். உனது மகன் திரும்பி வருவான் என்கின் றான். உனது புருஷனுக்கு வேலை கிடைக்குமென்கின்றான். இத்தியாதி அற்ப விஷயங்களைத் தான் தெரிந்து சொல்லு வதுபோல நடித்து இந்தக் குறி சொன்னதற்கு கால் அணா

அதாவது மூன்றுபை பெறுகின்றான். இந்த ஏழை சொல்லும் குறிக்கும், 'இந்து' முதலிய பேப்பர்களில் விளம்பரப் படுத்தும் பிரசண்ட சோதிடருக்கும் ஒன்றும் வித்தியாசமில்லையென அறிக. ஒரே வித்தியாசமுண்டு. அதாவது ஒருவன் காலணாவுக்குக் குறியோ, சோதிடமோ, ஆருடமோ சொல்கின்றான். மற்றொருவன் ஒரு ரூபாய் முதல் 5, 10, 15, வரை பெறுகின்றான். இரண்டு பேரும் சொல்லும் சோதிடங்களில் ஒன்றும் மெய்யில்லை. எல்லாம் மனமயக்கே. பொய்யை நம்புவதற்கு வெறும் நம்பிக்கை (Simple Belief) தான் வேண்டும். லண்டன் பட்டணத்தில்கூட சில பெரிய தெருக்களில் கொட்டை கொட்டையான எழுத்துக்களால் 'இங்கு கைபார்த்துக் குறி சொல்லப்படும், இங்கு எல்லாக் குறைகளும் நிவர்த்திக்கப்படும் என்று விளம்பரமிடும் விளம்பரப் பலகைகளைப் பார்க்கலாம். அங்கும், இங்கும், எங்கும் பாமர ஜனங்கள் தங்கள் சஞ்சலங்களை நிரமமான வழிகளில் போக்கிக்கொள்ளாமல் மூட சோதிடனிடம் குறி கேட்டு மயங்குகின்றார்கள். அறிவை இழந்தவர்கள் தான் இத்தியாதி பித்தலாட்டங்களுக்கு இடம் கொடுப்பார்களேயொழிய அறிவுடையார் இந்த மூட நம்பிக்கைகளுக்கு இடம் கொடார்கள். உலகில் கோடான கோடி மக்கள் காலை முதல் இதுவரை உழைத்து தங்கள் ஜீவனத்தைச் செய்து உயிர் பிழைத்து வருகின்றார்கள். ஆனால் சிலர் வேலை யொன்றும் செய்யாமல் சோம்பல் கொண்டு அறிவையும், வளர்ச்செய்யாமல் பகுத்தறிவையும் கொன்று சிற்சில மோச வார்த்தைகளைக் கேட்டு ஓர் வித ஆறுதலை அடைகின்றார்கள். சோதிடம், ஆருடம், குறி முதலிய வித்தைகள் ஒருவகுப்பார் பிழைக்க ஏற்படுத்திக்கொண்ட உபாயங்களென அறிக. மெஞ்ஞான முறையால் இனிவரும் சம்பவங்களை அறிவதுபோல் இந்தக் குறிகளாலும், சோதிடத்தாலும், கைக்குறிகளாலும், ஒஸ்றும் தெரிந்துகொள்ள வகையில்லை. எங்கும் தெரிந்துகொண்டவருமில்லை. சோம்பேரிகள் மனத் திருப்திக்காக (Mental Satisfaction) உண்டாக்கிக் கொண்டது இந்த வித்தைகளே யொழிய பொது மக்களுக்கு பொதுப் பிரயோசனத்துக்கு ஏற்பட்ட வித்தைகள் அல்லவென அறிதல் வேண்டும்.

கையிலுள்ள கோடுகளைப்பார்த்து ஜோஸ்யம் சொல்லுவது உலக முழுமையும் பரவியுள்ள ஓர் வித்தையாகும். அது வெறும் பழக்கமே அல்லாது உண்மையல்ல. நமது கையிலுள்ள கோடுகளைப்போல் நமது ஒரு காலத்து பூர்வப்பங்

காளிகளாகிய வாலில்லாக் குரங்குகளுக்கும் உண்டு. இன்னும் தூரபங்காளிகளாகிய (Distant Cousins) வாலுடைய குரங்குகளுக்கும், கையில் கோடுகள் இருக்கின்றன. ஆனால் காட்சி சாலைகளில் வசிக்கும் காட்டு மனித குரங்குகளில் கைகளில் இருக்கும் கோடுகள் (Grooves) பூர்வ காலத்தில் நமது குரங்கு மூதாதைகள் மரத்தில் தாவிப்பிடித்து தாண்டுங்காலையில் ஆண்டானதால் மடிப்புகள். அந்த வம்சத்திலிருந்துவந்தவர்களாகிய நமக்கும் அந்த மடிப்புகள் பாரம்பரையாக (Hereditory) தோன்றுகின்றன. நமதுகைக்கோடுகள்காட்டுக்குரங்குகளின் வம்ச பரம்பரையாக வந்தவை, பல கோடி வருஷங்களாக நமது மூதாதைகள் மரங்களில் வாழுங்காலை தாவுவதற்கு தங்கள் கைகளை உபயோகித்து வந்து இருக்கவேண்டும். இன்றைக்கும் வாலுடைய குரங்குகளும், வாலில்லாக் காட்டு மனிதக்குரங்குகளும் அம்மாதிரியாகவே தாவிச்செல்கின்றன. அப்படித் தாவிச் செல்வதால் கைகளும் மடிக்க வேண்டி வருகின்றன. கைகள் மடியுண்ட இடங்களில் வரி வரியாகக் கோடுகள் உண்டாயின. அப்படி உண்டான கோடுகள்தான் அந்த சந்ததி மூலமாக நமக்கும் வந்திருக்கின்றன. இதுதான் நமது உள்ளங்கைகளில் உண்டாயிருக்கும் கோடுகளின் உற்பவம். மரத்தைத்தாண்ட மடிந்த இடங்களைக் கொண்டு நமது கடந்தகாலை எப்படி அறியக்கூடுமெனக் கேட்கின்றோம்? இரண்டு வரி ஐந்தாம் விரலுக்குக் கீழ் இருந்தால் அவனுக்கு இரண்டு பெண்ஜாதியாம்! ஆனால் ஒரு வரியுடைய பலருக்கு பல பெண்ஜாதிகள் இருப்பதைக் காணலாம்!! ஆகலின் இந்த வரிகளைக்கொண்டு நமது நடவடிக்கைகளைக்குறிப்பது ஆங்கிலத்தில் (pure guess) என்று சொல்லலாம். அதாவது வெறும் உத்தேசப்! இந்த வெறும் உத்தேசத்தை உண்மையென நினைத்துக்கொண்டு மோசம் போகின்றவர்கள் அநேகர் உள்ளர். இந்த ஆதாரத்திற்கு இன்னொரு ஞாயமும் உண்டு. விரல்கள் மடியுடை இடங்களில் கோடுகளைப் பார்க்கலாம். இந்தக்கோடுகள விரல்கள் மடியுண்டபடியால் விரல் மடிப்புகளிலெல்லாம் விரல் வரிகள் தோன்றியுள்ளது. இப்பிரத்தியட்சக் காட்சி போலவே மற்ற கை வரிகளும் தோன்றியுள்ளது. ஆனால் விரல் மடிப்புகளைக்கொண்டு நமது நடவடிக்கையைக் குறிக்கும் கைக்குறி சொல்வோர் இல்லை எனக்கருதுகின்றேன். அந்த விரல் மடிப்புகள் பிரயோஜனமில்லையெனில் மற்ற கைமடிப்புகள்மாத்திரம் பிரக்யாதி பெற்றது எவ்விதம்? எவனோ ஒருவன் ஒரு காலத்தில் கைக்கோடுகளைப்பார்த்து குறி சொல்லியிருப்

பான். இந்த உண்மையென நம்பி பழக்க வாசனையால் கையைப்பார்த்துக் குறிசொல்லும் பழக்கம் வந்திருக்க வேண்டும். இவ்விதமாகத்தான் நமது கையைப்பார்த்துக் குறி சொல்லும் பழக்கம் உண்டாகி இருத்தல் வேண்டும். எந்த மூடனும் இந்தப் பழக்கத்தைக் கையாளலாம். ஆனால் இந்த மூடநம்பிக்கையில் விசுவாசமுள்ளவர்களைப் பற்றித் தான் நாம் வருந்துகின்றோம்.

விளக்கு குறிபார்த்தல்.

விளக்கு வைத்துப் பார்த்தல் எனும் ஓர் மூடப்பழக்கம் பாமர மக்கள் வீடுகளில் வழங்கி வருகின்றது. ஒரு பூசாரி தன்முன் ஒரு விளக்கை ஏற்றி அந்த எரியும் சுடரை அந்த அர்மன் இந்த அம்மன் என்று வர்ணித்து இதைச்சொல்லம்மா, அதைச்சொல்லம்மாவென எரியும் சுடருடன் பேசுவதைப்போல் நடித்து, சுடர் அசையாமலிருந்தால் 'அம்மா உத்திரவு அளிக்கவில்லை' என்றும், அசைந்தால் 'அம்மா உத்திரவு கொடுத்தாள்' எனவும் அர்த்தப்படுத்திக்கொண்டு மக்களை ஏமாற்றும் விதம் ஒன்றுண்டு. இதுவும் ஓர் ஜீவன உபாயமென அறிக. கிராமாந்திரங்களில் ஏழைகள் நோய்ப்பட்டால் இம்மாதிரியான மூடப்பழக்கங்களைக்கொண்டு சிகிச்சிக்கப்பார்க்கின்றார்கள். இதனுடைய ஆபாசத்தை (Absurdity) சற்று விளக்கிப்பார்க்கவேண்டும். கோடான கோடி தீபங்கள் தெரிகின்றன. அசையாத தீபங்களும் தற்காலத்தில் பார்க்கின்றோம். அதாவது மின்சார (Electric) தீபங்கள். இத்தத் தீபச்சுடர்கள் காற்றிலும் அசைவதில்லை காற்றில்லாமல் போமர்கில் சுடர் அசைவற்று எரியும் காற்று வீசியதும் தீபச்சுடர்கள் அசைவதைப் பார்க்கலாம். இந்தச் சுடர்கள் அசேதனங்கள்; அதாவது உயிரற்றவை; நமது, சொல்லுக்கு அடங்காதவை, நமது சொல்லையும் கேட்கமுடியாதவை. நமது காலில் மிதிபடும் கல்லுக்கும் விளக்கில் எரியும் தீபச்சுடர்களுக்கும் மேற்கண்ட விஷயங்களில் வித்தியாசமில்லை. அப்படியிருக்க, எவ்விதம் சுடர்களுடன் பேசக் கூடுமோ அது நமக்கு விளங்கவில்லை. பைத்தியம் பிடித்தவர்கள்தான் சுடருடனும், சுவருடனும், செடி, மரங்களுடனும் பேசுவார்கள். இந்த விஷயத்தை போசியாமல் விளக்கு வைத்துப் பார்த்து அத்துடன்பேசுவதென்றால் என்ன மூடத்தனமென்று எண்ணவேண்டும்? பூசாரிதான் அவன் ஜீவனத்திற்கு மோசம் செய்கிறான், பஞ்சறிவுடைய ஏழை மக்கள் அவன் பித்தலாட்டத்திற்கு ஏமாந்து, அவன் பிதற்று வதைக்கேட்டு அவனை நம்புவதென்றால் என்ன மதிமோசம்!

விளக்கில் அம்மனோ சாத்தானோ, சனியனோ புகுந்து கொண்டு பூசாரி கேட்பதற்கெல்லாம் விடை கொடுப்பதாகச் சொன்னாலும் முன் நம்பிக்கையைவிட இது கப்பத்தகாதது, அதனினும் ஆபாசமேயாகும். தீபச்சுடர்களைக் காற்றில்லாத அறைகளில் எரியவைத்து நமக்கு வேண்டியபடி தீபச் சுடரை அசைபவைக்கலாம். திருஷ்டாந்தமாக இதனை யாரும் பரீட்சித்துப் பார்க்கலாம். காற்றில்லாத கூடத்து அறையில் விளக்கை ஏற்றி அதன் அருகே உட்கார்ந்து கொண்டு கரற்றை மெதுவாக வாயின் மூலமாக இழுத்தால் சுடர் அசைவற்று நிற்கும். அது நமது இஷ்டப்படி அசைய வேண்டுமானால், கையை ஆட்டினாலும், நமது தேகத்தை ஆட்டினாலும். அல்லது மெதுவாக ஊதினாலும் தீபச்சுடர் அசையும். இவ்விதச லனமற்ற நிலையையும், அசையும் நிலைமையையும் யாரும் செய்து காட்டலாம். ஆனால் இவ்விதமாகச் சுடர்களை அசையச் செய்வதையும், அசையாமல் இருக்கச செய்வதையும், யாரும் தகுந்த இடங்களில் செய்து காட்டலாம். இவ்விதமாக யாவரும் செய்துகாட்ட முடியும் போது எந்த அம்மனும், மாரியாத்தாளும், மதுரை வீரனும் தீபச் சுடரில் புகுந்து கொண்டதாக எண்ணுவதில்லையே. ஆனால் பூசாரி அதே மாதிரி அசையவைத்தால் அந்த அசைவு செய்வங்களால் உண்டானதாக எண்ணுவது பைத்தியக்காரத்தனமல்லாது வெறென்ன? காற்றில்லாமலிருந்தால் சுடர் அசைவற்று எரிகிறது. காற்றுப்பட்டால் அசைகிறது. ஆதலின் அசைவுக்கும், அசையாத்தன்மைக்கும் காற்றே காரணம். இதற்கு எந்த அம்மன்தயவும்வேண்டுவதில்லையே. இந்தப்பித்தலாட்டங்களைச் செய்யும் பூசாரிகளையும், அவர்கள் சொல்வதைக்கேட்கும் மாமர மக்களையும் ஒன்று கேட்கின்றோம். அதாவது காற்றடிக்கும் அறைகளில் அதாவது ஜன்னல்களுக்கு எதிரிலாகிலும், வாசல்களிலாகிலும், தெருக்களிலாகிலும், தீபத்தைக் குத்துவிளக்கில் ஏற்றி அதன் சுடரை அசைவற்று நிற்கும்படி செய்யுங்கள் பார்ப்போம். என்ன நீங்கள் உதத்து அம்மனை வர்ணித்தாலும் அந்த அம்மன் சுடரில் நுழையவே மாட்டாள்! இந்தத் தந்திரத்தை அறிந்த பூசாரி கூடத்து மூலையிலும் காற்றில்லா அறையிலுமே சுடரை எரியப்பார்ப்பான். இதுதான் பூசாரிகள் செய்துவரும் மந்திரம்.

அவசியமான காரியங்கள்.

இந்திய காட்டில், பெரும்பாலும் உலகத்தின் வேறு எங்கும் இல்லாததும் மனிதத்தன்மைக்கும், நியாயத்திற்கும், பகுத்தறிவிற்கும் ஒவ்வாததுமான கொடுமைகள் பல இருந்து வந்தாலும், அவற்றுள் அவசரமாய் தீர்க்கப்படவேண்டியதும், இந்தியர்கள் காட்டுமிராண்டிகள் அல்லவென்பதையும், மனிதத்தன்மையும் காகரீகமுடையவுமான சமூகம் எனவும் உலகத்தாரால் மதிக்கப்படவேண்டியதற்கு செய்யவேண்டுமானாலும், மற்றும் உலகிலுள்ள பெரும்பான்மையான காட்டார்களைப் போலவே அந்நிய காட்டினர்களின் உதவியின்றி தங்கள் காட்டைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும், ஆக்ஷி நிர்வாகம் செய்யவும் தகுதியுடையவர்கள் என்று சொல்லிக்கொள்ளவேண்டுமானாலும், முதலாவதாய் செய்யப்படவேண்டிய காரியம் இரண்டுண்டு என்று உறுதியாய்க் கூறுவோம். அவைகளில் முதலாவது எதுவென்றால், இந்திய மக்களிலேயே பலகோடி ஜனசங்கியை உள்ள பல சமூகங்களை பிறவியிலேயே தீண்டாதவர்கள் என்று கற்பித்து அவர்களை பகுத்தறிவற்ற மிருகங்களிலும் கேவலமாகவும் உணர்ச்சியற்ற பூச்சிபுழுக்களிலும் இழிவாகவும் கடத்துவதை ஒழிக்கவேண்டியதாகும்.

இரண்டாவதானது எதுவென்றால், பொதுவாக இந்தியப் பெண்கள் சமூகத்தையே அடியோடு, பிறவியில் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள் என்றும், ஆண்களுக்கு அடிமையாகவே இருக்க "கடவுளாலேயே" சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்றும் கற்பித்து அவர்களை ககரும் பிணங்களாக கடத்துவதை ஒழிக்கவேண்டிதாகும். ஆகவே மேற்கண்ட இந்த இரண்டு காரியங்களும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியாவில் இனி அரை கஷணம் கூட இருக்கவிடக்கூடாத வைகளாகும்,

இந்தக் காரணத்தாலேதான் நாம் மேற்கண்ட இரண்டு கொடுமைகளும் அழிக்கப்படாமல் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கேட்பதோ இந்தியாவின் பாதுகாப்பையும் ஆக்ஷி நிர்

வாகத்தையும் இந்திய மக்கள் தாங்களே பார்த்துக்கொள்ளு கிறோம் என்று சொல்லுவதோ மற்றும் இந்தியாவுக்கு அந்நி யருடைய சம்மந்தமே சிறிதும் வேண்டாம் என்று சொல்லு வதோ ஆகிய காரியங்கள் மூடியாதென்றும், அவை சுத்த அறியாமைத்தனமான தென்றும், இல்லாவிட்டால்—சுயநல சூழ்ச்சியே கொண்ட நாணயத்தவறான காரியமாகுமென்றும் சொல்லி வருகிறோம் என்பதோடு இப்படிச் சொல்லும் விஷ யத்தில் நமக்கு பயமோ, சந்தேகமோ கிடையாது என்றும் சொல்லுவோம். ஆதலால் தான் இவ்வித முட்டாள்தனமா னதும், சூழ்ச்சியானதுமான முயற்சிகளை நாம் எதிர்க்க வேண்டியவர்களாயுமிருக்கின்றோம்.

எனெனில் தங்கள் சமூகத்தாரென்றும், தங்கள் சகோ தரர்களென்றும், ஜீவகாருண்யமென்றும் கூட கருதாமல் தங் கள் நாட்டு மக்களுக்கே சுதந்திரமளிக்காமல், மனிதர்கள் என்றுகூட கருதாமல் அடிமைப்படுத்தி கொடுமைப்படுத்தி இழிவுபடுத்தித் தாழ்த்தி வைத்திருக்கும் மக்களிடம், மற்றும் அத்தாழ்த்தப்பட்ட மக்களின் நலத்தையோ, விடுதலையை யோ, ஒப்புவிப்பதென்றால் கசாப்புக்கடைக்காரரிடம் ஆடு களை ஒப்புவித்ததாகுமே தவிர வேறல்ல என்று கருதுவதால் தானேஒழிய வேறல்ல. இத்தத்துவமறியாத சில தீண் டப்படாதவரென்று தாழ்த்தப்பட்ட மக்களும், சுதந்தரம் அளிக்கம்படாதவர்கள் என்று அடிமைப்படுத்தப்பட்ட பெண் களும், தங்களுக்கு மற்றவர்களால் இழைக்கப்பட்ட கொடு மையையும் இழிவையும் கருதிப்பாராமல் "இந்திய சுதந்தரம்" "விடுதலை" என்னப்பட்ட கூப்பாடுகளில் கலந்துகொண்டு தாங்களும் கூப்பாடு போடுவதைக் காண்கின்றோம். ஆனா லும் அவர்களுக்கு உண்மைச் சுதந்தரம், விடுதலை என்பவை களின் பொருள்தெரியாததாலும், தெரியமுடியாமல் வைத்தி ருந்த வாசனையினாலும் இவ்வாறு அறியாமல் திரிகின்றார் கள் என்றே கருதி இருக்கின்றோம்.

தீண்டாமை என்னும் விஷயத்தில் இருக்கும் கொடுமை யும், மூடத்தனமும், மூர்க்கத்தனமும் யோசித்துப்பார்த்தால் அதை மன்னிக்கவோ, அலட்சியமாய்க்கருதவோ "காலைபார் த்துக்கொள்ளலாம், இப்போது அதற்கு என்ன அவசரம்" என்று காலந்தள்ளவோ சிறிதும் மனம் இடம்தருவதில்லை. ஒருவன் அதாவது பிறரைத் தீண்டாதார் எனக்கருதிக் கொடு மைப்படுத்துகின்றவர்களை அத்தீண்டாதார்களுக்கு இருக்கும்

உண்மையான கஷ்டத்தை உணரச்செய்யவேண்டுமானால் இப்போதைய வெள்ளைக்கார அரசாங்கத்தின் கீழ் அனுபவிக்கும் கொடுமைகள் என்பவைகள் போதாது என்றும், சிறிதும் சுதந்தாமும், சமத்துவமும் அற்றதும், சதா ராணுவச்சட்டம் அமுலில் இருப்பதுமான ஏதாவது ஒரு கொடுங்கோல் ஆட்சி இருந்தால்தான் இம்மாதிரி கொடுமைப்படுத்துகின்ற மக்களுக்கு உணர்ச்சிவந்து புத்திவருமென்றும் நமக்குச் சிற்சில சமயங்களிலே தோன்றுவதுமுண்டு. ஆனால் இந்தியாவை இம்மாதிரி மூர்க்கத்தனமும் காணயக்குறைவும் மாத்திரம் சூழ்ந்துகொண்டிருக்காமல் மூடத்தனமும் சேர்ந்து கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பதால் இன்னமும எவ்வளவு இழிவும் கொடுமையும் ஏற்பட்டாலும் இம்மாதிரியான மக்களுக்கு உண்மையான துன்பத்தை உணரத்தக்க நிலைமைவருவது கஷ்டமாக இருக்கும். என்றாலும் இந்நிலை மாறுதடையக்கூடும் என்ற உறுதியை உண்டாக்கத்தக்க நம்பிக்கை கொள்வதற்கு இடமில்லாமல் போகவில்லை.

இனி பெண்கள் விஷயத்தில் அவர்களுடைய சுதந்திரத்தையும் உணர்ச்சியையும் கட்டிப்போட்டிருக்கும் கொடுமையானது இதுபோலவே இந்தியர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியே இல்லை என்பதைக் காட்டவும் அவாகள் அடிமைகளின் குழந்தைகள் என்பதை ஒப்புத்கொள்ளவும் அதாரமானதென்றுதான் சொல்லவேண்டும்.

எப்படியெனில் இவ்விரண்டைப்பற்றி இந்திய விடுதலை வாதிகள், சுத்தந்தாவாதிகள், சுயேச்சைவாதிகள், தேசீயவாதிகள் மக்கள் நலஉரிமை வாதிகள் என்கின்ற கூட்டத்தார்களுக்குச் சிறிதும் உண்மையான கவலை இல்லாவிட்டாலும், மேற்கண்ட கூட்டத்தார்களில் 100-க்கு 90-பேர்களுக்கு மேலாக சுயநலங்கொண்ட நாணயமற்றவர்களாகவே காணப்படினும் இவர்களது முயற்சி இல்லாமலும் சில சமயங்களில் மேற்கண்ட சுயநல சூட்சிவாதிகளின் எதிர்ப்பிற்கும் இடைஞ்சலுக்கும் இடையிலும் வேறு ஒரு வழியில் கொடுமைகள் அனுபவிக்கும் மேற்கண்ட இருவகையாருக்கும் விமோசனம் ஏற்படுவதற்கு அறிகுறிகள் ஆங்காங்கு காணப்படுகின்றதைப் பார்க்கச் சிறிது மகிழ்ச்சி அடைகின்றோம். அதாவது இந்திய சுதேச சமஸ்தானங்கள் என்று சொல்லப்படும் மைசூர், பரோடா, காஷ்மீர், திருவனந்தபுரம் முதலிய சமஸ்தானங்கள் இந்தக் கொடுமைகளை ஒழிக்க ஒவ்வொரு துறையில் ஒவ்வொன்றுமாக முன் வந்திருக்கின்றன என்பதாகும்.

காஷ்மீர் சமஸ்தானத்தில் எந்த விஷயத்திலும் தீண்டாமையைப் பாவிக்கக்கூடாதென்றும், தீண்டப்படாதார் என்னும் வகுப்பாருக்கு மற்றவர்களைப்போல் சகல உரிமைகளும் அழிக்கப்பட்டிருப்பதோடு கல்வி விஷயத்தில் அவர்களுக்கு சாப்பாடுபோட்டு இலவசமாய் கற்றுக்கொடுக்கவேண்டும் என்றும் வெகுநாளைக்குமுன் தீர்மானமாயிருக்கும்விஷயம் முன்பேதெரிவித்திருக்கிறோம்.

மற்றும் திருவாங்கூர் சமஸ்தானத்தில் பெண்களைக் கடவுள்பேரால் விபசாரிகளாக்கி கோவில்களின் ஆதரவுகளைக் கொண்டு அவ்விபசாரத்தன்மையை நிலை நிறுத்துவதையும், அதன்றி நடந்துவரும் விபசாரத்னதயும் ஒழிக்கச் சட்டம் நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டுவந்ததையும் முன்னமே தெரிவித்திருக்கின்றோம்.

முன்பு மைசூர் சமஸ்தானத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் விஷயமாக யோசனை செய்யப்பட்டு அந்த யோசனையை அரசாங்கமும் ஜனப்பிரதிநிதிகளும் ஒப்புக்கொண்டு அதற்காக ஒரு கமிட்டியும் நியமித்து அக்கமிட்டியார் பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கலாம் என்ற தத்துவத்தை ஒப்புக்கொண்டு ஏகமனதான ரிப்போர்ட்டு அனுப்பியிருப்பதாயும் எல்லா தினசரிப் பத்திரிகைகளிலும் வெளியாக்கப்பட்டிருக்கிறது.

அதன் முக்கியபாகம் என்னவென்றால்:—

1. "பெண்கள் வார்சு சொத்துரிமை அனுபவிக்கத் தகுதியுடையவர்கள் அல்லவென்பது கொடுமையும் அநீதியுமாகும்.

2. பெண்கள் ஸ்ரீதனம், நன்கொடை முதலிய சொத்துக்களை அடைந்து அவைகளை வைத்து நிர்வாகித்து வரத் தக்கவர்கள் என்ற உரிமையும் வழமையும் இருக்கும்போது வாரீசான சொத்தை அடைய ஏன் தகுதியுடையவர்களாக மாட்டார்கள்?

3. பெண்களுக்கு வார்சு சொத்துரிமை இல்லையென்பது பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பதோடு பொதுவாக இந்து சமூக முன்னேற்றத்திற்கே கேடாயிருக்கிறது.

4. ஆகவே இவற்றிற்கான சட்டம் செய்யவேண்டியது பெண்கள் என்கின்ற காரணத்திற்காக அவர்களுக்கு எவ்விதச் சிவில் உரிமையும் தடுப்பது கூடாதென்று திட்டமாய் முடிவு செய்துவிட வேண்டியதுமான காலம் வந்துவிட்டது.

5. எத்தகவிதமான ஸ்ரீதன சொத்தையும் பெண்கள் தங்கள் இஷ்டப்படி "விநியோகித்துக்கொள்ளலாம்" என்பவைகளாகும்.

இவைகள் ஒருபுறமிருக்க மற்றொரு விஷயத்திலும் பெண்களுக்கு சிலசுதந்திரங்கள் அளிக்க அக்கமிட்டி சிபார்சு செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அவையென்னவெனில்:—

"புருஷன் மேகவியாதிக்காரனாகவாவது, கொடியதொத்த வியாதிக்காரனாகவாவது இருந்தாலும், வைப்பாட்டி வைத்திருந்தாலும், தாசி, வேசி வீடுகளுக்குப் போய்க்கொண்டிருப்பவனாயிருந்தாலும், மறு விவாகம் செய்து கொண்டவனாயிருந்தாலும், கொடுமையாய் நடத்தினாலும், வேறு மதத்திற்குப் போய்விட்டாலும், புருஷனைவிட்டுப் பிரிந்திருக்கவும், புருஷனிடம் ஜீவனாம்சம் பெறவும் பூரண உரிமையுண்டு" என்பதாகும்.

அதோடு மேற்படி விஷயங்களை அநுசரித்து ஒரு மசோதாவும் தயாரிக்கப்பட்டிருக்கின்றதாகவும் காணப்படுகிறது.

ஆகவே இந்தச் சட்டம் மைசூர் சமஸ்தான சட்ட சபையிலும் நிறைவேறி சட்டமாக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் சொத்துக்களின் அளவு விஷயங்களின் ஏதாவது வித்தியாசமிருந்தபோதிலும் பெண்களுக்குச் சொத்துரிமைக் கொள்கையும், பெண்கள் புருஷனை விட்டு விலகி இருந்து கொள்ளும் கொள்கைகளும், ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயம் கவனித்துப் பாராட்டத்தக்கதாகும்.

இந்தப்படி இந்தியாவிலுள்ள சுதேச இந்து சமஸ்தானங்களெல்லாம் ஒப்புக்கொண்டு சட்டம் செய்து கொண்டுவரும் போது பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள தேசீயவாதிகளுக்கும், பூரண சுயேச்சை வாதிகளுக்கும், ஜன நல உரிமை வாதிகளுக்கும் மாத்திரம் இக்கொள்கைகள் அவசியமானவைகள் என்றோ சட்டம் செய்யத்தக்கது என்றோ தோன்றப்படாமலிருப்பதானது இக்கூட்டத்தார்களின் ஞாணயக்குறைவையும், பொறுப்பற்ற தன்மையையும் நன்றாகக் காட்டுதற்கு ஒரு அறி குறியாகும்.

சாரதா சட்டம் (குழந்தை மணத்தடுப்பு சட்டம்) என்கின்ற ஒரு சட்டம் பிரிட்டிஸ் சர்க்கார் தயவினால் பாசாகியும் இந்திய தேசீய வாதிகளாலும் பூரண சுயேச்சை முயற்சியாலும் அது சரியானபடி அமுலுக்கு வரமுடியாமல் முட்டுக்கட்டை போடப்பட்டிருக்கிறது மிகவும் வெட்கக்கேடான காரியமாகும்.

மற்றும் அச்சட்டத்தை ஒழிப்பதாகத் தெரியப்படுத்தின வர்களை ராஜாங்க சட்டசபைக்கும் மாகாண சட்டசபைக்கும் நமது பிரதிநிதிகளாக அனுப்பியது இன்னமும் மானக்கேடான காரியமாகும்.

நமது தேசீய வாதிகள் என்னும் அரசியல் வாதிகள் காங்கரஸ்காரர்கள், இம்மாதிரி காரியங்களைச் சிறிதும் கவனியாமல் இருப்பதோடு, நாம் ஏதாவது இவற்றிற்காகப் பிரசாரம் செய்தால், "இது தேசீயத்திற்கு விரோதம்" தேசத்துரோகம் என்று சொல்லுவதும், வேறுயாராவது இவைகளுக்காகச் சட்டம் செய்ய சட்டசபைக்கு மசோதாக்கள் கொண்டுபோனால் "சீர்திருத்தங்கள் சட்டங்களின் மூலம் செய்து விடமுடியாது பிரசாரத்தின் மூலம் தான் செய்யவேண்டும்" என்று சொல்லுவதுமான தந்திரங் களினால்மக்களை ஏமாற்றிக் காலம் தள்ளிக்கொண்டு வருகிறார்கள்.

ஆகவே இந்த நிலைமையில் முதலில் நமது கடமை என்ன என்பதை வாசகர்களே யோசித்துப்பாருங்கள்.

நன்மைகளுக்கு கடவுள் பொறுப்பாளியானால், தீமைகளுக்கு யார் பொறுப்பாளி?

(ஜீன் மெஸ்லியர்)

மனப்பிராந்தி யுடையவர்கள் உலகத்திலே கடவுளருளிய நன்மைகளை மட்டும் பார்க்கிறார்கள். அமைதியான மனம் படைத்தவர்கள் உலகத்திலே நன்மையும் தீமையும் நிறைந் திருப்பதைப் பார்க்கிறார்கள். நாம் உயிர் வாழ்வதே கடவுள் கருணையினாலென்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் நமது வாழ்க்கை எப்பொழுதும் இன்பமயமாக இருக்கிறதா? "சூரி யனைப் பார். மக்கள் நன்மைக்காகத்தானே அவன் வெளிச் சம் தருகிறான், வெப்பம் தருகிறான்" என் று வேறு சிலர் கூறுகிறார்கள்! "பூமியைப் பார்" பழங்கள், புஷ்பங்கள் தரு கின்றன. நதிகள் தண்ணீர் தருகின்றன. உலகத்தைச் சூழ்ந்திருக்கும் கடல் வர்த்தகத்துக்கு உதவி செய்கிறது. மிரு கங்கள் நமக்கு பலவித உதவிகள் செய்கின்றன" என்றெல் லாம் பின்னும் சிலர் கூறுகிறார்கள். ஆம்! காணும் அவை களை எல்லாம் பார்க்கிறேன். சாத்தியமான பொழுதெல்லாம் அவைகளால் இன்பமும் அடைகிறேன். ஆனால் சில தேசங் களில் இந்த அழகான சூரியன் மக்களுக்குக் கொடுமையே செய்குறான். சில தேசங்களில் இந்தச் சூரியனைக் காணவே முடியவில்லை. அதிக பிரதேசங்களில் சூரிய வெப்பத்தி னால் புயற் காற்றுகள், நோய்கள் உண்டாகின்றன. வயல் கள் உலர்ந்து போகின்றன. மைதானங்களில் புல் பூண்டுகள் இல்லாமல் செய்து விடுகிறான். மரங்களில் பழங்கள் காணப் படவில்லை. கழனிகள் கரிந்து தரிசாய்க் கிடைக்கின்றன. கோடைக் கொடுமையினால் நதிகள், கிணறுகள் வறண்டு கிடக்கின்றன. இயற்கையின் கொடுமையைப் பார்த்து நான் ஏக்கமடைகிறேன்; மனம் புண்ணாகிறேன். உங்கள் பார்வை யில் கருணையுடையதாகத் தோன்றும் இற்கை இவ்வளவு கொடுமையாக இருப்பதைப் பார்த்து ஏக்கமடைகிறேன். வாசனைத் திரவியங்களையும், செல்வத்தையும் வெளிநாடி

களிலிருந்து கொண்டுவர உதவி புரியும் கடல், திரவியம் தேட வெளிநாடு செல்வோரை ஆயிரக்கணக்காகக் கொல்வதில்லையா?

மனிதன், தற்பெருமையினால் தானே உலகத்துக்கு நாயகன் என எண்ணிக்கொள்கிறான். தனக்கென ஒரு உலகத்தையும், கடவுளையும் சுயமாக சிருஷ்டித்துக் கொள்கிறான். தன்னிஷ்டப்படி இயற்கை அமைப்புகளை மாற்றிவிடலாமென்றும் பெருமை பாராட்டுகிறான். இதர ஜீவராசிகள் விஷயத்தில் ஒரு நாஸ்திகனைப் போல் பேசுகிறான். மனிதன் ஒழிந்த இதர ஜீவராசிகள் எல்லாம் கடவுளின் படைப்பு அல்லவென்றும், கடவுளின் கருணையைப்பெற மிருகங்களுக்கு உரிமையில்லை யென்றும் நம்புகிறான். மக்களுக்கு நன்மையுண்டானால் அது கடவுளின் கிருபை என்கிறான்; தீமையுண்டானால் கடவுளின் தண்டனை யென்கிறான். ஆனால் மிருகங்கள் விஷயத்தில் மட்டும் அவன் அவ்வாறு ஏன் எண்ணவில்லை? நீதிமானான கடவுள் பார்வையில் மிருகங்கள் சுகதுக்கங்கள் அனுபவிப்பதையும், ஆரோக்கியமாயும், நோயுற்றும் இருப்பதையும், உயிரோடிருந்து இறப்பதையும் மனிதன் பார்க்கவில்லையா? நோய்கள், துன்பங்கள், மரணம் மூலம் தண்டனை அனுபவிக்க மிருகங்கள் கடவுளுக்கு என்ன தீமை செய்தன? இதற்கு சமாதானம் கூற முடியாமல், சமய வாதிகள் மிருகங்களுக்கு உணர்ச்சியில்லை யென்று நொண்டி சமாதானம் கூறுகிறார்கள்.

அசம்பாவப் பேச்சுகளை மக்கள் எப்பொழுதுதான் விடுவார்கள்? இயற்கை தமக்காக சிருஷ்டிக்கப்பட வில்லை யென்பதை இனிமேலாவது அவர்கள் உணர்வார்களா? பிராணிகள் பிறப்பதும், இறப்பதும் சுக துக்கங்கள் அனுபவிப்பதும் இயற்கை என அறிந்து கொள்வார்களா? தாம் பெரிய புத்திசாலிகள் எனக் கூறிக்கொண்டாலும் தமது செயல்களால் துன்பங்கள் வருவித்துக் கொள்வதையும் மிருகங்கள் தமக்குத் தாமே துன்பம் செய்யாமல் சுகவாக வாழ்வதையும் ஒப்புக் கொள்வார்களா?

சுயமரியாதைக்காரர் சொல்லும் கடவுள்.

(கைவல்யம்)

விவேகமும் ஆராய்ச்சியும் சேரும்போதுதான் தெய்வமென்றும், தேவனென்றும், சாகியென்றும், சமயமென்றும், சாத்திரமென்றும், வழிபாடென்றும், தக்ஷணை என்றும் சொல்லிவரமாற்றி தங்கள் வயிற்றை நிரப்புவதுதான் புண்ணியமென்று சொல்லும் பார்ப்பார்களின் சமய வாழ்க்கையின் புரட்டுகளெல்லாம் உங்களுக்குத் அறிய முடியும். அதைத்தான் சுயமரியாதை இயக்கத்தில் பகுத்தறிவென்று சொல்லப்படுகிறது. அந்தப் பகுத்தறிவு உண்டாகுமிடத்தில்தான் மிருகத்தினின்றும் மனிதன் வேறுபடுகிறான். அந்த பகுத்தறிவைத்தான் சிந்தனா சக்தியென்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். யோகி யோகமென்றும், ஞானி ஞானமென்றும், கர்மி கடமை யென்றும், தீரன் முயற்சியென்றும், சமயவாதி கடவுளென்றும், சக்திவாதி சக்தியென்றும், காலவாதி காலமென்றும், உலகவாதி உலகமென்றும், சொல்லுவதெல்லாம் அந்தப்பகுத்தறிவைப்பற்றியதே யாகும்.

இந்து சமயத்தெய்வங்களுக்கெல்லாம் பூசை கைவேத்தியம் செய்வதில் பார்ப்பாருக்கு லாபம் உண்டு. உயர்ந்த தத்துவத்தை உபதேசிக்கவந்த வேதாந்திக்குக்கூடபாதகாணிக்கையும் பார்ப்பாரச்சோறும், தக்ஷணையும் கொடுத்தால்தான் மோட்சமுண்டு. சுயமரியாதை இயக்கக்கடவுளுக்கோ "எண்ணாமி கைவேத்தியம், ஓங்குமதி தூபதீபம்" என்று தாயுமானவர் சொன்னபடி விவேகமே அபிஷேகம் விசாரணையே பூசையாய் இருக்கிறது.

இந்து சமயத்தில் ஞானமே மோட்சம், ஞானம் விசாரணையால் வருமேயல்லாமல் பூசை, மந்திரம், வழிபாடு, பார்ப்பார போஜனம் இவைகளால் வராது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

கம்பராமாயணத்தில் கம்பர் இராமரைத் தெய்வமாகச் சொன்னார், அந்த ராமரே வசிட்டரிடம் தெய்வம் எது வன்று கேட்டார்.

அதற்கு வசிட்டர் தெய்வமென்பது கேவலமே அரியல்ல, அரனல்ல, பூத உடல் படைத்ததல்ல, செய்யப்படாத உணர்வான அறிவே தெய்வமென்று உபதேசித்தார். சீரங்கத்து அய்யங்கார்களின் உபத்திரவம் கம்பருக்கிருந்ததுபோல வால்மீகிக்கும் வசிட்டருக்குமில்லை. ஆதலால் தான் அவர் அவ்வளவு தைரியமாய் சொல்லி இருக்கவேண்டும். வேதாந்த குருவென்று இப்பொழுது யாத்திரை செய்யும் சங்கராச்சாரி ஒரு தெலுங்குப் பார்ப்பாரப் பண்டிதர் அவர் செய்த தேவி பாகவதத்தைப் பிரமாணம் காட்டி பக்த கோடிகளுக்கு உபதேசித்த ஞானவாசிட்டம் பிரமாணமாகாதா?

விஷய விசாரணையை உள்ளபடியே செய்வதற்கு பழய வட்டைத்தள்ளிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. சுயமான அனுபவமே சிறந்த பிரமாணமாகவிருக்க சுய அனுபவத்தில் விளங்கிக்கொண்டிருக்கும் உண்மைகளுக்கெல்லாம் பழய நூல்களின் ஆதாரங்களும் அவசியமில்லை. நமது துக்கங்களுக்கெல்லாம் காரணம் இயற்கையமைப்பைத் திருப்தி வைத்த ஏற்பாடுகளும் அதற்கு ஜீவனையே அடிமையாக அடைத்துக்கொண்டதுந்தான் என்பதை அறிவாளிகள் மறுப்பதில்லை.

நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட பிரகிருதியின் உபயோகங்களை யெல்லாம் கிறிஸ்தவ வேதங்களின் மதசம்பந்தநூல் ஆதாரங்களைக்காட்டியா கண்டுபிடிக்கப்பட்டன? அவைகளை காமும் நமது ஆசாரி பூசாரிகளும் கோவில்களும், தெய்வங்களும் அனுபவித்துத்தானே வருகின்றன. அதை அனுபவிப்பதற்கு இந்து சமய சாஸ்திரங்களில் ஆதாரம் தேடினோமா? அறிவும் அனுபோகமும் அவசியமும் தானே பிரமாணமாகவிருக்கிறது.

சுயமரியாதை இயக்கத்தார்கள் கடவுள் இல்லையென்றும் சொல்லுகிறார்கள் என்று சாதாரணமாகச் சொல்லுகிறார் களே யல்லாமல் கடவுள் என்றால் என்ன? எப்படியிருக்க வேண்டும்? எப்படியிருந்தால் கடவுள்? இவர்கள் உண்டென்றும் சொல்லும் கடவுள் எது? எந்தக் கடவுளை சுயமரியாதைச்

சங்கம் இல்லை என்கிறது? என்பதை ஆலோசித்துப்பார்ப்பதில்லை.

கடவுள் பொதுவானவர், நியாயவான், கருணாநிதி, என்று சொல்லுகிறார்கள். அப்பேர்ப்பட்ட கடவுளிருப்பதில் யாருக்குத்தான் ஆக்ஷேபணை? ஆனால் அந்த கடவுளின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி அவமதிக்கும்படிச் செய்து விட்டதற்குக் காரணமாகக்காட்டும் கடவுள் இருக்க நியாயமுண்டா என்பதே சுயமரியாதை இயக்கத்தின் கேள்வி.

கடவுள் சமத்துவமானவர் எல்லாவற்றிற்கும் சாக்ஷியாய் விளங்குகிறார் என்று சொல்லுவதில் யாருக்கும் ஆக்ஷேபணையிருக்காது. ஆனால் அந்தக்கடவுள் முகத்திலிருந்து ஒருவனை உண்டு பண்ணி இன்னொருவனைப் பாதத்திலிருந்துண்டு பண்ணி, வேதத்தைச் செய்து அதை முகத்திலிருந்து வந்தவனிடம் கொடுத்து, அவனே தன் பந்துவென்றும், அவனே தான் போற்றும் தேவனென்றும் அவனுக்குத்தான் தாஸ்ய அடிமை யென்றும்சொல்லி, பாதத்திலிருந்து வந்தவன் பட்ட பாடெல்லாம் முகத்திலிருந்து வந்தவனுக்குக் கொடுத்தால் தான் முத்திகொடுப்பேன் என்று சொல்லுவதாகச் சொல்லப் படும் கடவுள் ஆக்ஷேபணைக் குரியதா அல்லவா? அப்படி ஒரு கடவுளுமில்லை. இருக்கவுமாட்டாது. கடவுள் எனனும் பெயருக்கே அது விரோதம் என்னும் காரணங்களினால் தான் அந்தக் கடவுளை சுயமரியாதை இயக்கத்தார் இல்லை என்கிறார்கள்.

எதேனும் ஒரு ஜாதியாருக்குப் பெரிய அனுபூதி உண்டாயின் அது பிறருக்கும் கொடுக்கத்தக்கது என்னும் உத்தமஞானத்திற்கு விரோதமாக இருக்கும் கடவுளின் மனோபாவம் விசேடப்பட்டதாமோ? கடவுள் முகத்திலிருந்து வந்தவனே கடவுள் சொன்ன வேதத்தைப்படிக்க உரியவன் மற்றவன் படித்தால் கொடுமையான தண்டனை என்றும், முகத்திலிருந்து வந்தவன் மற்றவனுக்குச் சொல்லிக் கொடுத்தாலும் பாதத்திலிருந்துவந்தவன் படித்தாலும் கேட்டாலும் கடவுள் தண்டிப்பார் என்றும் சொல்லி மற்றவர்களின அறிவைத் தடைப்படுத்தின கடவுளின் ஆக்கினை ஆங்கிலேய அரசாட்சியில் அழுங்கி அழிந்து போனாலும் ராஜாசர். அண்ணாமலை செட்டியார் பள்ளியில் கடவுள் சொன்ன வேதத்துவப் பகுதியின் வகுப்பில்

பார்ப்பான் தவிர சிவ பெருமானுக்குள் புகுந்து கொண்டிருக்கும் சைவர்களையும், விஷ்ணு பெருமானை மேலே போட்டு மூடிக்கொண்டிருக்கும் வைணவர்களையும் கூட சேர்த்துக் கொள்ளுவதில்லை. இதற்குக் காரணமாக நிற்கும் கடவுள் நியாயத்திற்கோ, நீதிக்கோ ஒத்ததா? அப்படியும் ஒரு கடவுளிருப்பாரா? அப்படிச்சொன்ன ஒரு கடவுள் இல்லை என்று சொல்லுவது நியாயமல்லவா?

நியாயமில்லாத கடவுளை விட்டு நியாயமுடைய கடவுளை நம்புவதுதானே என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் கடவுள் பொது நியாயமுடையவர் என்று சொல்லுகிறார்களேயல்லாமல், நியாயமுடைய கடவுளை சொல்லிக்கொடுப்பவர்களும் உபதேசிக்கிறவர்களும் நமது ஆசாரி பூசாரி பண்டிதனிலுமில்லையே. அவர்கள் படித்த ஏடுகளுக்கும் அப்பாலுள்ள ஏடுகளிலுள்ளதாகச் சொல்லி நியாயமில்லாத கடவுளை அவர்களும் கட்டியழுது மற்றவர்களையும் கட்டி அழச்செய்துகொண்டே வருகிறார்கள். கடவுளைச்சொல்லிக்கொடுக்க பணங்கொடுக்கும் பணக்காரர்களுக்கும்கூட கடவுள் பொதுவானவர் என்னும் புத்தி புலப்படவில்லையே. அவர்களைச் சொல்லுவதிலும் குற்றமில்லை. நியாயமில்லாத கடவுளைப்பற்றியே அவர்களுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ஓடக்காரத்தெருவில் ஒரு டெண்ணைக்காட்டி ஒரு பெண்ணைக்கொடுப்பார்களாம். அது போலவும் சென்னையில் பெரிய வக்கீல்கள் தங்களைக் காட்டிப் பணம் வாங்கி வக்காலத்தில் தன் குமஸ்தா வக்கீலையும் கையெழுத்துப் போடச்செய்து கோர்ட்டிற்குத்தான் போகாமல் யாரையோ போகச்செய்வது போலவும், சாஸ்திரத்தின் ஒரு மூலையில் யாருக்குமெட்டாத இடத்தில் நியாயமாய், சத்தியமாய், பொதுவாய் ஒரு கடவுளிருப்பதாகச் சொல்லி, போன மாதம் தாசி வீதிக்குப் போய் பெண் ஜாதி சோபித்து, முகத்திடியும் பட்டு கோவிலுக்குள் குடி புகுந்திருக்கும் கடவுளையும், சைவக்குருவான சைவ மடாதிபதிகள்கூட தொட்டாலும் பக்கம்நெருக்கினாலும் தீட்டு ஆகிவிடும் என்று செல்லிவிட்டு குடி, விபசாரம், பொய் முதலியவைகளைக்கொண்ட பார்ப்பார் தொட்டால்தான் பரிசுத்தம் என்கிற கடவுளையல்லவோ காட்டுகிறார்கள். இந்த தெய்வத்தை ஆதாரமாகக்கொண்டிருக்கும் நமக்கு ஜனநாயகதத்துவம் விளங்குமா? வருமா? நமது தனித்தனி கடவுளுக்குத்தான் அதைப்பற்றித் தெரியுமா?

ஒவ்வொரு சமயத்திலும் கடவுளிருக்கிறார், அவரவர் கள் தேசத்தை அவரவர்கள் ஆளுவதற்கு அவரவர் கடவுள் கள் ஆசீர்வதிக்கின்றன. ஆனால்நமதுகடவுள் நமக்கு அவ்விதம் செய்யவில்லை. நாது தேசத்தில் நம்மை அடிமையாக்கி இருக்கிறது. நமது கடவுளிடம் நிபாயமும், நன்றியறிதலுமிருக் குமேயானால் நமதுநிலைமைமற்றதேசத்தானைப்போலவிருக்க வேண்டாமா? கடவுள் குற்றமானால் குறறமுள்ள கடவுளை விட்டு நீங்குவோம் நம் குற்றமானால் அக்குற்றத்தை விட்டு விலகுவோம்.

நமது கடவுள் நமது முன்னோர்களிடம் வந்து நேரிலும் ஆகாசவெளியிலும் பேசிப்போனதாக இதிகாச புராணங்க ளில் சொல்லப்படுகிறது. இப்பொழுதும் பலருக்குச் சொப்ப னம் சாதித்து வருவதாகச் சொல்லுகிறார்கள். அறுத்துச் சமைத்த கோழி உயிர் பெற்று பழனி மலை உச்சியில் கூவு கிறதாகவும், சமைத்த மீன் உயிர் பெற்று துள்ளிச் சரவணப் பொய்கையில்குதிப்பதாகவும், வருஷத்திற்கொருதாம்திருப்பதி மலையில் திருப்பதிப் பெருமாள் பார்ப்பாரப் பையனாக வரு வதாகவும், மகந்துவிடம் பகடையாடுவதும், தீர்த்தக்காவடி, பால் காவடி, உண்டிகை பிரார்த்தனை முதலியவைகள் கொண்டுவரச் சொற்பனம் சாதிப்பதாகவும் சொல்லுவதுமல் லாமல் ஒவ்வொரு கோவில்களிலும் ஒவ்வொரு மூர்த்தமாக எழுந்தருளி காட்சி கொடுத்து வருவதாகவும் சொல்லுகிறார் கள். அதுவுமல்லாமல் 2-3 வருஷத்திற்கு முன்மாசி மகத்தில் கும்பகோணம் மாமாங்கக்குளத்துக்குலைலாசத்திலிருந்து கங் கையைவரும்படியாகவும் உத்திரவு செய்திருக்கிறார். மாமாங் கக்குளத்திலுள்ள ஆனைக்கால் பூச்சி, சொறி, சிரங்கு, ரோகம், புண், வாந்திபேதி, வயிற்றுக்கடுப்பு, முதலிய பூச்சிகள் புனி தமான கங்கா ஜலத்தில் சாவதில்லை. அந்தப்பூச்சிகள் பக்த கோடிகளைப் பற்றிக்கொண்டு எமலோகத்திற்கு அனுப்பு வதுமல்லாமல் பக்தர்கள் மூலமாக ஊரெல்லாம் அவ்வியாதி கள் பரப்பவும்படுகின்றன. இப்பூச்சிகள் கோவில்களிலுள்ள பிர்மா, விஷ்ணு, சிவன், லெட்சுமி, சரஸ்வதி, பார்வதி முத லிய தீர்த்தங்களும், பால் பாயசம், பஞ்சாமிர்தம் முதலிய பிரசாதங்களிலும்எந்தப் புரோகித அர்ச்சனைமந்திரங்களினா லும் சாவதுமில்லை. அதனால் இதை உணர்ந்த முனிசிபா லிட்டி ஆஸ்பத்திரி மருந்தைப் போட்டு அப்பூச்சிகளைக் கொல்லவும வேண்டியிருந்தது. ஆனதால் நமது தீர்த்தம்

ஹிரசாதம் வழிபாடு ஆகியவைகளைகைவிட அறிவே வேண்டி யிருக்கிறது.

மேற்சொன்ன சக்திகளையெல்லாமுடைய நமது கடவுள் நமது விதிக்குக் கர்த்தாவான ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசாட்சியை ஆளுகிறவர்கள் ஏழெட்டு மந்திரிகள் தானே? அவர்களிடம் நமது குறைபாடுகளைப்பற்றி நமது கடவுள் ஒரு சொற்பனம் சாதித்துவிட்டால் நமது குறைபாடுகள் வெகு வாய்த்தீர்ந்துவிடாதா? இத்தனை கமிட்டியும் வேண்டிய திில்லை. யாரும் அடிபடவும், ஜெயிலுக்குப்போகவும் வேண் டாம். வீண்செலவுமில்லை. நமது பிரதிநிதிகள் பீச்சு ரோட் டில் அலைந்துதிரியவும் வேண்டாம்.

உலகசக்தியை நம் அறிவால் கண்டு செய்கையில் பயன் படுத்தலாம். எத்தனைக்கெத்தனை அந்த விதியை சுவக னிக்கிறோமோ அத்தனைக்கத்தனை நமது பாதையிலுள்ள தடைகள் விலகும். இந்த விதியின் ஞானத்தால் சைன்ஸ் என் னும் இயற்கை நூல்வழியால் பூமியில் விஷக்கிருமிகளை இல் லாமல் செய்துவிடுவேன், கல்விப்பஞ்சமும் சோற்றுப்பஞ்ச மும் இல்லாமல் செய்துவிடுவேன், ராஜ்யத்தின் பொதுகன் மைக்கும், தனி மனிதனுடைய ஸ்வதந்திரத்திற்கும் முரண் படாமல் செய்வேன் என்று துணிவுடன் கூறும் ஆங்கிலேய சாஸ்திர ஞானத்தை அரசாட்சி செய்யும் மந்திரிகளிடம், தண்ணியில், பள்ளியில், படிப்பில், வாத்தியாரில், பையனில், வீட்டில், வாசலில், கோவிலில், சுவாமியில், கச்சேரியில், கலி யாணத்தில், கருமாதியில், பிறவியில், அவன் தொட் டால் தீட்டு இவன் தொட்டால் பரிசுத்தம், என்னும் சாஸ் திரத்தில் உள்ள உண்மைகளை சொற்பனம் சாதிக்க நமது கடவுள்களுக்கு யோக்கியதைதானுண்டா?

மலவித மதுவருந்தி பலவித மாமிசத்தைத்தின்று, பல வித விபசாரம் செய்து பலவித பொய் சொல்லி, பலபேர் சொத்தை மோசம் செய்து வாழ்ந்தாலும் உயர்ந்த ஜாதி உயர்ந்த ஜாதிதான். சட்டம் படித்துத் தேறினாலும் சாஸ்தி ரம் படித்துச் சாமியானாலும், வேதம் படித்து அடிகளானா லும், சபையில் பேசிச் சட்டசபையில் ஸ்தானம் வகித்தா லும், கள் குடிக்காமல், கறிதின்னாமல் பொய்யும் புரட்டால் அந்நிபர் சொத்தை அபகரிக்காமல் வாழ்ந்தாலும் தாழ்ந்த

யாத்திரையும், புண்ணியமும்.

(சிதம்பரனார்)

யாத்திரை என்பது பிரயாணம்; அதாவது பல்வூர் களுக்கும் செல்லுவது. இந்த யாத்திரையை எல்லா மதத்தி னரும், எல்லாச் சாதியினரும் செய்துவந்தனர்; பண்டைக் காலத்தில் யாத்திரை செய்வதற்கு மதிப்பிருந்தது; அதில் சில நன்மையுங்கூட இருந்தது. தென்னாட்டுப் பார்ப்பனர்கள் காசியாத்திரை செய்யவேண்டுமென ஏற்படுத்தினர்; இப் பொழுதும் அவர்களுடைய கல்யாணச்சடங்கில் காசியாத் திரை போவதும் ஒரு சடங்காக இருக்கின்றது. வடநாட்டுப் பார்ப்பனர் இராமேசுவர யாத்திரை செய்வதை முக்கியமாக வைத்திருந்தனர். இதைப்போலவே மேல்நாட்டினர், அதா வது கிறிஸ்தவர்கள், எருசலேம் (ஜெருசலம்) யாத்திரை போ வதை சிறப்பாகவைத்திருந்தனர்; முஸ்லிம்கள் மெக்காவுக்கு

ஜாதி தாழ்ந்த ஜாதிதான் என்பதை மாற்ற சர்வ சூழ்ச்சி செய் யும் நமது கடவுள் சொற்பனம் சாதிக்க வெட்கப்படுகின்றதே.

ஆனதால் நாமெல்லாம் சேர்ந்து நமது கடவுளைப் பொதுக்கடவுளாக்குவோம். பொதுக் கடவுளுக்குத்தான் ஜனநாயகத்துவம் விளங்கும். நமக்கும் உபயோகப்படும் புளி போத்தரையும் பொங்கலும் தின்று கொழுத்து நம் குறையைத் தீர்க்காத கடவுளை யெல்லாம் விட்டு உலகப்பொது விதிக்கு ஒத்த பொது கடவுளை எல்லாரும் கடைப்பிடியுங்களென்றே சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறது. உள்ளம் கடந்து நிற் பது சிந்தனா சக்தியின் அறிவே யாகும். அந்த அறிவை எல்லாரும் தெரிந்துகொண்டால் பார்ப்பானின் ஏமாற்றுப் பலிக்காதென்று அதை யாரும் படிக்கக்கூடாது என்று செல் வாக்குடைய மடையர்களைக் கொண்டு சித்தாந்தப் படுத்தி விட்டார்கள். அண்ணாமலைப்பல்லியும் அதற்காளாயிருக் கிறது.

யாத்திரை செய்வதை முக்கியமாகக் கருதுகின்றனர்; சீனர்கள் புத்தர் பிறந்த இந்தியாவுக்கு யாத்திரை செய்வதைச் சிறந்ததாகக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு நாட்டினரும், ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் மதத்தலைவர்கள் பிறந்த இடங்களையும், தங்கள் கடவுள் இருப்பதாகக் கருதும் இடங்களையும் யாத்திரை ஸ்தலங்களாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

யாத்திரை செய்வதனால், நல்ல ஆரோக்கியத்தைப்பெறலாம்; நினைத்த காரியங்களை அடையலாம்' உலகில் சுகம் அடையலாம்; தாம் செய்த பாவங்கள் நீங்கும்; என்று நம்பி மூடமக்கள் யாத்திரை செய்தனர்; யாத்திரை செய்வதை இகத்துக்குரிய காரியமாகக் கருதியவர்கள் சிலரே; பெரும்பாலான மக்கள் யாத்திரையைப் பரத்துக்குரிய காரியமாகவே கருதினர். ஆனால் உண்மையில் யாத்திரை ஏற்பட்டதன் கருத்து, மக்களைச் சுகாதாரமுடையவராக வாழச் செய்யவேண்டும்; உலக விஷயங்களை அறிந்தவராக வாழச்செய்யவேண்டும்; என்பதேயாகும்.

பண்டை காளில் யாத்திரை செய்யவேண்டுமானால் வெகுதூரத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தையடைய வேண்டுமானால் அது எளிதான காரியமல்ல், மிகவும் கஷ்டமான காரியம்; இக்காலத்தைப்போல ரயில், மோட்டார், ஆகாயவிமானம், முதலிய சாதனங்கள் இல்லாயைால், பல நாட்கள், பலமாதங்கள், பலவருஷங்கள் பிரயாணம் பண்ணவேண்டும்; ஊர்கள் வழியே நடக்கவேரும், மலைச்சாரல்களின்வழியே போகும்படிவேரும்; காடுகளின் வழியே செல்லும்படி வேரும்; பல ஆறுகளை ஓடங்களின்மூலம் கடந்து செல்லும்படிவேரும்; இவ்வாறு பல இயற்கைஸ்தலங்களில் எல்லாம் யாத்திரை செய்த பின்னரே கடைசியில் குறிப்பிட்ட இடத்தை அடையலாம். மீண்டும் தமது சொந்த ஊருக்குத் திரும்பும்போதும் முன்சென்ற வழியே திரும்பவேண்டும்.

இவ்வாறு பல இயற்கைகளைக் காண்பதனால், மக்களின் மனதில் உள்ள கவலைகள அகலும்; மனதில் மிகுந்த சந்துஷ்டி உண்டாகும். இயற்கையின் மேற்படிந்த காற்றில் செல்லுவதால் உடலில் உள்ள பிணிகளும் அகலும்; சரீர திடமும் உண்டாகும்; பல இடங்களையும், பல இயற்கை அதிசயங்களையும் காண்பதனால் அறிவு வளர்ச்சியும், இயற்கைப்

பொருள் ஆராய்ச்சியும் உண்டாகும், ஆங்காங்கே வாழும் மக்களுடைய நாகரீகங்களையும் அறிந்து கொள்ளலாம், இவ் வாறு மனக்கவலை நீங்கித் சந்தோஷமும் ஊக்கமும் பெறுவ தனாலும், உடல்நோய் நீங்கிக் திடகாத்திரம் பெறுவதனாலும் பகுத்தறிவும் உலக அறிவும் பெறுவதனாலும், அவர்கள் தாங் கள் செய்து முடிக்க நினைக்கும் எந்தக்காரியங்களையும் எளி தில் செய்து முடித்துவிடலாம்.

ஆகையால் ஒரு காரியத்தையும் செய்து முடிக்கக்கூடிய உடல்பலமும், மனஊக்கமும், அறிவுத்திறமையும் இல்லாத வர்கள் யாத்திரை செய்து வந்தவுடன் அவற்றைப்பெறுவ ராயினர்? இந்த நிகழ்ச்சியைக்கண்ட மூடமக்களும், அறி வுடையவர்களிற் பலருங்கூட யாத்திரை செய்வதைத் தெய் வீகசம்பந்த முடையதாக, அதனால் தெய்வத்தன்மை பெறு வதாகக்கூறிவிட்டனர், இதைப்பல நூல்களிலும் எழுதி வைத்துவிட்டனர். இதற்கென்றே பல புராணங்களும் ஏற் பட்டுவிட்டன, பிறகு குறிப்பிட்ட யாத்திரை ஸ்தலங்களுக் கெல்லாம் தனித்தனிப் புராணங்களும், ஏற்படுத்திவிட்டனர். யாத்திரை செய்பவர்கள் அந்தந்தஸ்தலங்களிலும் பல சடங்கு களைச் செய்யவேண்டுமென்றும் ஏற்படுத்திவிட்டனர். ஆகவே யாத்திரையைப் புரோகிதக் கூட்டத்தார் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமாகக் கொண்டனர். ஜனங் களும் யாத்திரையைத் தெய்வீக முள்ளதாகக்கருதிய காரண த்தால் புரோகிதர்கள் விரித்த வலைக்குள் மாட்டிக் கொண்டனர்.

இந்த மூடப்பழக்கத்தால் இன்றும், யாத்திரையைத் தெய்வீகத்தன்மையுடையதாகத் கருதி அதைச் செய்கின்ற கூட்டத்தார் நமது நாட்டில் அதிகமாக இருக்கின்றனர். வியா தியினால் வருந்துகின்றவர்கள் ஏழைகள் முதல் பணக்காரர் வரை எல்லோரும், யாத்திரை செய்வதாக ஒவ்வொரு ஊர் களைக் குறிப்பிட்டு வேண்டிக்கொள்ளுகின்றனர். இராமேசு வர யாத்திரை செய்வதாகவும், திருப்பதியாத்திரை செய்வ தாகவும், பழனி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், வைத்தீ சுவரன் கோயில், குன்றக்குடி, சுவாமிமலை, திருவண்ணா மலை, சென்னிமலை, முதலிய ஊர்களில் வசிக்கின்ற சாமிகளுக்கு நேர்த்திக் கடன்கள் செய்வதாகவும் வேண்டிக் கொள்ளுகின்றனர். இவ்வாறு வேண்டிக்கொள்ளுவதோடு மாத்திரம் நிற்பதில்லை. வைத்தியர்களையும், டாக்டர்களை யும் அழைத்து அவர்களிடம், தங்கள் வியாதியைத்தெரிவித்து

மருந்தும் சாப்பிடுகின்றனர். இவர்கள் மருந்தினால் வியாதி குணப்பட்டதாக நினைப்பதில்லை, தாங்கள்வேண்டிக் கொண்ட சுவாமிகள்தான் தங்கள் உயிரைக் காப்பாற்றிவிட்டதாக நினைத்துக்கொள்ளுகின்றனர். பிறகு வேண்டிக்கொண்டபடி அந்த ஊர்களுக்கு யாத்திரை செய்கின்றனர். இதனால் ராளமான பொருளை விரையஞ்செய்கின்றனர். இதுவுமன்றி, சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற படிப்பாளிகளும், சயின்சு படித்தவர்களுங்கூட பெண்களுக்கு எப்படிக் கர்ப்பம் தரிக்கிறது என்பதையுணர்ந்திருப்பவர்களுங்கூட, இராமேஸ்வரம் போவதால் பிள்ளை பிறக்குமென்றும், திருப்பதிக்குபோவதால் பிள்ளை பிறக்குமென்றும், பக்கிரி மஸ்தான் கொடுக்கும் தண்ணீரைக் குடித்தால் பிள்ளை பிறக்கும் என்றும் கம்புகின்றனர். இதற்காக ராளமான பொருளைச் செலவு செய்துகொண்டு யாத்திரை செய்கின்றனர். இந்த கையமுட்டாள்தனம் நமது மக்களிடம் இருப்பதற்குக் காரணம், பண்டைக்காலமுதல் நமது மனதில் படிந்திருக்கும் கடவுள், ஆன்மா, நரகம், மோட்சம், அவதாரம், மகான், மகாத்மா, ஆழ்வார், நாயன்மார் முதலிய மூடநம்பிக்கைகளல்லவா?

இப்படி ஒரு காரியத்தைக் குறித்து வேண்டிக்கொண்டு யாத்திரை செய்வதுமல்லாமல், ஒரு வேண்டுகோளும் இல்லாமல்யாத்திரை செய்கின்றவர்கள் அனேகர். சாதாரணமாகவே புண்ணிய ஸ்தலங்களுக்குப் போனால்—அங்குள்ள சுவாமிகளை வணங்கினால் பாசிபடிந்த அழுக்குத் தண்ணீர்க் குட்டைகளில் முழுகினால் புண்ணியம் உண்டாகும், தாம் செய்த அக்கிரமத்தின் பாவங்கள் போகும், மோட்சம் கிடைக்கும் என்ற மூட நம்பிக்கையுடன், உற்சவகாலங்களில், சிரங்கம், சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை, மாயவரம், திருவாரூர், திருவிடைமருதூர், சீர்காழி போன்ற ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்கின்ற ஜனங்கள் எவ்வளவு? இவ்வாறு செய்யும் யாத்திரைகளால் இருக்கின்ற பிணிகளுடன் இன்னும் பல பிணிகளைச்சம்பாதித்துக் கொள்வதும், ரயில்வே கம்பெனிக்கும், யாத்திரை ஸ்தலங்களில் உட்கார்ந்துகொண்டு போவோர், வருவோர் பொருளை, மோட்சமென்றும், நரகமென்றுஞ் சொல்லித் தட்டிப்பறிக்கும் சோம்பேறிப் பார்ப்பனர்களுக்குங் கொட்டிக்கொடுப்பதுதான் கண்ட பலன்.

இவ்வாறுள்ள இந்துக்களின் மூட நம்பிக்கையை உணர்ந்துதான் ரயில்வே கம்பெனிக்காரர்களும், யாத்திரை ஸ்தலங்களைப்பற்றி விளம்பரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆண் பெண் சமத்துவம்.

(மு.)

ஆண் மக்கள் தங்களுடைய பெண் மக்களை அதாவது தாங்கள் மிகுதியும் மரியாதை செலுத்தும் தாய்மார்களாயிருந்தாலும் சரி, அன்பு செலுத்தும் சகோதரியாயிருந்தாலும் சரி, காதலுக்குரித்தான மனைவிகளாயிருந்தாலும் சரி, ஒரே படியாக அவர்களைக் கேவலமாகவே எண்ணியும், மதித்தும் வருவது சகஜமாக இருந்து வருகிறது. நமது காட்டில் வெகுகாலமாக இம்மாதிரி பெண்களை இழிவாகக் கருதப்படுவதற்கு நமது சாஸ்திரங்களும், பண்டிதர்களும் ஒவ்வொரு ஸ்தலத்தின் புராணக்கதைகளையும் எடுத்து விளம்பரம் பண்ணுகின்றனர். அவைகளைப்படங்களின் மூலம் விவரித்துக்காட்டி இந்துக்களை யாத்திரை செய்யச் சொல்லுகின்றனர். இந்துக்கள் ஸ்தலயாத்திரை செய்வதை நிறுத்திவிட்டால்—அதாவது முட்டாள்தனம் நீங்கினால் முதலில் ரயில்வே கம்பெனிக்காரர்களின் வரும்படியில் பாதி குறைந்து விடுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை,

இந்துக்கள் யாத்திரை செய்வதனால், பாவம் போகின்றது, புண்ணியம் உண்டாகின்றது என்ற குருட்டு நம்பிக்கையை ஒழித்து விட்டு, யாத்திரையினால் சரீர நன்மை உண்டாகின்றது, அறிவு வளர்ச்சியுண்டாகின்றது என்பதை மாத்திரம் நம்புவார்களானால் அவர்கள் யாத்திரை செய்ய வேண்டிய அவசியமேயில்லை. நல்ல தேகப்பயிற்சி செய்வதனாலும், அறிவு நூல்களைக் கற்பதனாலும், பத்திரிகைகளைப் படிப்பதனாலும், சுகாதாரமான காலங்களில் பெரிய நகரங்களிலுள்ள ஒவ்வொரு அதிசயங்களையும் காண்பதனாலும், இயற்கைத் தோற்றங்களைக்கண்டு உணர்வதனாலும் நல்ல திடகாத்திரத்தையும், சிறந்த அறிவையும் பெறலாம் என்பது நிச்சயம். ஆகையால் வீண் பிரேமை கொண்டு உற்சவம், யாத்திரை என்று சொல்லிக்கொண்டு, பொருட் செலவுக்கும், குருட்டு நம்பிக்கைக்கும் இடம் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

பெரியோர்களும், முற்றும் துறந்த முனிவர்களென்று சொல்லப்பட்டவர்களும், ஒருவித காரணமுமின்றி பெண்களைக் கேவலமாக வர்ணித்து வந்ததோடு, பாரபக்ஷமாக ஏட்டிலும் எழுதிவைத்திருக்கின்றனர். இதைப்படிக்கும் மக்கள் சாதாரணமாக தங்கள் புத்தறிவைக்கொண்டே ஆராயாமல் தங்கள் பெண் மக்களைக் கேவலமாக நடத்தி வந்ததோடு அவர்களுக்கு எவ்விதத்திலும் சமத்துவம் ஏற்படாதபடி சட்டதிட்டங்களையும் செய்து அதைப் பழக்கத்திலும் கொண்டு வந்து விட்டார்கள். இந்த பழக்கமானது இந்தியர் ஒவ்வொருவருடைய மனதிலும் ஆழமாகப் பதிந்துவிட்டது. சுயமரியாதை இயக்கத்தின் பலனால் மக்கள் சிறிது சிறிதாக உண்மையை உணர்ந்து வருகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஆண் பெண் சமத்துவத்தைப்பற்றி மேனாட்டு மனோதத்வ நிபுணர்கள் செய்யும் முடிவையும் நாம் பெரிதும் கவனிக்கவேண்டியது அவசியம்.

ஆடவர்கள் சாதாரணமாகப் பெண்களை "பேதையர்க" ளென்று அழைப்பதில் எவரும் பின்வாங்குவதில்லை. அடுப்பங்கரையில் சட்டி சுரண்டும் அம்மையர்களைத்தான் இவ்வாறு கூறிவிடுகிறார்களென்றாலோ தற்கால படிப்புப் படித்து ஆண்களைப்போலவே பி ஏ., எம். ஏ., பட்டம் பெற்றவர்களையும்கூட "எப்படி யிருந்தாலும் பெண்புத்தி பின்புத்திதானே; பேதமை என்பது சாதர்க்கணிகலன்" என்று அலட்சியமாகக்கூறி விடுகிறார்கள். இதைப்போல் பாமர மக்கள் கூறுவதுதான் ஒருபுறமென்றால் படித்த ஆண்களும் இவ்வாறு கூறுவதற்கு கூச்சமடைவதில்லை. அவர்கள் கூறுவதெல்லாம் என்ன? பெண்களுக்கு "மூளையில்லை" என்பதுதான் பொதுவானது. இது மனிதனுடைய பழக்க வாசனையா, அல்லது இயற்கை வாசனையா என்றுகூட நாம் சில சமயங்களில் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. என்றாலும் இது ஒரு அலட்சிய புத்தியினாலும், தற்பெருமையினாலும் நாளாவட்டத்தில் நிலை பெற்றுவிட்ட ஒரு தப்பபிப்பிராயமென்றே கூறவேண்டும். இந்தக்காரணத்தினாலேயே அவர்களை அலட்சியம் செய்து சரியான கல்வியை அளிக்காமல் இருந்து விட்டார்களெனக் கூறலாம். பெண்கள் புத்தியில்லாதவர்களென்று பொதுவாகக் கருதப்படுவதால் ஒவ்வொரு ஆடவரும் தங்கள் பெண்டிர்க்கு எல்லாவிஷயத்திலுமே தங்களுடைய "புத்திசாலித்தனமான" யோசனைகளைக் கூறமுன் வந்து விடுகிறார்கள். சமைக்கின்ற வேலை முதற்கொண்டு வீட்டு வேலைகள் சகலமும் சேர்த்துப் பின்னை பாட

மரிப்பு வரையிலுங்கூட விஷயங்கள் தங்களுக்கு எந்த விதத்திலும் அனுபோகமில்லாதிருந்துங்கூட தங்களுக்கு அதிக புத்தியுண்டு என்கின்ற ஒரு தற்பெருமையினால்—எதையும் யூகித்துச் சொல்லக்கூடிய திறமை உண்டென்கிற அசட்டுத் தைரியத்தால் தங்கள் யோசனையைப் பெண்களுக்குக் கூறமுன் வந்துவிடுகிறார்கள். இந்த சமபவமானது எந்தக்குடும்பத்திலும் சகஜமானதென்றாலும் அவர்கள் அப்படிக்கூறும் சந்தர்ப்பங்கள் நேரும் போதெல்லாம் குடும்பத்திற்குள் கொஞ்சம் "முறு முறுப்பு" ஏற்படாமல் போவதில்லை. சாதாரண வீட்டிலுள்ள பெண்டிர் அந்த "நிபுணத்தனமான" யோசனையை எதிர்த்துக் கண்டிக்காமல் விடுவதில்லை. சிலசமயம் ஆத்திரம் பொங்கி தாங்கள் எப்பொழுதும் காட்டும் அடக்கத்தையும் கூட மீறி "நீங்கள் பேசுவது இன்னதென்றே புரியாமல் பேசுகிறீர்கள்; உங்கள் வேலையைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூட சொல்லி விடுவார்கள். ஆடவர் தற்பெருமைக்குச் சிறிது ஆட்டங்கொடுத்தாலும் தனது படிப்பை விடுவதில்லை. ஏனெனில் தன் பெண்ஜாதியைவிட இல்லை, மற்ற எந்தப்பெண்களையும் விடவே தனக்கு "அதிகமான மூளை" இருப்பதாகவே அவரது எண்ணம். அதோடு அதை "நிரூபித்து" காட்டக்கூட முடியுமென்று கூறுவார்கள். அதற்கு உதாரணங்களின்மேல் உதாரணம் எடுத்துக்காட்டுவார்கள். எது எப்படியிருந்தாலும் இவர்கள் இம்மாதிரியாக தம்பெண் ஜாதிகளுக்கு குடும்ப விஷயத்தைப்பற்றி யோசனை கூறப்போதும் போதெல்லாம் "முறுமுறுப்பு" ஏற்படுவதற்குக் காரணந்தான் என்னவென்று யோசித்தாலோ இவர் கூறும் 10 யோசனைகளில் 9 7/8 யோசனைகள் சரியாகயிருப்பதில்லை. ஆனால் இவர் யோசனை சரியென்று இவர் நிரூபிப்பதற்கு பேசுகின்ற பேச்சோ ஊரைவளைக்கும்; ஆடுகின்ற ஆட்டமோ சொல்லமுடியாது. மற்ற உப அங்கங்களுக்கும் குறைவிருக்காது. இருந்தும் என்ன பயன்? சில சமயம் இவர் கூறப்புறப்படும் யோசனைகள் யாவுமே பிசகாய்ப் போய் விடுவதுண்டு.

ஆனால் அவர்கள் சச்சரவு எப்படியிருந்தாலும் இருந்து போகட்டும். மனோ தத்வ நிபுணர்கள் இது விஷயமாக என்ன கூறுகிறார்களென்றாலோ பெண்டிர்க்கும் "சரியான மூளை உண்டு" என்கிறார்கள். இது உத்தேசமென்றோ, கிட்டத்தட்ட என்றோ, வேறு சித்தாந்தாந்த மென்றோ, சொல்லிவிடமுடியாது. அவர்கள் நேரடியாக சோதித்துப் பார்த்து ஆராய்ந்தறிந்து கண்டறிந்த உண்மைகளாகும்.

அமெரிக்காவிலே ஒரு கல்லூரியிலுள்ள 115 ஆண்களையும், 111 பெண்களையுங் எடுத்துக்கொண்டு அவர்களுடைய புத்தித் திறமையைப்பற்றி வெகு கவனமாக சோதனை செய்து பார்த்ததில் சராசரியாக பெண்களுக்கும் சரி, ஆண்களுக்கும் சரி சமத்துவமாக 142 மார்க்குகள் கொடுத்தார்களாம். அதைவிடுத்து பல பிரபல்யமான கல்லூரிகளிலுள்ள எல்லோரையும் ஒன்று சேர்த்து மொத்தம் 3175 ஆண்களையும், 1575 பெண்களையும் சோதித்துப்பார்த்ததில் அவர்களுடைய கல்வித்திறமையானது 'ஏ' கிரேடு, 'பி' கிரேடு முதலிய இரண்டுமே சேர்த்து ஆண்களுக்கு 100-க்கு 75.4 மார்க்குகள் என்றும், பெண்களுக்கு 100-க்கு 75.2 மார்க்குகள் என்றும் முடிவிற்கு வந்தார்களாம். அமெரிக்காவில் ஹோர்வார்டு பல்கலைக்கழகமானது சற்றுமேல் தரமான கல்லூரி. இதனுடைய மாணவர்களையும், உயர்தர ராட்கிளிப்பெண் கல்லூரியிலுள்ள மாணவிகளையும் சோதித்து சில மாதங்கள் அவர்களுடைய அறிவுத்திறமையை ஆராய்ந்து பார்த்ததில் ஒரு மாணவனும், ஒரு மாணவியும் மாத்திரம் முதல்தரமானவர்களென்று தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்களுக்கு 86% மார்க்குகள் நிர்ணயிக்கப்பட்டது. ஒரு ஹார்வார்டு மாணவர் எல்லோரையும் விட நிரம்பத்தாழ்ந்ததான 8% மார்க்கு வாங்கினதைப்பற்றி யாவரும் ஆச்சரியப்பட நேர்ந்தது. ஆனால் வெகு குறைந்த மார்க்குகள் வாங்கின பெண்மணிகள் மாத்திரம் 28% மார்க்குக்கு குறையாமல் வாங்கியிருந்தார்கள். பொதுவாக எல்லோரையும் சேர்த்து சராசரி பார்த்தபொழுது மாணவர்களுக்கு 100-க்கு 50.5 ஆகவும், மாணவிகளுக்கு சராசரி 100க்கு 55 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. இதில் பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே அறிவு, திறமை இவைகளில் அதிகமான வித்தியாசங்கள் இருக்கவில்லை என்பது திட்டமாகத் தெரிகிறது. மற்றும் அவரவர்களுக்கு இட்ட வேலைகளில் சிறிதும் ஏற்றத்தாழ்வு கூற முடியாதபடி திறமையாகவே நடத்தக்கூடிய ஆற்றல் உண்டென்று தெரிகிறது,

இப்பொழுது நாம் சாதாரணமாக உலகத்திலேயே உள்ள ஆண், பெண்களையும் எடுத்துக்கொண்டோமானாலும் திறமைசாலிகளான பெண்கள் சராசரியில் சமத்துவமாகவே தோன்றியிருப்பதாகக் கண்டு கொள்ளலாம். ஆண்களுக்குப் பிறகு எவ்வளவோ காலத்திற்குப் பின்னால் பெண்கள் தங்கள் சுதந்திரங்களைப் பெற்றிருந்தாலும் இந்தக்குறுகிய காலத்திற்குள் நல்ல புகழ் பெற்ற ஆசிரியைகளும், நடிகர்க

ஞும், பிரசங்கிகளும், வர்த்தகம் முதலான துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களும், எண்ணிக்கையில் கூடுமானவரையில் விகிதாச்சாரத்திற்குக் குறையாதென்பது திண்ணம். இந்தியாவின் பெண்கள் சுதந்திரமோ வெகு காலமாக தடுக்கப்பட்டிருந்தும் அவர்களிலும் புகழ்பெற்றவர்களும், அறிவிலும், ஆற்றலிலும், ஆண்களோடு சமத்துவமாக வைத்துப் போற்றக்கூடிய இயல்புடையவர்கள் எத்தனையோபேர் இந்த குறுகிய காலத்திற்குள் தோன்றியிருக்கிறார்களென்பதையும் கண்டு கொள்ளலாம்.

இதனால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள சமத்துவமானது ஒரே தனமையிலென்பதாக தவறுதலாகக் கொள்ளக்கூடாது. அவர்கள் ஆண்களுக்குச் சமத்துவமான துணைவர்களே ஒழிய அதாவது தன்மையில் வேறுபட்டாலும் ஒவ்வொருவருக்குமுள்ள திறமையில் அவாவர்கள் சமத்துவமென்று சொல்லவேண்டியிருக்கிறதே ஒழிய ஆண்களைப் போன்ற நகல்கள் என்று கூறுவதல்ல. இருபாலர்களுக்கிடையே அவசியமான வித்தியாசங்கள் உண்டு. அவர்களுடைய மனோபாவத்தில் தெளிவாக வித்தியாசப்படுகிறார்களென்பதாக புரபசர் எட்வர்ட்டி தான்டைட் என்ற மனோதத்துவ சாஸ்திரி கூறுகிறார். பெண்களானவர்கள் பாஷாவித்வத்திலும், சடுதியான ஞாபக சக்தியிலும், கிரகிக்கும் தன்மையையுடையவர்களென்றும், ஆண்களோ சரித்திர ஆராய்ச்சியிலும், உள் உணர்ச்சியிலும், தியேக பலத்திலும், சாயன சாஸ்திரங்களிலும் பெருமையாய் இருப்பதோடு நுணுக்கமான வேலைகளிலும் திறமைசாலிகள் என்றும் கூறுகிறார். ஒவ்வொரு பாலருக்கும் இயற்கையான; இயல்பான குணாகுணங்கள் தனித்தனியாக இருக்கிறதென்பதை உணராமல் ஆண்களுக்குள்ள அறிவுத்திறமையில் பெண்கள் குறைவானவர்கள் என்ற முடிவுக்கு வருவதானது ஒரு பெரிய தவறு. ஒரு பிரபல விஞ்ஞான சாஸ்திரியானவர் விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றி வியாசம் தயாரிக்கும்போதெல்லாம் அடிக்கடி தன்பக்கத்திலுள்ள 13-வயதுடைய மகளை தனக்குச் சந்தேகமாய் இருக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுத்துக்கூட்டுதலைக் கேட்டுக் கொண்டு எழுதுவாராம். இந்தப் பெண் சாதாரணமாகப் பள்ளிமாணவியாயிருந்தும் விஞ்ஞான கலை சம்பந்தமான வார்த்தைகளைக்கூட பிழையில்லாமலும் தயக்கமின்றியும் எழுத்துக் கூட்டிச் சொல்லும் வழக்க முண்டாம். அப்படிச் சொல்லும் பொழுதெல்லாம் அந்தப் பெண் குழந்தையானது தனக்கு

இருக்கும் ஞாபகசக்தி கூட தந்தையாருக்கு இல்லாதிருப்பதைப் பற்றி பெரிதும் வியப்புறுவாளாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும், வீட்டு ஆண்களுக்கு பாட்டனார் திதி எப்பொழுது, அமாவாசை எப்பொழுது, தான் ஊர் போய் வந்தது எப்பொழுது என்பதான வெகு சாதாரணமான விஷயங்களைக்கூட எந்த தேதியிலென்பது கூட ஆண்மக்களுக்கு ஞாபகம் வருவதில்லை. குடும்பத்தில் நடந்த எந்த சந்தர்ப்பங்களைப் பற்றியும் சரியானபடி எந்த தேதியில் நடந்தது என்று சொல்லவும் முடியாது. தன்னுடைய பவுண்டன் பேனாவை எங்காவது வைத்துவிட்டு வீடெல்லாம் தேடித் திரிவார்கள். ஆனால் வீட்டிலுள்ள பெண்களோ எதுவாயிருந்தாலும் மறக்காமல் ஞாபகத்தோடு சொல்வதும் எடுத்துக் கொடுப்பதும், ஞாபகமூட்டுவதும் வெகு சகஜமான தென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். மேனாட்டிலோ தற்சமயம் பெரும்பாலான பெண்கள் தங்கள் பாஷா ஞானத்தின் திறமையை யாவருக்கும் திடுக்கிடும் படியானவிதத்தில் பிரத்தியட்சத்தில் காட்டி வருகின்றார்கள். முற்காலத்தில் எப்படி இருந்தது என்பதை இப்பொழுது நாம் கவனிக்காது விட்டு விட்டே பார்த்தாலும் 100 க்கு 30 பேர்கள் வரையில் உலகத்தில் புகழ் பெற்ற பேராசிரியர்களாய் இருப்பவர்கள் பெண்களென்றே சொல்லவேண்டும். இங்கிலாந்தில் நூல் வல்லார்களெல்லாம் பெண் மணிகளே. பிரான்சில் எத்தனையோ நூலாசிரியர்களும், நடிக நாடகத்தில் பேர் போனவர்களும், அரசியல் நிபுணர்களும் பெண்களாக இருந்திருக்கின்றனர். இத்தாலியிலிருந்தும், ஜர்மனியிலிருந்தும் எவ்வளவோ சங்கீத சாகித்யத்தில் பேர் போனவர்களெல்லாம் தோன்றியிருக்கின்றனர். அமெரிக்காவில் எவ்வளவோ சமூக சீர்திருத்தத்தில் புகழ் பெற்ற பெண்களைக் காணலாம். இன்னும் அநேக தொழில்களிலும் ஈடுபட்டு இருக்கின்றார்களெனினும் சமூக சீர்திருத்தத்தில் முனைந்து நிற்பவர்கள் பெண்கள் தான் அதிகமெனலாம். வர வர அமெரிக்கப் பெண்கள் அரசியல் விஷயத்திலும் புகுந்து யாவருடைய போற்றுதலையும் பெற்றுவருகின்றனர். சமீப காலத்திற்கு முன் தான் விஞ்ஞான சாஸ்திரவழிகளிலும் தங்களுக்குத் திறமையுண்டென்று பெண்கள் அறியத் தொடங்கினார்கள். சென்ற ஜனக்கணிதத்திலிருந்து விஞ்ஞான ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியிலும் முனைந்து நிற்கும் பெண்கள் 10 வருடங்களுக்குள்ளாக இரட்டிப்பாக அதிகரித்திருக்கின்றார்களென்று தெரிகிறது. இப்பொழுது அமெரிக்காவிலோ 10

வருடங்களுக்கு முன் 400 பேர் இருந்தவிடத்தில் இப்பொழுது 3000 பெண்கள் பிளான் வரைவதில் திறமைசாலிகளாகவும், பெண் கல்லூரித் தலைவிகளாகவும் பேராசிரியர்களில 10000 மேற்பட்டவர்களும், 2000 ஜட்ஜுகளும், லாயர்களில் சுமார் 5000 வரையிலும் பெண்கள் இருப்பதாகவும் தெரிகிறது. பாங்கு உத்தியோகத்தில் முக்கிய ஸ்தானங்கள் வகித்து வருபவர்கள் மாத்திரம் 4000-க்கு மேற்பட்டவர்களென்று தெரிகிறது. பெண்கள் டாக்டர்களாகவும், நர்சுகளாகவும், பாதிரிமார்களாகவும் எத்தனையோ 1000 பேர்கள் இருப்பதாகவும் தெரிகிறது. இவற்றை யெல்லாம் கொண்டு நாம் என்ன முடிவிற்கு வரமுடிகிறதென்றால் அவர்களுக்கு எந்த விஷயங்களிலும் ஆண்களைப்போன்ற திறமை உண்டென்றும் ஆனால் அவர்களுக்கு முன்னிருந்த சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு அவர்களுடைய திறமையைக் காட்ட ஓட்டாதபடி செய்ததே ஒழிய அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் அவர்களுடைய போக்கில் நல்ல திறமையைக் காட்டக்கூடுமென்பதாகவே நாம் கருத வேண்டி இருக்கிறது.

ஒரு காலத்தில் ஆண்களுடைய மூளையைவிட பெண்களுடைய மூளை அளவில் சிறியதாக இருந்திருப்பதால் புத்தியில் பெண்கள் குறைந்தவர்கள் என்று கருதப் பட்டது. ஆனால், உடற்கூறு சாஸ்திரிகளும் மனோதத்தவ சாஸ்திரிகளும் மூளையினுடைய அளவில் உள்ள வித்தியாசத்தைக் கொண்டு புத்தியை நிர்ணயிக்க முடியாதென்றும் பெரிய மூளைகளைவிட சிறிய மூளைகளிலேதான் அதிலும் பெண்களுடைய மூளைகளிலே அதிகமான ''பிரைன்செல்கள்'' இருப்பதாகவும், செல்களுடைய எண்ணிக்கைக்கு தகுந்த விதத்திலே தான் புத்தியின் அளவும் இருக்கிறதென்றும், ஆகலால் சாதாரணமாக பெண்களும், ஆண்களும் சமத்துவமான அறிவுபலம் உடையவர்களென்று முடிவுகட்டி இருக்கின்றனர். ஆனால், ஆண்கள் எப்பொழுதும் தங்கள் மனைவிக்கு ''மூளை இல்லை'' யென்று அடிக்கடி வன் சொல்லுகிறார்களென்று யோசித்துப் பார்க்குமிடத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மனப்போக்கும், குணப்போக்கும், உணர்ச்சிப்போக்கும் வித்தியாசப்பட்டு இருப்பதினாலேயே யென்பதை கவனிக்கவேண்டியது. இவற்றை அளவிடுவதற்கு நிபுணர்களாலேயே பெரிதும் கஷ்டமாயிருக்கிறது. அவர்களுக்கு உணர்ச்சியும் உறசாகமும் புத்தி போக்கு, மதாபிமானம், இரக்கம், பொறுமை, கூச்சம், நாணம் முதலிய வைகளான குணங்கள் அதிகமாயிருக்கிற

தென்றும், ஆண்களோ சுயேச்சையிலும், தீவிரத்திலும், உள் உணர்ச்சியிலும், கேலிகளிலும் அதிகமான போக்குடையவர்களாய் இருந்து வருகிறார்கள், இந்த அளவுகூட சரா சரி என்றுதான் கொள்ளவேண்டி இருக்கிறதே ஒழிய தனித் தனியாகவும் கூறமுடியவில்லை. ஏனெனில் சில ஆண்கள் குழந்தைகளிடத்தில் பெண்களைவிட அதிகமான ஆர்வத்தை காண்பிக்கின்றனர். சில பெண்கள் ஆண்களைப்போல திடமும், தீவிரமுள்ளவர்களாகவுமிருக்கிறார்கள். பெண்களானவர்கள் ஒரு ஆசாமியினுடைய தோற்றத்தைக் கொண்டே நிர்ணயிக்க முற்படுகிறார்கள். ஆனால் ஆண்கள் உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்டே தங்கள் அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆண்களானவர்கள் ஒருவர் செய்த காரியத்தைக் கொண்டே அவர்களை மதிக்கின்றார்களே ஒழிய அவர்களுடைய குணாகுணங்களைக் கொண்டோ அந்தரங்க நடவடிக்கைகளைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. மனித ஸ்பாவத்தை சம்பந்தப்பட்டு எந்த விஷயங்களையும் பெண்களுக்கு யூகித்து உணர்வதற்கான நுட்ப அறிவானது ஆண்களைவிட அதிகமாகவே இருக்கிறது. இதற்கு உதாரணமாக:- ஒரு ஆணானவன் எவ்வளவுதான் தன் மனைவியோடு பழகி இருந்தாலும் அவளுடைய குணா குணங்களை சரிவர அறிந்து கொள்வதற்கு சக்தியில்லாமலிருக்க ஒரு மனைவி தான் பழகிய புருஷனின் குணாகுணத்தை சிறு காலத்திற்குள் அவனைப்பற்றி அவனே உணர்ந்திருப்பதை விட அதிகமாக உணர்ந்திருக்கிறாள்.

எவ்வளவு காரணங்கள் இதைப்போல் சொன்னாலும் ஆண்களுக்கு மாத்திரம் பழக்க வாசனையால் ஏற்பட்ட ஒரு அபிப்பிராயமானது திருந்துவதற்கு வெகு நாட்கள் பிடிக்கும்போல் தோன்றுகிறது. இருந்தாலும் இதற்கு முக்கியமான காரணம் குடும்பத்தில் சச்சரவு ஏற்படாமல் சமாதானம் நிலவவேண்டுமென்று பெண்கள் நினைத்துத் தங்கள் ஆண் மக்களுக்கு அடிக்கடி எந்த விஷயத்திலும் விட்டுக்கொடுத்து விடுவதினாலேயே பெண்களைப்பற்றி சர்வ சாதாரணமாக சமத்துவமில்லாதவர்களென்று எண்ணம்தோன்றுவதற்குஇடமாயிருக்கிறது. மேலும் அவர்கள் சுதந்திரத்தோடு தங்களுடைய சுய சம்பாத்திய முயற்சியினால் வாழ்ந்து காட்டவேண்டுவதும் அவசியமாயிருக்கிறது. பெண்கள் தங்கள் ஜீவனத்திற்கு ஆண்களை எப்பொழுதும் எதிர்பார்த்து நிற்பதானது அவர்களை ஆண்களுக்கு சமத்துவமானவர்களாய் செய்ய முடியாமலிருக்கிறது. பெண்கள் அறிவுத்திறமையில்

சாதிவரலாற்றுண்மை.

(எஸ். கரசிம்மம்)

ஆண் பெண் என்னும் இருசாதி யொழிய இயற்கை யமைப்பில் வேறு சாதியில்லை என்பது வெளிப்படை. ஔவைப்பிராட்டியார் "இட்டார் பெரியார்; இடாதார் இழி குலத்தார்" என்ற இருவகைச் சாதியே உளவென்பர். சார் லஸ்லார்பு என்பவரும் "கடன் கொண்டார், கொடுத்தார்" என்றே சாதியை வகுத்தனர். பூர்வத்தமிழ் நாட்டில் எண் வகுப்பினர் இருந்தனரென்று விளங்குகின்றது. கலித்தொகை சிந்தாமணியில் கூறியபடி, அறிவர், உழவர், ஆயர், வேடர், கண்ணாளர், படையாட்சியார், வலையர், புலையர், இவரே எண்மராவர். அறிவர் திரிகாலத்தையும் அறிவர். இவர் நகரத்துக்கப்புறம் வசித்தனர். விசேட காலங்களில் இத்துறவி கள் நகருட் புகுந்து கிரியைகள் செய்தனர். நாட்டில் வசித் தோரில் தலைவராவர் உழவர்; இவர் இருவகுப்பினர்; வெள் ளத்தைத் தடுத்து அதனைக் கழனிக்கு உபயோகப்படுத்திய வர் வெள்ளாளர். கார்மேகத்தை எதிர்பார்த்து வேளாண் மை செய்தவர் காராளர். இவர்களே பூபாலர். காட்டுமிரு கங்களை வேட்டையாடுபவர் வேடர். கால்நடைகளைப் பாதுகாத்து உழவுத்தொழிலுக்கு உபகரித்தோர் ஆயர். கொல்லன், தச்சன், கன்னான், தட்டான், ஆகிய அறுவகைக் கைத்தொழிலாளரும் கண்ணாளராவர். உளர் காவல் செய்து

சமத்துவமானவர்களாயினும் புத்திபோக்கில் மாத்திரம் மாறு பட்டவர்களாய் இருக்கிறார்களாதலால் அவர்கள் இருவரும் சமத்துவமானவர்களென்பதோடு இவர்கள் இவருடைய குணாகுணங்களும் ஒத்து நின்று ஒரு காரியம் கடத்துவதா லேலே வாழ்க்கையும இன்பமும் ஏற்பட முடியுமென்பதையும் நிண்ணமாய் உணரவேண்டும்.

பகைவரைப் புறத்தோட்டும் படையினரே படையாட்சியர். வலை செய்து மீன்களை வலைப்படுத்துவோர் வலையர். இழி தொழிற்செய்குநர் புலையர். இவ்வெண்வகையாரும் தொழிற் பேதத்தால் வித்தியாசப் பட்டனரேயன்றி வேறு வழியில் உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் ஆயினரல்லர். கிருஷித்தொழி லில் கருத்துக் கொண்டவர் உழவரானார். இங்ஙனமே கல் லாது கைவேலை செய்து உய்ந்தனர் பலவகையார். இவர் களுக்குள் சாதி வித்தியாசங்கிடையாது கபிலரகவலும் ஜென் மத்தாலன்றிக் கருமத்தால் வந்ததே சாதியாகும் என்று கூறு கின்றது. அதாவது:—

"பார்ப்பனமாக்தர்காள் பகர்வது கேண்மின்
நால்வகைச்சாதியிற் நாட்டினீர் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை விளங்குவதொழுக்கால்"
"ஆணும் பெண்ணுமல்லதை யுணர்ந்து
பேணியுரைப்பது பிழையெனப்படாது
சிறப்புஞ்சீலமுமல்லது, பிறப்புகலந்தருமோ
பேதையீரே"

வள்ளுவர் வாசுகியை மணந்தனர். வெள்ளாட்டி, வள் ளுவர் பள்பறையாயிருத்தல் வேண்டும். இவரைக்கல்வி சிறக் கச்செய்தது. பக்தி விசேடத்தால் பெருமைபெற்றுப் பூசிக் கப்படுபவர் நந்தனார், நந்தியில்லாக்கோவிலில்லை. நாயன் மார்களிலனேகர் பல வகுப்பினர். பிராமணரான சுந்தரர் பரையர் சங்கிலியரென்ற இழிகுலப் பெண்களை மணந்த னர். வெள்ளாளராகிய அப்பர் உயர்குலப்பிராமணராகிய அப்பூதி நாயனாரின் வேண்டுகோளுக் கிணங்கி அவருடனும் அவர் மனைவி பிள்ளை களுடனும் கூடவிருந்து விருந்தருந்தினர். அறுநூற்றாண்டு கட்கு முன்னர் சைவசித்தாந்தத் தலைவராயிருந்த மெய் கண்ட தேவரென்னும் வெள்ளாளரடிபணிந்து சாத்திரங் கற்றனர். அருணந்தி சிவாசாரியரென்ற பிராமணர் அவர் வழியிற்றோன்றிய மறைஞானசம்பந்தரிடங் கற்றவர்

உமாபதிசிவாசாரியார். இவர் குருவின் எச்சிலையுமுண்டு வந்தனர் என்பது பழங்கதை. இவ்வுதாரணங்களால் பல வகுப்பினரும் தம்முள் வித்தியாசமன்னியில் உண்டு வளர்ந்து வந்தனரென்பது வெளியாகின்றது. முற்கூறியபடி மேல், கீழ் என்பனவு கல்வி, பக்தி இவற்றின் மிகுதியாலும் குறைவாலும் ஏற்பட்டன.

"சேற்றிற் பிறந்த" செங்கழுநீர் போலப்
பிரமற்குக் கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த
சத்தியரும்
சத்தியர்க்குப் புலைச்சி தோள் சேர்ந்து
பிறந்த பாசரும்
பாசருக்கு மீன் வாணிச்சி வயிற்றிற் பிறந்த
வியாசரும்
வேதங்களோதி மேம்பட்டு மாதவராகி
வயங்கினரன்றோ"

தற்காலத்தில் வழங்கிவரும் சாதிகள் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்னும் நான்கே. இவர்கள் நான்கு வருணத்தவரெனப்படுவர். வருணம் என்றால் நிறம். இது அகம்புறமென இருவகைப்படும். அகவருணம் கல்வி, ஞானச் சிறப்பு. புறவருணம் வெண்மை கருமையாகிய நிறம். அகத்திலிருந்து தியானஞ் செய்வோர் நன்னிற முடையார். வெளியேபோய் வெயிலிலும் மழை பனிகளிலும் அடிபட்டவர் நிறங்குன்றிக் கருமை எய்தினர். புத்தியைப் பண்படுத்தாமல் புயத்தைப் பண்படுத்தினர் க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரே. இவர்கள் அயலாரின் மேல் படையெடுத்துப் பிடித்தும் அயலாரில் வாணியஞ் செய்தும், தம்மூரிலும் பிறவூரிலும் இருஷி முதலான கைத்தொழில் செய்தும் வாழ்ந்தனராதலின் இவர்கள் நிறத்தில் சிறந்து விளங்கினரல்லர். அறிவு, தொழில் பற்றியே இந்நான்கு வருணத்தாரும் பிரம்மாவின் பற்பல பாகங்களினின்றும் உற்பத்தியாயினர் என்றனர். இந்நான்கு வருணங்களும் புதுக்குடிவந்த ஆரியர் வகுத்தனவே.

தமிழருக்கு இ வை யு டன் பாடாகா. முற்காலத்திலேயே தமிழ்நாட்டிலுள்ள எண் வகுப்பாரையும் ஆரியர் தாமியற்றிய நான்கு வருணங்களுள் தமக்குத் தோன்றியவாறு அடக்கினர். தொல்காப்பியத்தில் அறிவர் முதலிய சில வகுப்பினர் பெயரைக்காணலாம். ஆனால் மரபு முறையில் இவர் பெயர்கள் காண்கில் நான்கு வருணத்தார் மட்டுமே ஜொலிக்கின்றனர்.

முதல் முதலில் ஆரியர் வகுத்த நான்கு வருணத்தாரும் கூறியவண்ணம் சாதி வித்தியாசம் பாராமல் உண்டு மணந்து களித்தனர். பார்ப்பாருடைய நிலை அதிகேவலமாயிருந்தது. முன்காலத்தில் பார்ப்பார், அந்தணர் என்ற பெயர்கள் அறிவிலுங்குணத்திலுஞ் சிறந்தோருக்கே வழங்கி வந்தன. பின்னர் அவை பிராமணர்க்கு அமைந்தன! "அந்தணென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்றார் வள்ளுவரும். அன்றியும் பார்ப்பாரைப்பற்றிய பழமொழியொன்று உலாவுகின்றது "பார்ப்பானுக்கு மூப்பன் பறையன், கேட்பாரின்றிக் கீழ்ச் சாதியானாலே" பன் பறை மட்டுமே பிராமணக் குருக்களை வைத்துக் கொள்ள இணங்கிலர். கற்றறிந்த வள்ளுவரைத் தங்குருக்களாய்க் கொண்டனர். பிராமணருக்குத் தென்னிந்தியாவில் அதிகாரம் கிடைத்தது. சித்திர் இராஜ புத்திரராகத் தோன்றிய காலத்தொட்டே இராஜபுத்திரருக்குத் துணைவராய்த் தாது சென்று பன்னாடுகளைப்பிடிக்க காரணபூதராயிருந்தவர் பிராமணராதலால் அவர்கட்கு இராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் கிடைத்தன. பின்னர் இராஜமந்திரிகளாய்த் தங்கள் பாஷையாகிய சமஸ்கிருதத்தை மேன்மைப்படுத்தினர். ஆரியர் செழித்த காலத்தில் தமிழ் வேந்தர் வலிகுன்றினர்.

பிராமணர் தாம் தெய்வத்தன்மையுடையாரென்றும் மற்றவர் இழிஞரென்றும் கர்வங்கொண்டனர். பிறவகுப்பினரைத் தொட்டாலும் தீட்டுண்டாம் என்றனர். எவ்வளவு மோசடியான தன்மை பூண்டொழுகினர் பார்ப்பனமக்கள்.

இம்மட்டோடு நில்லாமல் துராத்மாவாகிய ஆரியர்கள் கம்முடைய ஆலயங்களின் பூஜா விஷயத்திலும் தலையிட்டு சைவக்குருக்களை வெளியாக்கினர். சிவாலயங்களில் பட்டர்கள் ஆதியிற் சைவக்குருக்களே. ஆரியர் மெள்ள மெள்ள கோயிலிற் புகுந்தனர். காசுக்கும் தம்பிடிக்கும் வேதமோதத்

தலைபபட்டுப் பின் தமிழ்க்குருக்களின் தொழிலை அபகரித்தனர்.

"கரையான் புற்றெடுக்கப் பரப்பு குடி கொண்டது" என்ற முது மொழிக்கு பிராமணர் இலக்காயினர். அன்றியும் மேற்றிசை ஆரியர்களென்ற காமங்கொண்டு நமது தேசத்தையாண்டு வரும் ஐரோப்பியர் காலத்திலும் பிராமணர் படிப்பிற் சிறந்து உன்னத பதவிகளில் அமைந்தனர். தற்காலத்தில் பிராமணர்கள் செய்யாத வேலை ஒன்றுமில்லை. காசு கிடைத்தால் மானத்தையும் விற்பார்கள். முன் காலத்தில் சீமைக்குப் போய்வந்த பிராம்மணனை சாதியிற் சேர்ப்பதில்லையாம். கோகலே ஹால் வீரர் திரு. தண்டபாணி பிள்ளை அவர்கள் கூறிய பிரகாரம் மூட்டைப் பூச்சிகளாகிய இப் பிராமணர்கள் நம் இரத்தத்தைக் குடித்துக்கொணடே வருகின்றபடியால் அவர்களை முதலில் நசுக்கி பிறகு கொசுவாகிய அரசாங்கத்தைப் பற்றிக் கவனிக்கலாம்.

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

பாரதிதாஸன் கவிதைகள்

200 பக்கங்கள்! மிக அழகான பதிப்பு!!

விலை அணா எட்டு.

10 அணா மணியார்டர் அனுப்பினால் ஒரு புத்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

ரூ. 5—0—0 மணியார்டர் அனுப்பினால் தபால் செலவின்றி 10 புத்தகங்கள் அனுப்பப்படும்.

வி. பி. கிடையாது. ஸ்டாம்புகள் அனுப்பக்கூடாது.

வெளிநாட்டு அன்பர்கள் புத்தக விலையுடன் தபால் செலவும் சேர்த்து மணிபார்டர் அனுப்ப வேண்டும்.

கிடைக்குமிடம்:—"குடி அரசு" பதிப்பகம்,

ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)⇌(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிரசுரதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,,	0 5 0

Hon பெர்ட்ரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...		,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ...	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன்? ...	...	,,	0 3 0
வால்டேர் ...	...	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு ...	...	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்		0 6 0
,,	2-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு ரத்தத்தோலிக்க குருவின் மரணசாசனம்			0 4 0
,,	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும், மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (''ஞான்காம் பதிப்பு'') ...		,,	0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு

தபாற் பிரிவு வெளியீடுகள்.

1.	இந்தியாவின் முத்திரைகள் (160 படங்கள்)	0	8 0
2.	வெளி நாடு, ரூ. நூல்	0	4 0
3.	தபாற்குடையைத் தாங்கியவர்கள் —		
4.	கடற்கரை, இடைநாடு	0	4 0
5.	இமயமலைச் சாரல் இயற்கைக்காட்சி	0	1 0
6.	இயற்கை அழகுள்ள பிரதேசங்கள்	0	4 0
7.	,, ஆசிய நாடுகள் (20 படங்கள்)	0	8 0
8.	,, ஐரோப்பா	0	4 0
9.	,, வடக்கு அமெரிக்கா	0	4 0
10.	தபால் நிலையம் செல்லும் பிரயாணம்	0	5 0
11.	சித்திரக் குறிப்புகள்	0	3 0
12.	பிரயாண ஞாபகம்	0	3 0
13.	பிறநாட்டு அஞ்சல் இலாகாக்கள்	0	4 0
14.	சித்திரக்கதை (ஆ. ஓர். ஆ.)	0	2 0
15.	அந்தரப் பிரதேசம்	0	2 0
16.	இராஜாங்க அரசியல் பிரிவுகள்	0	2 0
17.	ஆங்கிலேயர்	0	2 0
18.	சுதந்திர அபிவிருத்தி (இரண்டு)	0	2 0
19.	பிரயாணிகள் பிரயாணம்	0	1 0
20.	சித்திரக்கதை	0	2 0
21.	பிரயாணக் குறிப்பு	0	1 0
22.	ரு. அஞ்சல் இலாகாக்கள்	0	0 9
23.	[illegible]	1	0 0
24.	[illegible]	0	4 0
25.	[illegible]	0	2 0
26.	[illegible]	0	3 0
27.	[illegible]	0	4 0
28.	[illegible]	0	3 0
29.	[illegible]	0	6 0
30.	[illegible]	0	6 0
31.	[illegible]	0	6 0
32.	[illegible]	0	4 0
33.	[illegible]	0	2 0
34.	[illegible]	0	4 0
35.	[illegible]	0	5 0
36.	[illegible]	0	4 0

[illegible]

Edited Printed and Published by [illegible]

Press, Madras.